DISCOURSE

ON

"The Ethics of Married Life."

2/10
4·13

By Mrs. JAGANATHA IYER.

As Delivered before

"THE HINDU FEMALES UNION CLUB"

PATTUKOTTAI.

இல்லற ஒழுக்கம்.

முதல் பதிப்பு.

PATTUKOTTAI:

PRINTED AT THE SRI "NADIYAMMAN" PRESS.

1913.

விலை அணா 8. Price 8 as.

DISCOURSES

ON

"The Ethics of Married Life."

210

MADRAS

By Mrs. JAGANATHA IYER.

As Delivered before

"THE HINDU FEMALES UNION CLUB"

PATTUKOTTAI.

இல்லற ஒழுக்கம்.

முதல் பதிப்பு.

PATTUKOTTAI:

PRINTED AT THE SRI "NADIYAMMAN" PRESS.

1913.

விலை அணா 8. Price 8 as.

முகவுரை.

நம்முடைய தேசத்து பெண்கள் நன்றாய் கல்வி கற்று குடித்தனமுறையை திருத்திக்கொள்ளவும் பிள்ளைகளுக்கு நன்றாய் சன்மார்க்கம் போதித்து தங்களுக்கு கீழ்ப்படியும்படி வளர்க்கவும் மேலும் பெண்களுக்கு பலநன்மைகளையும் பொதுவாக சுகாதார முறைகளையும் சேர்த்து வியாசங்களாக எழுதி நம்முடைய சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் சகோதரிகளுக்கும் பிரயோஜனமாகும்படி அச்சிட்டிருக்கிறபடியால் கல்வியின் சுவையை நன்றாய் அறிந்த நம் சகோதரி இதை வாசிக்கும்பொழுது தங்களுடைய புத்தியினுல் சரியாய் சீர்தூக்கி குணத்தைக் கொண்டு சூற்றத்தைத் தள்ளிப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதே எனது கோரிக்கை. தேனீக்கள் பலபுஷ்பங்களிலிருந்து துளிதுளியாய் தேன் சேர்த்து உலகத்துக்கு உபகாரம் செய்கிறதைப்பார்த்து அறிவில்லாத நான் உலகத்துக்கு உபகாரம் செய்யத் துணிந்து எல்லாவற்றிலும் கொஞ்சம் சேர்த்து வியாச ரூபங்களாய் அச்சிட்டிருக்கிறேன். நம் தேசத்து சகோதரிகள் சந்தோஷமாய்ப் படித்து ஆனந்திப்பார்களென்று நம்புகிறேன்.

M.

பொருள் அட்டவணை.

		பக்கம்.
1.	குடித்தனமுறை	1
2.	ஹிந்து ஸ்திரீகள் யார்?	7
3.	குழந்தைகளின் வளர்ப்பு	10
4.	பெண்களுக்கு கல்வி அவசியம் ...	15
5.	கற்பே மேலான பூஷணம்	23
6.	ஹிந்து ஸ்திரீகளின் சனாதன தர்மம் ...	31
7.	தெய்வபக்தி அவசியம்	34
8.	பால்ய விவாகம் சரியானதா? ...	41
9.	விதவா விவாகம்	48
10.	ஒற்றுமை வேண்டும்	50
11.	பாலர் போதனை	59
12.	சுகாதாரம்	69
13.	ஜாதி பேதகம்	79
14.	தேகாப்பியாசம்	86
15.	முடிவுரை	96

ERRATUM.

பக்கம்.	வரி.	பிழை.		திருத்தம்.
5	16	நன்ரூய்.	—	நன்ரூயும்.
6	5	துலைத்து.	—	தொலைத்து.
10	11	படிப்பது.	—	படித்து.
16	26	இடஞ்சல்.	—	இடைஞ்சல்.
17	18	இடையூரி.	—	இடையூறி.
32	6	சாமதான.	—	சாவதான.
37	15	விஷயயம்.	—	விஷயம்.
40	8	அவர்.	—	அவற்றை.
41	...	எப்படி—கூடாது		*Nil.*
47	5	நல்லவான்.	—	நல்லவரன்.
64	6	ரூபமாய் வந்து.	—	ரூபமாய்.

11 OCT 1913
MADRAS.

ஸ்ரீ ராமஜெயம்.

குடித்தனமுறை.

என் பிரியமுள்ள சகோதரிகளே! ஹிந்து ஸ்திரீகளின் ஐக்யமாஜம் என்னும் இந்த சபை எதற்காக ஸ்தாபித்திருக்கிறதென்றால் ஸ்திரீகளின் ஒற்றுமை, கல்வியபிவிருத்தி, குழந்தைகளை வளர்க்கும் முறை, கற்பு, சுகாதாரம், குடித்தன முறை இவற்றையெல்லாம் வீருத்தியாக்கவும், மேலும் பெண்கள் அதிக வருஷம் பள்ளிக்கூடத்தில் படிக்கும்படி முயற்சி செய்யவும், பால்ய விவாகம் தடுக்கவும், நல்ல சன்மார்க்க புஸ்தகங்களைப்படித்து சீர்திருத்தவும் தினசரி பத்திரிகை வரவழைத்துப் படித்து உலக வியவகாரம் நன்றாய்த் தெரிந்து கொள்ளவும், நம் தேச முழுவதிலும் ஸ்திரீ சங்கங்கள் ஸ்தாபித்து வீருத்தியடையவும், சாத்தியமான வரையில் நாமும் பிரயாசை எடுத்துக்கொள்ளவும், நம் சகோதரிகளையும் பிரயாசை எடுத்துக்கொள்ளத் தூண்டவும் இந்த சபை ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. ஆதலால் இன்றையதினம் குடித்தன முறையைப்பற்றி ஓர் உபந்யாசம் செய்ய விரும்புகிறேன்.

புராதனமான இவ்விந்துதேசத்தின்கண் கண்மணிபோலும் உற்பத்தியான பெண்மணிகளே, பூர்வம் இந்து ஸ்திரீகள் வெகு நாகரீகமாகவும் கல்வி கற்றவர்களாகவுமிருந்ததால் தேசமும் ஜனங்களும் மிகவும் மேன்மையாய் வாழ்ந்தார்களென்று நம் முன்னோர் சொல்லக் கேள்விப்படுகிறோம். மத்தியகாலத்தில் பெண்களுக்குக் கல்வி இல்லாமல் அந்தகாரப்பட்ட மனதுடன் வாழ்ந்தார்களென்பதும் மெய்யே. பேதமையும் அறியாமையும் குடிகொண்டிருப்பதால் பெண்களுக்கு விசாலமான

அறிவு எப்படி உண்டாகும்? உண்டாகாது. ஆதலால் அக்ஷியர் பழிக்கும் படிக்கும் கேலி செய்யவும் இந்த ஸ்திரீகள் சத்த மூடர்களென்றும் பலவிதமாய் சொல்லக்கேள்விப்படுகிறோம். தற்காலம் பெண்களுக்குக் கல்வி விருத்தியாய்க்கொண்டு வருவது சந்தோஷமேயானாலும் இன்னும் ஜாஸ்தி படிப்பும் சீர்திருத்தமும் அவசியம் வேண்டுமென்று யாவரும் நினைக்கிறார்கள். அது சரியே.

முக்கியமாய்ப் படித்த பெண்கள் வீட்டு வேலை செய்யச் சோம்பலுள்ளவர்களாயிருக்கிறார்கள். அதலால் இரண்டு இடையூறுண்டாகின்றது. என்னவென்றால் முதலாவது குடித்தனமுறை சீர்கேடாயிருப்பது. இரண்டாவது நமது வயது சென்ற சகோதரிகள் படித்த பெண்கள் வீட்டுவேலை கவனிக்க மாட்டார்களென்று நம்மை தூஷிப்பது. மேலும் அதிகமாக படிக்கவிடாமல் தொந்தரவு செய்கிறார்கள். ஆதலால்நாம் குடித்தன காரியங்களை கவனமாய்ப் பார்க்கவேண்டும்.

அது நமது கடமை. "குடித்தனமோ துரைத்தனமோ" என்று நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். குடித்தனமும் துரைத்தனமும் எப்படி சரியாய்ச் சொல்லலாம் என்று நினைக்கக்கூடும். சகோதரிகளே உங்களுக்கு விளங்கும்படியாய்ச் சொல்லுகிறேன். துரைத்தனத்திற்கு அரசன் எப்படி உயர்ந்தவனோ அப்படியே குடும்பத்திலும் அந்த வீட்டு எஜமானன் உயர்ந்தவன். இது யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம் அரசனுக்கு மந்திரி இல்லாமல் ஒரு காரியமும். எப்படி முடிவேறுதோ அப்படியே குடும்பத்திலுள்ள எஜமானனுக்கும் ஒரு துணைவி இல்லாமல் யாதொரு வேலையும் முடிவேறாமாட்டாது. ஆதலால் அவனுக்கு அவசியம் ஒரு துணைவி வேண்டும். "இல்லற மல்லது நல்லறமன்று" என்று நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் குடித்

தனமென்பது இலேசான காரியமல்லவென்றும் துரைத்தன
த்தைப்போலவே அதிக அக்கரையுடன் கவனிக்கவேண்டு
மென்றும் இப்பொழுது விளங்குகிறதல்லவா? துரைத்தனத்
தில் தகுந்த சட்ட திட்டங்கள் ஏற்பட்டிருப்பது போலவே
குடித்தனத்திலும் சில சட்டதிட்டங்கள் நன்றாய் யோசனை
செய்து ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். தகுந்த சட்டங்களும்
முடிவான நிர்மானமும் இல்லாவிட்டால் காரியம் சித்திபெற
மாட்டாது. குடித்தனத்தில் வேலைகள் சிறந்திருக்க வேண்டு
மானால் நாம் அவசியம் சட்டங்கள் ஏற்படுத்திக் கொள்ள
வேண்டும். ஆதலால் சில நிர்மானங்களும் சட்டங்களும் வே
ண்டியிருப்பதால், சிலதைப் பின் வருமாறு சொல்லுகிறேன்.

வரவுக்குத் தகுந்த செலவு.—இது முக்கியமான விஷயம்.
பாரி குடும்பத்திற்கும் அத்தஸ்துள்ள குடும்பத்திற்கும், தகுந்த
படி கண்டிப்பாயும் வரையறைவாயும் இவ்வளவுதான் செலவு
செய்கிறது என்று நிர்மானம் செய்துகொள்ளவேண்டும். விரு
த்தாளிகளுக்கும் எதிர்பாராத சில சம்பவங்களுக்கும் கொஞ்சம்
பணத்தை எடுத்துவைத்து பாக்கிப் பணம் இருந்தால் பாங்கி
யில் போட்டுவைக்கலாம் அல்லது பூமி வாங்கலாம்.

காலையில் எழுந்தவுடன் இவ்வளவு வேலை இத்தனை மணி
நேரத்தில் செய்யவேண்டும் என்று நிர்மானித்துக் கொள்ள
வேண்டும். பகலிலும் அப்படியே நிர்மானம் செய்யவேண்டும்.
போஜனத்திற்கு பிற்பாடு இளைப்பாறல், தையல், பாட்டு,
படிப்பு முறையே இத்தனை மணி நேரமென்று கணக்கு வைத்
துக்கொண்டு அப்படியே செய்யவேண்டும். குறித்த நேரத்
தில் வேலைகளை முடித்துவிடவேண்டும். இந்தவிதமாக வேலை
கள் செய்துவந்தால் ஜாஸ்தி வேலைகள் இருந்தாலும் வெகு
சுலபமாய்த்தோன்றும். யாதொரு கஷ்டமுமிருக்கமாட்டாது.

வீட்டு சாமான்கள் இன்ன இன்ன இடத்தில் வைக்க வேண்டுமென்று முதலில் தீர்மானம் செய்துகொள்ளவேண்டும். பிற்பாடு சோம்பலில்லாமல் சாமான்களை அந்தந்த இடத்தில் வைக்கவேண்டும். இதுவும் முக்கியமான சீர்திருத்தம் இப்பொழுது படித்த பெண்கள் குடும்பத்தில் எவ்வளவோ வேலைகள் செய்யும்படி ஏற்பட்டிருக்கிறதென்று விளங்குகிறது இதெல்லாம் துரைத்தனத்தில் புருஷன் எப்படிப் படித்தவனுயிருந்து வேலை செய்கிறானோ அப்படியே குடித்தனத்திலும் படித்த பெண்கள் நன்றாய் வேலை செய்யவேண்டும். இதற்கு புருஷர்களைப்போல அவ்வளவு உயர்ந்த படிப்பும் பரீட்சையும் வேண்டியதில்லை. சுதேச பாஷையும் கணக்கும் அவசியம் வேண்டும். அநேக குடும்பங்களில் படிக்காத பெண்களினுல் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் அடைந்திருக்கின்றதை கணக்குச் சொல்ல முடியாத காரியமென்று நினைக்கிறேன்.

ஸ்திரீ புருஷர்கள் ஒருவருக்கொருவர் கபடவஞ்சகமில்லாமல் சத்தியமாய் வசனிக்கவேண்டுமென்பது அவசியம். மேலும் பண விஷயத்தில் ஒருவரிடத்தில் ஒருவர் பொய் பேசவதும் அனாவசியமான சாமான்களையும் தானிகளையும் வாங்க வேண்டுமென்று பிடிவாதம் செய்வதும் இதெல்லாம் சத்தப்பிசகென்று எண்ணித் தள்ளிவிடவேண்டும். விவாகத்தைவிட பெரிய காரியம் இருப்பதாக தெரியவில்லை. ஸ்திரீ புருஷர்களுக்குச் சற்காலம்கூட ஒற்றுமை குறைவாயிருக்கிறதென்று நினைக்கிறேன். புருஷன் மனைவி இரண்டு பேரையும் குடும்பமான வண்டிக்கு பூட்டிய இரண்டு குதிரைகளுக்குச் சமானமாய்ச் சொல்லலாம். பிற்பாடு இருவரும் குடும்பமான வண்டியை ஒருமனப்பட்டு இழுக்கவேண்டும். அப்படிக்கிழுக்காவிட்டால் குடும்பம் முன்னுக்கு வராமட்டாதென்பதை அறியவேண்டும். எனென்றால் இரண்டு குதிரையும் ஒருமனப்பட்டு இழுக்காவிட்டால் குடும்பமென்னும்

வண்டியிலிருக்கிற மனிதர்கள் பள்ளத்தில் விழுவதுபோல விழுந்து நஷ்டமடைவார்களென்பதற்கு சந்தேகமே இல்லை. வண்டிக்கும் குதிரைக்கும் குறித்த இடம் இருப்பதுபோலவே குடும்பத்திற்கும் குறித்த இடம் இருக்கிறதென்றே நினைக்கிறேன். அந்தக்குதிரைகள் போய்ச்சேரவேண்டிய இடம் பரமபதந்தான் என்று நினைத்துக்கொள்ள வேண்டும். அதற்குப் போக சன்மார்க்கமென்னும் ஒழுங்கான பாதை இருக்கிறது. இந்த ஒழுங்கான பாதையினுல் மேற்சொன்ன ஸ்திரீ புருஷர்கள் இருவரும் கடந்துபோகவேண்டும். ஆதலால் சகோதரிகளே! ஸ்திரீ புருஷர்கள் ஒற்றுமையாயிருந்தால் இகலோகத்திலும் சுகப்பட்டு முடிவில்லாத பரலோக சுகத்தையும் அடையலாம் என்பதற்கு ஆக்ஷேபனே என்ன?

படித்தவளும் புத்திசாலியாயிருப்பவளும் குடும்பத்தை நடத்த யோக்கியமுள்ளவள் என்று உணர்ந்து போதுமான சுதந்திரங்கள் கொடுக்கவேண்டும். இப்படி உண்மையாயிருப்பவளினுல் குடித்தனம் நன்றாய் திருத்தமாயுமிருக்கும். மேலும் சாவகாசமுள்ள நேரத்தில் கணக்கு எழுதவும் கிழிந்த வஸ்திரம் தைக்கவும் அழுக்குத்துணிகளைச் சேர்த்துக் கணக்கெழுதி வண்ணானுக்குப் போடவும் படித்தவளே யோக்கியமானவள். வேலைக்காரர் சரியாய் வேலை செய்கிறார்களென்பதைக் கவனிக்கவும் சரியானபடி வேலைக்காரரிடத்தில் வேலைவாங்கவும், தன் பிள்ளைகளை சரியான மார்க்கத்தில் நன்றாய் வளர்க்கவும், சன்மார்க்கம் போதிக்கவும், வியாதிவராமல் காக்கவும், படித்தவளே யோக்கியமானவள். குடும்பத்தில் பகுபாதமில்லாமல் நடுநிலையிலிருந்து ஆளவேண்டும். மக்கவாதத்தில் பக்கவாதமென்று சொல்லும்படியாய் நடக்கக்கூடாது. எத்தனையோ மடங்கு பெரிதாயுள்ள தேசங்களை ஆங்கிலேயர்கள் அடக்கி ஆளுகிறார்கள். நமக்கு சிறு குடும்பத்தை ஆளவும் நாலு வேலைக்காரர் இருந்தால் சரியானபடி வேலை வாங்க

வும், அடக்கி ஆளவும், பின்னேயும் அடக்கி ஆளவும், தெரிய வில்லே என்பதை யினைக்கும்தோறும் வெட்கமும் துக்கமும் உண்டாகிறதென்பதற்கு சந்தேகமில்லே.

சகோதரிகளே! பெண்களால் குடும்பத்தில் பெரிய சண்டைகள் வரும் என்று சொல்லுவதை இன்றோடு தூலேத் தூவிட்டு நாம் சுகமாகவும், பழிச்சொல் இல்லாமலும், காலம் கழிக்க, ஒருவகை சக்கிரம் தேடிக்கொள்ளவேண்டும் மேல் நாட்டு ஸ்திரீகளும் குடித்தன வேலேயில் தன்முய் பழகியிருக் கிறார்கள். நாமும் குடித்தனவேலேயில் கூடியவரையில் தன் முய்ப் பழகியிருந்தாலும்கூட அந்த வேலேகளேயே கொஞ்சம் நாகரீகமாய் சீர் திருத்திக்கொள்ள வேண்டு மென்பதே இந்த குடித்தனமுறையின் கருத்து. நம் முன்னோர்கள் சொன்ன ஒரு பழமொழி ஒன்று என் ஞாபகத்திற்கு வருகிறது. 'ஒத்து வாழாக்குடி ஒருநாளும் விடியாது' என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆதலால் ஒத்துவாழ்வதே மேலான வாழ்வு என்பதை மறக்காமலிருக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகி றேன். சகோதரிகளே, குடித்தனத்தில் அன்புள்ள ஒருவன் தனக்கு துணேவியாயிருக்க ஒவ்வொரு புருஷனும் ஆசைப்படு வான். ஆதலால் கொண்டவனே கனம் செய்யும் பொருட் டாவது, தர்க்குணங்களேவிட்டு நல்ல குணம் அடைந்து சந் தோஷமாகவும் அன்பாகவும் வாழவேண்டும். அன்பாயிருக் கிறதனுல் இவளுடைய அன்புதான் அவனுக்கு ஆறுதலுண் டாக்கும். எத்தனே பெரிய உத்தியோகங்கள் வகித்து சேர்த்தி யுடனிருந்தாலும் பணக்காரனுயிருந்தாலும் அன்பில்லாதவ ளால் குடித்தனம் நாசமடையும். ஆதலால் சகோதரிகளே சாத்தியமான வரையில் குடித்தனத்தை சீர்திருத்தி முன்னு க்கு கொண்டுவாருங்கள். கூடுமானவரையில் சன்மார்க்கமாய் நடவுங்கள். தங்களுமைக் குமாரத்திகளே தன்முய் குடித்தன வேலேக்குத்தகுந்தபடி பழக்குவுங்கள். இத்துடன் இந்தஉபன்யா

சத்தை சிறுத்துகிறேன். இந்துஸ்திரீகள் யாரென்று நம் சபையில் சில சகோதரிகள் கேட்டார்கள். ஆதலால் அடுத்த இக் கட்டுரையை ஹிந்து ஸ்திரீகள் யாரென்பதை குறித்து ஒரு உபந்யாசம்செய்ய நினைத்திருக்கிறேன். சகோதரிகளனைவரும் வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

2. ஹிந்துஸ்திரீகள் யார்?

ஆரிய சகோதரிகளே, போன கிழமையில் கூடிய சமாஜத்தில் சில சகோதரிகள் ஹிந்து ஸ்திரீகள் யாரென்றுகேட்டார்களென்று சொன்னேன். ஹிந்து ஸ்திரீகள் இன்னுரென்பதை அறியாமலிருப்பது ஆச்சரியமல்ல என்று நினைக்கிறேன். ஏனென்றால் பெண்களுக்கு கல்வி இல்லாமலிருப்பதாலும், மனம் அந்தகாரப்பட்டிருப்பதாலும், அவரவர்கள் எப்படி அறியக்கூடும்?

தற்கால தேச நிலைமையும் ஜனங்களுடைய அனுபவமும் முற்போக்கும் காலம் செல்லச் செல்ல கல்வியும், நாகரீகமும் விருத்தியடைவதைத் தெரிந்துகொள்வது அவசியம். மூலை முடுக்குகளான சிறு கிராமத்திலுள்ள நம் சகோதரிகளுக்கு அவசியம் கல்வி போதிக்கவேண்டும். அதனுடன் சன்மார்க்கமும் ஞானமும் அவசியம்வேண்டும். தினப்பதிப்புப் பத்திரிகை தமிழில் பிரசுரிக்கப்படுவதால் அதை வாங்கி நம் சகோதரிகள் அவசியம் படிக்கவேண்டுமென்பதே என்னுடைய கருத்து. (அதற்குச் சகோதரிகளனைவரும் தினப்பதிப்பு சுதேசமித்திரன் வரவழைக்க சம்மதித்தார்கள்). பத்திரிகை படிக்க வேண்டியது அவசியம் என்பதை ஒரு திருஷ்டாந்தமாக ஒரு சிறு கதையினால் விளக்குகிறேன். முற்காலத்தில் திருச்சொப்பள்ளிக்கடுத்த உறையூரென்னும் ஸ்தலத்தில் சோழமகாராஜன் அரண்மனை ஆலாத்திப் பெண்களுக்குள் சிறந்தவளும், தமிழ்

இலக்கணத்தில் மிகவும் தேர்ந்தவளுமாகிய தமிழறியும்பெருமா
ளென்னும் ஒரு பெண்ணிருந்தாள். சுமார் எறக்குறைய நூறு
மைல் தூரத்திலுள்ள மதுரையிலிருக்கும் சங்கப்பலகை தமிழ்
வித்வான்கள் மேற்சொன்ன பெண் இருக்கிறளென்ப
தை அறியமாட்டார்கள். சோழராஜன் அரண்மனை ஆலாத்தி
பெண்ணாகிய இந்தத் தமிழறியும்பெருமாள் இலக்கணக் கவிக
ளேக்கொண்டு தன்னிடம் வருகிறவர்களே தோற்கடித்துவிறட்
டிவிடுவாள். இப்படி இருக்கும்பொழுது ஒரு விறகுதலையன்
வெகு கஷ்டப்பட்டு ஆயிரம் பொன் சேர்த்துக்கொண்டு தமி
ழறியும் பெருமாள் இடத்திற்குப் போனான். அவள் ஒரு கவி
யினுற் தோற்கடித்து விறட்டிவிட்டாள். ஏழையாகிய விறகு
தலையன் ஆயிரம் பொன்னைக்கொடுத்துவிட்டு அழுதுகொண்
டிருந்தான். அப்பொழுது அங்கே இருப்பவர்கள் நீ சத்தமிடு
வதில் காரியமில்லை என்றும் மதுரை தமிழ் சங்கத்தாரிடத்
துக்குப் போய் முறையிட்டுக்கொள்ளென்றும் சொன்னார்கள்
விறகுதலையன் அப்படியே ஆகட்டுமென்று தமிழ் சங்கத்தாருட
ன் முறையிட்டுக்கொண்டான். அப்பொழுது சங்கப்பலகையி
லுள்ள நற்கீரர் வந்து தமிழறியும் பெருமாளே ஜெயித்து விறகு
தலையனுக்கு அவளே விவாகம் செய்வித்தாரென்று சரித்திரத்
தில் படிக்கிறோம். மதுரைக்கு சுமார் நூறுமைல் தூரத்திலு
ள்ள வித்வசிரோமணியாகிய தமிழறியும்பெருமாளே சங்கப்பல
கையிலுள்ளவர்கள் விறகுதலையன் சொல்லுவதற்கு முன்னுல்
தெரிந்துகொள்ளமுடியவில்லை. இப்பொழுது இந்தியா முழு
வதும் இன்னும் உலக முழுவதும் ஆயிரக்கணக்கான பத்திரி
கைகள் சொற்ப விலைக்கு வரவழைத்துப் படிக்கலாம். உலக
த்திலுள்ள சகலசமாசாரங்களுக்கும் அது இடம்கொடுக்கும்.
உலக விவகாரம் முழுவதும் அதில் படித்து தெரிந்துகொள்
ளலாம். பலபாஷைகளில் பத்திரிகை வெளிவருவதால் யார்
யாருக்கு எந்தெந்த பாஷை தெரியுமோ அந்தந்த பாஷையில்

பத்திரிகை வரவழைக்கலாம். சகோதரிகளே, பத்திரிகை வர வழைத்து படிப்பது எவ்வளவோ நல்லதென்று இப்பொழுது விளங்குகிறதல்லவா ?

ஹிந்து ஸ்திரீகள் யார் என்று கேட்டதற்கு நான் பதில் சொல்லுகிறேன். ஆசியா கண்டத்திலுள்ள ஒரு பாகத்திற்கு இந்துதேசமென்ற பெயர். அது ஒருகாலத்தில் சீரும் சிறப்பும் பேரும் கீர்த்தியுமாயிருந்து தற்காலத்தில் மற்றதேசங்களை விட பிற்பட்டிருக்கிறது அப்படி பிற்பட்டிருக்கிறதற்கு காரணம் என்னவென்றால் பெண்களுக்கு படிப்பில்லாததும் ஒற்றுமை என்பது கொஞ்சங்கூட ஜனங்களுக்கு இல்லாததுதான் காரணமென்று சொல்லவேண்டும். 15 லட்சம் சதுரமைலுள்ள இந்த தேசத்தில் ஸ்திரீ சங்கங்கள் சொற்பமாயிருக்கிறதை கவனிக்கும்தோறும் மிகுந்த விசனமுண்டாகிறது. இவ்வளவு விஸ்தாரமான தேசத்தில் உற்பத்தியான நமக்குத்தான் இந்து ஸ்திரீகள் என்று பெயர். இங்கே வசிப்பவர்களுக்குத்தான் ஹிந்துக்கள் என்று பெயர்.

இந்து ஸ்திரீகளாகிய நமக்கு தற்காலம் படிப்பும் ஒற்றுமையும் குறைவாயிருக்கிறதென்று நினைத்து இந்து ஸ்திரீகளின் ஐக்யசமாஜ மென்னும், இந்த சபையை ஸ்தாபித்திருக்கிறது. சகோதரிகளே எந்த எந்த இடத்திலெல்லாம் சபைகள் ஸ்தாபிக்க முடியுமோ அந்தந்த இடத்திலெல்லாம் ஸ்திரீ சங்கங்கள் ஸ்தாபிக்கப்பிரயாசைப்படுங்கள். ஒற்றுமைக்காகவும் பாடுபடுங்கள். ஐரோப்பாகண்டத்தில் வசிக்கும் மனிதர்களுக்கு ஐரோப்பியர்களென்று பெயர் ஐரோப்பிய ஸ்திரீகளை சில சமயங்களில் மேல்நாட்டுஸ்திரீகளென்றும், சொல்லுவதுண்டு அவர்களுக்கு படிப்பும் ஈகரீகமும் ஒற்றுமையும் தேசாபிமானமும் ஜாஸ்தியாயிருப்பதால் சுகமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பின்னாகளையும் சரியான மாதிரியாய் வளர்க்கிறார்கள்.

புருஷர்களும் அவர்களே அன்பாய் நடத்துகிறார்கள். நம்முடைய தேசத்தில் குழந்தைகளின் வளர்ப்பைப்பற்றி அவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ளாதது யார் செய்த பாவமோ தெரியவில்லை. சகோதரிகளே, நாமும் அந்த மாதிரியாய் பிள்ளைகளை வளர்க்கவும் நன்முறைப்படிக்கவும் (இங்கிதமறிந்து) நடக்கவும் தெரிந்துகொள்ளவேண்டியது முக்கியமான விஷயம் என்று நினைக்கிறேன். சகோதரிகளே, நமக்கென்ன தெரியும் என்றும் நாம் சொன்னால் கேட்க்கப்போகிறார்களா என்றும் சும்மாயிருக்காமல் நம் தேசத்துப் பெண்கள் சேர்ந்திருந்த வேண்டுமென்று கவலை எடுத்துக்கொள்ளுங்கள். சாவகாசமிருக்கும்பொழுதெல்லாம் படிப்பது நம் தேசத்து சகோதரிகளுக்கு நல்ல மார்க்கத்தை போதிக்கவும் முன் வாருங்கள். ஒருவன் வைத்தியம் கற்றுக்கொண்டவுடனே கெட்டிக்காரனாகமாட்டானென்பது உண்மையே; அனுபோகத்திலல்தான் கெட்டிக்காரனாவான். அதைப்போலவே நாம் வீட்டில்மட்டும் படித்துக்கொண்டிருந்தால் போதுமானதல்ல நம் தேசத்து ஸ்திரீகளுக்கு சங்கங்கள் ஸ்தாபிப்பதும், பிள்ளைகளை சரியான வழியில் நடத்தவும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன். அடுத்த கிழமை குழந்தைகளின் வளர்ப்பைப்பற்றி ஓர் உபந்நியாசம் செய்யப்போகிறேன். சகோதரிகளனைவரும் வரவேண்டுமென்றுகேட்டுக்கொள்ளுகிறேன்.

---

3. குழந்தைகளின் வளர்ப்பு.

சகோதரிகளே இந்த ஸமாஜத்தைக் குறித்து உங்களுக்கெல்லாம் நல்லபிப்பிராயம் இருப்பதாக தெரிவித்தீர்கள். அதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். இன்றையதினம் குழந்தைகளின் வளர்ப்பைப்பற்றி உபந்நியாசம் செய்கிறேன்.

நம்முடைய தேசத்தில் குழந்தைகளை சரியான முறைப்படி வளர்க்கிறதில்லை என்று தாராளமாகச் சொல்லலாம்.

11

இனிமேல் நாம் அப்படிச் செய்யாமல் கூடிய வரையிலும் சிரமம் எடுத்துக்கொண்டு தகுந்தபடி வளர்க்க வேண்டும். சரியான முறைப்படி பிள்ளைகளை வளர்க்காவிட்டால் பிள்ளைகள் கெட்டுப்போவார்கள். இப்படி நாம் சொன்னால் அது விதி என்றும் தெய்வத்தால் வந்ததென்றும் நம் தேசத்து முதிய சகோதரிகள் சொல்லுகிறார்கள். அது சரியல்லவென்று சொல்லவேண்டும். பிள்ளை எப்படி வளர்க்கவேண்டுமென்று கேட்டீர்களல்லவா? கொஞ்சம் தெரிந்தவரையிலும் சொல்லுகிறேன் கேளுங்கள். குழந்தை பிறந்தவுடனே அதற்குப் பாலூட்டி பிறகு குழந்தை வளர வளர ஆகாரங்கள் சேர்த்துக்கொடுக்கிறோம். பிள்ளைகளுடைய தேக சுபாவத்தை அறிந்து ஆகாரங்களும் மருந்துகளும் கொடுப்பது போலவே இயற்கை குணத்தையும் கண்முயறிந்து அதற்கு தகுந்தபடி போதனைகள் போதித்து வளர்க்கவேண்டும். இந்த விஷயத்தில் தாய் நன்முய்ப் படித்தவளாயிருந்தால் லொக்கியமும் யோக்கியமுமாக வளர்ப்பாளென்பதற்குச் சந்தேகமில்லை. பிள்ளையின் இயற்கையும் சுபாவமும் கல்லதானால் வளர்ப்பது கஷ்டமில்லை. இயற்கையாகவே பொல்லாத குணமும் முரண்டுமிருக்கிறபிள்ளைகளை தகுந்தபடி கண்டதண்டனை செய்து வளர்க்கவேண்டும். தான் வளர்க்கிற பிள்ளை தனக்குக் கீழ்படியவேண்டும். அப்படிக் கீழ்ப்படியாவிட்டால் லெகு மோசமிலக்கு வரும்.

நம் தேசத்துப் பிள்ளைகள் பெரும்பாலும் கெட்டுப்போகக் காரணம் தாய்கள்தான். எப்படி என்முல் தாய் குழந்தைகளின் எதிரில் அது குழந்தைதானே அதற்கு என்ன தெரியுமென்று சொல்வார்கள். அது கெட்ட வழக்கம். ஏனென்முல் குழந்தைகளுக்குத் தெரியாமலா ருசியுள்ள பதார்த்தம் கண்டவுடனே அது தனக்கு வேண்டுமென்று கேட்கிறதும் அந்தப் பதார்த்தம் கொடுக்காவிட்டால் அழுது இம்சை செய்யவேண்டும் என்றும் தெரிகிறது? அதனால் அதனுடையதப்

பிதத்தை எடுத்துக் காட்டவேண்டும். பிற்பாடு தப்பிதத்துக்குத் தகுந்தபடி சொல்லிக்கவேண்டும்கேவலம் பிள்ளைகளுக்கு தேகபோஷணை மாத்திரம் போதுமானதல்ல. அதோடு கூட ஆத்ம போஷணையும் அவசியம் வேண்டும் அதற்கும் தாய்மார்கள் படித்திருந்தால் நல்லதென்று நினைக்கிறேன். ஆத்ம போஷணைக்காகவும் பாடுபட்டு வளர்க்கவேண்டும். பிள்ளைகளுக்குக் கல்வி யாரம்பமானவுடனே நம்முடைய தேசத்து தர்ம சாஸ்திரங்கள், புராணங்களிலுள்ள சுட்சுமங்கள், சன்மார்க்கப் போதனைகள் முதலியவை போதிக்க வேண்டும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று சொல்வதினால் அன்னையே முதலில் சன்மார்க்க போதனைகள் போதிக்கக் கடமைப்பட்டவள் என்பதை உணராமல் இருக்கிறது அறியாமை. ஆதலால் சகோதரிகளே உலகம் இன்னதென்றும் கடவுள் இன்னதென்றும் சன்மார்க்கம் இன்னதென்றும் தெளிவாய் எடுத்து போதிக்கவேண்டியது அவசியம்.

காரியமிப்படி இருக்க நம் தேசத்து தாய்மார்கள் பிள்ளைகளுக்கு போதிக்கும் விதம் வேறொரு விதமாய் இருக்கிறது. நான் நேரில் கண்ட சில விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. தாய்மார்கள் ஒரு இடத்திற்கு போகும்பொழுது பிள்ளைகள் கூடவருகிறேனென்று சொல்லுவார்கள். அப்பொழுது தாய்மார்கள் தாம் போகும்வேலைகளை உண்மையாய் குறிப்பிட்டு சொல்லாமல் பொய் பேசுவார்கள். எப்படியென்றால் உனக்கு கல்கண்டு வாங்கிக்கொண்டு வரப்போகிறேன் பழம் வாங்கிக்கொண்டு வரப்போகிறேன் என்று பொய் சொல்லுவார்கள். மேலும் உள்ளபடி கசப்பாயிருக்கும் மருந்தை இதமிப்பாயிருக்குமென்றுஞ் சொல்லுவார்கள். கண் வலிக்கு மருந்து போடும்பொழுது எரியாமல் குளிர்ச்சியாயிருக்குமென்றும் பொய் சொல்லுவார்கள். ஆதலால் அந்தப்பிள்ளைகள் தாய் சொல்லை நம்பமாட்டார்கள். வேறொரு நாள்

வெளியில் போகும்பொழுது பிள்ளைகள் கூடவே வருகிறே னென்று இம்ஸை செய்வார்கள். கசப்பு மருந்தை தித்திப் பென்று கொடுத்ததினால் தாயின் முகத்தில் துப்புவார்கள் பிற்பாடு அந்தப் பிள்ளைகளுக்கு சன்மார்க்கம் போதிக்கும் பொழுது அம்மா நீ மாத்திரம் பொய் சொல்லவில்லையா அது மட்டும் சரிதானவென்று கேட்பார்கள். அப்பொழுது தாய் மார்கள் என்ன பதில் சொல்லுவார்கள்? ஒன்றும் சொல்ல முடியாது. பிள்ளைகளே கசப்பு மருந்து சாப்பிட்டால்தான் தேகத்துக்கு நல்ல சௌக்கியம் கொடுக்குமென்று சொல்லி மருந்தை சாப்பிடும்படி செய்யவேண்டும். கண்வலி பிள்ளை களுக்கும் மருந்துபோடும்போது அது கொஞ்சம் எரியத்தான் செய்யும் என்று சொல்லி மருந்து போடவேண்டும்.

பலகாரம் கொடுக்கும்பொழுது நான் உனக்கு பலகாரம் கொடுத்தேனென்று அண்ணனிடத்திலும் தம்பி தங்கச்சியிட த்திலும் சொல்லாதே என்று பொய்பேசக் கற்றுக்கொடுப் பதும் உண்டு. சில தாய்மார்கள் அதிக வயது பிள்ளைகளுக்கு பால்கொடுத்து கெடுத்துவிடுகிறார்கள். அதனால் அடிக்கடி தொந்தரவு செய்கிறார்கள். அப்படி தொந்தரவு செய்துகொண் டிருக்கும்போது தாய்மாருக்கு வீட்டில் கடுமையான வேலைகள் இருந்தால் அப்பொழுது உட்கார்ந்து பால்கொடுக்க முடியாமல் கண்ட பதார்த்தங்களெல்லாம் தின்னும்படி கொடுக்கிறார்கள். அவர்கள் ஆலாய் கண்ட பதார்த்தமெல்லாம் தின்ற உடனே வியாதி வருகிற வழக்கமும் உண்டு இப்படிச் செய்வது பிச கென்று நம் சகோதரிகளுக்கு சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது வயது சென்ற சிலர் சொல்லுவ தென்னவென்றால் தற்காலத்தில் உயர்ந்த உத்தியோகம் செய்யும் சில கனவான் களைக்குறிப்பிட்டு அவர்களுடைய தாய்மார்கள் தீராகூராகுஷி என்றும் அவர்கள் சரியாய்ப் பிள்ளைகளை வளர்க்காமலா உயர் ந்த உத்தியோகம் வகிக்கிறார்களென்றும் சொல்லுகிறார்கள்.

மேலும் நல்ல மாதிரி தீய மாதிரி இதெல்லாம் ஜென்மாந்தரத்தில் உண்டாகிறதும் அதிர்ஷ்டத்தை பொறுத்தது என்றும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுகிறவர்களுக்கு நான் அவசியம் ஒரு சமாதானம் சொல்லலாமென்று நினைக்கிறேன். என்னவென்றால் ஜன்மாந்திர சுகிர்த பலன் என்றால் அப்பொழுது அவர்கள் போன ஜன்மத்தில் நல்ல காரியம் செய்தார்கள் என்று விளங்குகிறது ஆதலால் இப்பொழுதும் நல்ல அந்தஸ்துடன் வாழ்ந்து வருகிறார்கள். அதனால் நாமும் நல்ல காரியங்களையே பிள்ளைகளுக்கு போதிக்கவேண்டும் எந்த விதத்திலும் குழந்தைகளை நல்ல மார்க்கத்தில் வளர்க்க இடமுண்டாகிறது. மேலும் கனவான்களின் தாய்மார்கள் படிக்காததினால் என்ன குறைவு வந்துவிட்டதென்பதற்கு பதில் சொல்லுவேன். என்னவென்றால் தாய்மார் எழுத்து வாசனை இல்லாததால் இயற்கையாயுள்ள புத்தியுடன் படித்து உத்தியோகம் செய்கிறார்கள் குறிப்பிட்ட கனவான்களே நல்லபடிப்பும் சன்மார்க்கமும் உள்ள தாய்கள் நல்ல போதனையுடன் வளர்த்திருந்தால் இன்னும் உயர்ந்த உத்தியோகம் வகிக்கிறதுமல்லாமல் நல்ல கீர்த்தியுடனும் வாழ்வார்கள் என்பதற்கு என்ன சந்தேகம்? எப்படி இருந்தாலும் பிள்ளைகளுக்கு நல்ல வளர்ப்பும் தேகதிடனும்கூரிய புத்தியும் சீர்வாக சக்தியும் சிறு பிள்ளை முதற்கொண்டே வளர்ப்பதில் தான் வரும். நம்முடைய முன்னோர்கள் "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்று பழமொழியை எதற்காக சொல்லியிருக்கிறார்கள்? குழந்தைகளைத் தொட்டிலில் போட்டவுடனே சன்மார்க்க போதனைகளை போதிக்கவேண்டுமென்பது அவர்களுடைய கருத்து என்று இப்பொழுது விளங்குகிறதல்லவா? மேலும் "தாயைப்போல பிள்ளை" என்றும் "நூலைப்போல சேலை" என்றும் வழங்குவதற்கு காரணமென்ன? தாய்மார்களாகிய நாம் நல்லவழிநடக்கவும் சன்மார்க்க

முறைப்படி இருக்கவும் பிள்ளைகளுக்கு நல்வழி போதிக்கவும் கடமைப் பட்டவர்களென்பதை நாம் நன்றாய் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

ஆதலால் சகோதரிகளே பிள்ளைகளே நன்றாய் வளர்க்காவிட்டால் அந்த பிள்ளைகள் நமக்கு வயதான காலத்தில் வேம்புபோல் கசப்பாயிருப்பார்கள் நமக்கும் மனது திருப்தியாயிருக்கமாட்டாது. மிதமிஞ்சின செல்லம் கொடுத்து வளர்க்காமல் சரியாய் வளர்க்கவேண்டும் பிள்ளைகளிடத்தில் அன்பாயிருக்கவேண்டும். சர்க்கஸ் வித்தையை பார்த்திருப்பீர்களென்று நினைக்கிறேன். அதில் அறிவில்லாத மிருகங்களை எப்படி அடக்கியிருக்கிறார்களென்று கவனித்தீர்களா? தனக்கு கீழ்ப்படிந்து நடக்கும்படி மிருகங்களை பழக்கினது நம்மைப்போல் மனிதர்கள்தான். நம்முடைய பிள்ளைகள் என்னமக்கு கீழ்ப்படிந்து நடக்கக்கூடாது. நாமும் அப்படி கண்டிப்பாய் வளர்க்கவேண்டும். சிலர் (ஹிப்நாட்டிஸம்) வித்தையினால் அப்படி பழக்கியிருக்கிறார்களென்று சொல்லக்கூடும். நாமும் என் அந்த ஹிப்நாட்டிஸம் வித்தையை கற்றுக்கொண்டு பிள்ளைகளை நன்றாய் வளர்க்கக்கூடாது? சகோதரிகளே, எந்த விதத்திலும் பிள்ளைகளை சன்மார்க்கத்தில் வளர்க்கப் பிரயாசை எடுத்துக்கொள்ளுங்கள். பகவானேத்துதிக்கும்படிக்கும் உண்மைபேசும்படிக்கும் பகவான் நமக்கு நாக்கு கொடுத்திருக்கிறார். அதை பொய்பேசி அசுத்தஞ்செய்துகொள்ளாமலும் உண்மையேபேசி பிள்ளைகளை சன்மார்க்கத்தில் வளர்க்கவேண்டும். இத்துடன் இதை நிறுத்துகிறேன்.

4-வது பெண்களுக்கு கல்வி அவசியம்.

ஆரிய சகோதரிகளே! பெண்களுக்கு கல்வி அவசியமென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். கல்வியினால்

அடையக்கூடிய நன்மைகள் அநேகமிருப்பதால் அவசியம் கல்வி கற்கவேண்டும். நம் தேசத்து முதிய சகோதரிகள் பலர் பெண்கள் படிப்பதை ஆக்ஷேபிக்கிறார்கள். அவர்கள் சொல்லுவதென்னவென்றால் பெண்கள் படித்தென்ன உத்தியோகம் செய்யப்போகிறார்களாவென்று சொல்லுகிறார்கள். அது சரியல்லவென்று தோன்றுகிறது. எனென்றால் படிப்பதிலுள்ள நன்மைகளும் படிக்காததினால் வரும் கெடுதல்களும் சீர்தூக்கிப்பார்த்தால் படிப்பதே நல்லதென்று தோன்றும்.

படிப்பில்லாததால் முதலாவது ஆத்மபோஷணை குறையும். இரண்டாவது குடும்பகாரியம் கெட்டுப்போகும். படிக்காத பெண்கள் பெரிய தனம் செய்த குடும்பங்கள் எவ்வளவோ சீர் கெட்டிருப்பதை என் கண்ணாலேயே பார்த்திருக்கிறேன். உயர் குடிப்பிறப்பும் குடும்பத்திற்கு போதுமான வருமான முள்ள குடும்பத்திற்கு படிக்காத ஒருவன் வருவாளானால் குடும்பம் வெகு சீக்கிரம் கெட்டுப்போகும். ஆதலால் பெண்கள் அவசியம் படிக்கவேண்டுமென்பதே சரி. தகுந்த குடும்பத்தில் பிறந்த ஒருவன் நல்ல படிப்பாளியாகவும் உயர்ந்த பரீக்ஷைகள் தேறி நல்மனச்சாக்ஷியுடன் தகுந்த உத்தியோகம் செய்யும் பொழுது ஆயுள் முழுவதும் அவனுக்குத் தோழியாயும் ஒரு வாலும் பிரிக்கப்படாதவர்களாயும் தன் கூடவேயிருக்கும் மனைவிக்கு எழுதப் படிக்கத் தெரியாமல் இருப்பதை நினைக்கும்தோறும் எவ்வளவு விசனமாகவும் வெட்கமாகவுமிருக்குமென்று யோசித்துப்பாருங்கள்.

மேலும் அவனுடைய தாய், தமக்கை, மகள், மருமகள், மனைவி, இத்தனைபெயரும் அவன் நல்மனசாக்ஷியுடன் செய்யும் வேலைக்கு இடஞ்சலாயிருப்பார்கள். அவனுக்கு விவாகத்திற்காக பெண் குழந்தைகளிருந்தால் சதா விவாகத்தை குறித்துப் பேசி இம்சை செய்வார்கள். தகுந்த வயது வரட்டுமென்று

சம்மாயிருக்கமாட்டார்கள். அளவுகியமான தணிகளும் நகை களும் அந்தஸ்துக்கு மிஞ்சி வாங்கவேண்டுமென்று தொந்திரவு செய்வார்கள். இன்னும் படிக்காத பெண்கள் பணத்தினு டைய பெருமையை அறியமாட்டார்கள். படித்த ஸ்திரீயே படிக்காத ஆண் பிள்ளைக்கு விவாகம் செய்ய பிரயத்தனப்பட் டால் அவள் சம்மதிக்கமாட்டான். இப்படியிருக்க நல்ல படிப் பாளிகள் மிருகம்போல் வயிற்றுக்கு சாப்பாடும் நகையலங்கார மும் செய்துகொண்டு திரிகிற பெண்களை விவாகம் செய்ய செப்படி என்று யோசிக்கும்போது பெண்களை அவசியம் படிப் பிக்கவேண்டும். பெண்களுக்கு சொற்ப படிப்பு போதாது. மிகவும் சொற்ப படிப்பினால் அகம்பாவ முண்டாகக்கூடும். ஆதலால் கூடிய வரையில் குறைந்தபக்ஷம் 16 வயதளவும் படித்தால் நல்லது. அவ்வளவு படிக்க சாதாரணமான ஊர் களில் பள்ளிக்கூடங்களில்லாததால் வீட்டிலேயே படிக்கலாம். பெண்கள் படித்தால் நல்மனசாகியுடன் தலைவனுடன் கலந்து இதமாகும் இது சுகமென்று யோஜனை சொல்லவும் அவன் சொல்வதை சரியென்று உணரவும் அதனால் குடும்ப காரியங் களுக்கும் பொது ஜனங்களுக்கும் இடையூறில்லாமல் வாழவும் வதுவாயிருக்கும்.

இப்படியிருக்க பலர் முற்காலத்தில் பெண்கள் படிக்க வில்லை என்றும் அவர்கள் எவ்வளவோ மேன்மையாய் வாழ்ந் தார்கள் என்றும் சொல்லுகிறார்கள். முற்காலத்தில் ஸ்திரீகள் படித்தார்கள் என்றே புராணவாயிலாகவும் சரித்திர வாயிலா சவும் கூடியவரையிலுணருகிறோம். புராணங்களில் மனுச் சக்கிரவர்த்தியின் மனைவி சதரூபை என்னும் பெண்மணி முதல் மந்திரி வேலை பார்த்தாளென்றும், பாகவதத்தில் ருக்மணிதேவி திருவண்ண பகவானுக்கு பிராமணன் மூலமாய் ஓலை எழுதிக்கொடுத்தனுப்பினளென்றும் சொல்லப்படுகிறது. மேலும் சீதை, திரௌபதி சந்திரமதி, தமயந்தி முதலியவர்

களும் படித்தறிஞலும் இயற்கையான குணத்தினுலும் மேன்மையடைந்தார்கள். சரித்திர வாயிலாகவும் ஔவை, உப்பை, உறுவை, தமிழறியும் பெருமாள் முதலியவர்களும் இத்தென்னாட்டில் மிகவும் மேன்மை பெற்றவர்கள் என்பதற்கு ஆக்ஷேபணையுண்டோ? மேலும் தர்ம சாஸ்திரங்களில் பெண்களுக்குக்கூட வித்தியாப்பியாசம் ஏற்பட்டிருப்பதால் அதை அவர்கள் அறிந்து கொள்வதெப்படி. அதற்கு பழக்க வழக்கங்கள் என்பார்கள். பழக்க வழக்கங்கள் போதுமானதல்ல. கல்வியும் ஞானமும் அவசியம் வேண்டும். எதற்கும் கல்வியிருந்தால் தன் கடமைகளை நிறைவேற்றி முடிவில் அழிவில்லாத ஆத்ம சுகத்துடன் வாழ ஏதுவாகும். இப்படிக்கில்லாமல் அந்த காரப்பட்டிருக்கும் மனதுடன் இருக்கும்பொழுது தன் கடமைகளை சரியாய் நிறைவேற்ற முடியுமாவென்பதை யோசித்துப் பாருங்கள். சகோதரிகளே, அப்படி யோசித்துப்பார்க்கும் பொழுது பெண்களுக்குக் கல்வி அவசியமென்று தோன்றவில்லையா? மேலும் தனக்கு உசிதமாகத்தோன்றும் காரியங்களை செய்யக் கடமைப்பட்டவளாதலால் அவசியம் அந்தக்காரியம் செய்யவேண்டும்.

மேற்சொல்லப்போகிற கற்பு, சுகாதாரம், பாலர்களுக்கு சன்மார்க்கபோதனை முதலிய விஷயங்களை யெல்லாம தெரிந்துகொள்வதற்கும் அதைத் தெரிந்துகொண்டு பிற்பாடு தன் கடமைகளை நிறைவேற்றவும் கல்வியே மூலகாரணம் என்பதை அறியவேண்டும். கல்வி மனிதர்களுக்கு ஏற்றதுனை. கல்வியே மனதிற்கு ஆறுதலுண்டாக்கும் கருவி. கல்வியே சுகபோக பாக்கியங்களுக்கு மூலகாரணம். பரலோக வாழ்வைக்குறிக்கிறதும் கல்வியென்றே சொல்லவேண்டும். கல்வியினுல் கணக்கிடமுடியாத நன்மைகள் இருப்பதனுல் கல்வியின் சுவையை அறியாத சில மனிதர்கள் கல்வி கற்றுக்கொண்டால் கெட்டுப் போவார்களென்றும் அன்ய புருஷனுக்கு கடிதமெழுதுவார்களென்றும் சொல்லுகிறார்கள்.

27 REGISTRAR OF

இன்னும் கல்வியை இகழ்ந்து பேசுகிறார்கள் இதற்குக் கூட சமாதானம் உண்டு என்று நினைக்கிறேன். சில பணக் காரர்கள் சதா சில மனிதர்களுக்கு இடையூறுண்டாக்குவதும் மேலும் பணத்தின் மகிமையினால் பொய்ச்சாகஷிகளைக்கொ ண்டு காரியங்களை ருஜுப்படுத்தி மனிதர்களை மாட்டிவிடக் கூடும். அப்படிச் செய்கிறார்களென்றே கேள்விப்படுகிறோம். ஆதலால் நாம் பணத்தை இகழ்ந்து அதன்மேல் ஆசைவைக்கக் கூடாதென்று நினைத்தால் அது தப்பு அர்த்தம் ஆகும் அதைப் போலவே சில கல்விமான்கள் மனச்சாகஷிக்கு விரோதமாய் நடந்து முடிவில் மனதிற்கு ஆறுதலில்லாமல் உயிருடன் இருக்கும்பொழுதே நரகவேதனை அடைகிறார்கள். அதற்காக நாம் கல்வியை இகழ்ந்து பேசுவது தப்பு என்றே நினைக்க வேண்டும். சகோதரிகளே அவசியம் தாங்கள் படித்திருந் தாலும்கூட மேலும் மேலும் சன்மார்க்க புஸ்தகங்களை வர வழைத்து படிக்கவேண்டும். தங்கள் அருமை குமாரத்திகளை யும் அவசியம் படிப்பிக்கவேண்டும். நம்முடைய தேசத்தில் பெண்களுக்கு நகைகள் நல்ல அலங்காரமென்று நினைக்கப் படுகிறது. அப்படி நினைத்தாலும்கூட நகைகளைவிட படிப்பு மேலானதென்று நினைக்கவேண்டும். நல்ல பெண்கள் நன் ராய்ப் படித்து இயற்கை அழகுடன் செயற்கை அழகும்பெற்று நல்ல அலங்காரத்துடன் விளங்கினால் எவ்வளவு சந்தோஷ மென்று நினைக்கிறீர்கள். அது அளவில்லா சந்தோஷமென் பதற்கு தடை என்ன. பொன் மலர் வாசனைபோல மனதிற்கு ரம்யமாய் இருக்குமென்பதற்கு ஆக்ஷேபனை என்ன?

நம் தேசத்துப் பெண்கள் இயற்கையாகவே சாதுக்களா கவும் சகிப்புள்ளவர்களாகவும் இருப்பதால் அவர்களைக் கொடு மையாக நடத்துவது அநியாயமென்று இன்னும் நம்முடைய தேசத்தில் அநேக ஜனங்கள் உணரவில்லை. இவ்விடத்தில் படித்த பெண்களுக்கும் படிக்காத பெண்களுக்கும் கொஞ்சம்

பேதகமிருப்பதை எடுத்துச்சொல்லுவது யுக்தமென்று நினைக்கிறேன். என்ன பேதகமென்றால் படித்த பெண்கள் தன்னை கொடுமையாகவும் அநியாயமாகவும் நடத்துவதால் வெகு நிச்சயம் கண்டுகொள்ளுகிறார்கள். தன்னை நடத்துகிறவிதம் இன்னபடியென்று குடும்பத்திலுள்ள பெரியவர்களிடத்தில் சொன்னால் அவன் படித்ததினால் பொல்லாதவளென்றும் தங்களுக்கு அடங்கவில்லை என்றும் வசைச்சொல் சொல்லி பயமுறுத்துகிறார்கள். படிக்காதவளைக் கொடுமை செய்யும்பொழுதும் அநியாயம் செய்யும் பொழுதும் அவள் இயற்கையான புத்தியினால் அறிந்துகொண்டாலும் தன் பெண் ஜென்மத்தை நொந்துகொண்டும் அந்த ஜென்மம் கேவலமென்றும் பாவமென்றும் அவர்கள் தன்னை நடத்தும் முறை பிசகென்று தெரிந்துகொண்டாலும் பிறரிடத்தில் சொல்லாமல் தன்னைத்தானே தேற்றிக்கொள்ளுவாள். எப்படி தேற்றிக்கொள்வாளென்றால், நாம் ஏதாவது பிசகு செய்திருக்க வேண்டும். அதற்காக நம்மை அப்படி தண்டித்தார்களென்று எண்ணிக்கொண்டு சும்மாயிருந்துவிடுவாள். அதனால்தான் லெமனிதர்கள் படித்த பெண்கள் அடங்கமாட்டார்களென்று சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். இதற்கு ஒரு திருஷ்டாந்தமென்னவென்றால் சில ஆங்கிலேயர்கள் இந்துதேசத்துப் பிள்ளைகளுக்கு மூலதாரப் படிப்பை கட்டாயமாக்கினால் எங்கே தங்களுக்கு அடங்கமாட்டார்களோவென்று யோசனைசெய்துகொண்டிருக்கிறார்கள். அதிலும் சில காலத்தில் கட்டாயமாய் வந்துவிடுமென்பதற்கு சந்தேகமில்லை. அதைப்போலவே நம்முடைய ஜனங்களும் படித்த பெண்கள் தங்களுக்கு அடங்கமாட்டார்களென்று யோஜனை செய்வதுமுண்டு. பெண்களுக்கு மேலும் மேலும் படிப்பு விருத்தியாகுமே தவிர இந்த ஜனங்களுக்காக பயந்துகொண்டு படிப்பை நிறுத்திவிடமாட்டார்களென்றே சொல்லவேண்டும்.

தற்காலம் படிப்பு விருத்தியாயிருக்கிறதை சென்ஸஸ் கணக்கு மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம். அதேகம் பேர் படிக்க முன் வந்திருக்கிறார்களென்பதும் தெரிந்த விஷயம். கடந்த 20 வருஷத்துக்குமுன் இருந்த பெண் கல்வியும் தற் கால பெண் கல்வியும் சீர்தூக்கிப்பார்த்தால் எத்தனையோ பெண்கள் படித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். உயர் ந்த யூனிவர்சிட்டி பட்டங்களும் சில பெண்கள் பெற்றிருக் கிறார்கள். இருந்தாலும் கல்வியைக் குறித்து தூண்டுவதே நமது கடமை. நம்முடைய தேசத்தில், ஒவ்வொரு குடும்பத் தின் தலைவியும் கன்றாய்ப் படித்திருக்கவேண்டும். ஒவ்வொரு வரும் படிப்பில் இப்பொழுதிருக்கிறதைவிட இன்னும் எத்த னையோமடங்கு அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டும். கடந்த 10 அல்லது 20 வருஷத்திற்குமுன் இருந்ததைவிட நாகரீகம் ஜாஸ்தியாயிருக்கிறதை கவனிக்கும்பொழுதும், ஸ்திரீகளுக்கு முன்னையளவு அடிமைத்தனம் குறைந்து வருவதை கவனிக் கும்பொழுதும் இந்த நன்மை எதினால் வந்ததென்று விசாரித் தால் படிப்பினால் வந்த நன்மையென்று சந்தேகமற விளங்கும். சகலத்திற்கும் படிப்பே மூல காரணமென்று நம்முடைய சகோதரிகளுக்கு இப்பொழுது விளங்குகிறதல்லவா? பெண் களை படிக்கவிடாமல் ஆக்ஷேபனை செய்கிறவர்களை இனிமேல் படிக்க ஆக்ஷேபனை செய்யக்கூடாதென்று கண்டிப்பாய் சொ ல்லவேண்டும்.

இங்கிலாந்தில் படித்த பெண்கள் சிலர் ஸ்திரீ சுதந்திர வாளிகளென்று பேர்படைத்து அதேகருடைய வீடுகளையும் ஆபீசுகளையும் இருப்புப் பாதைகளையும் இடித்து நாசம்செய்து விடுகிறார்களென்று நாம் கேள்விப்படுகிறோம். அப்படிச்செய் வது படித்த பெண்கள் பிசகென்று உணரவேண்டும். மேலும் படித்தவர்களுக்கு அது அழகல்ல. படித்த பெண்கள் குடும் பங்களை சீர்திருத்திக்கொள்ளவும் சமையல் வேலைகள் நன்றாய்

செய்யவும் பிள்ளைகளைப் பெற்று சன்மார்க்கத்தில் வளர்க்கவும் அவர்களுக்கும் தன் புருஷர்களுக்கும் தேகபோஷணை சீமித் தம் நன்முய்ப் பாடுபடவும் பகவான் உண்டாக்கியிருக்கிறாரே தவிர இப்படி சண்டைகள் செய்யவும் புருஷர்களைப்போலவே தங்களுக்கும் உயர்ந்த உத்தியோகம் வேண்டுமென்று வாதாட வும் சிருஷ்டிக்கவில்லை என்று உணரவேண்டும். படித்தவர் களுக்கு அகம்பாவ மிருக்கக்கூடாது. அகம்பாவமிருந்தால் படித்தால் என்ன பிரயோசனமோ அந்தப் பிரயோசனமில்லா மற்போய்விடும் என்பதற்கு சந்தேகமில்லை. ஆதலால் நம் முன்னோர்கள் நமக்கு நன்முப் விளங்கும்படியாய் அறிவோர்க் கழகு கற்றுணர்ந்தடங்கல் என்னும் பழமொழியை சொல்லி யிருக்கிறார்கள் பெண்கள் நன்முய் படித்து தன்னை அடிமைத் தனத்திலிருந்து விடுவித்துக்கொண்டு தன்னுடைய கடமை களைச் செய்ய பின்வாங்காமலிருப்பதே சரியென்று தெரிந்து கொள்ளவேண்டும். பெண்கள் தனக்கு ஏற்பட்ட கடமைகளை நிறைவேற்றாமல் பரலோகத்திற்குப் போனால் பகவான் என் உன்னுடைய கடமையை நிறைவேற்றவில்லையென்று கேள்வி கேட்டு மறுபடியும் போய் பூலோகத்தில் பிறந்து பாக்கியிருக் கும் கடமைகளை நிறைவேற்றி பிற்பாடு வரலாமென்று கட் டளையிடுவார். அப்பொழுது நாம் மறுபடியும் சம்சாரவேதனை அடையவேண்டும். இதற்கு ஒரு திருஷ்டாந்தமென்னவென் முல் நம்முடைய வேலைக்காரர்களைக் கடைக்குப்போய் சில சாமான் வாங்கிக்கொண்டு வரும்படி நாம் உத்திரவிட்டால் அவன் சோம்பலினாலும் அறியாமையினாலும் அந்த சாமான் வாங்காமல் வந்துவிட்டால் நாமென்ன செய்வோம். மறுபடி யும் போய் வாங்கிவரும்படி கண்டிப்பாய்ச் சொல்லுவோம் அவன் பலதடவை வாங்கி வராமலிருந்தால் நாமும் பலதடவை கடைக்கு அனுப்புவோம். அதைப்போலவே நமக்குக் கடவுள் ஏற்படுத்தின வேலைகள் பாக்கியிருக்கும்பொழுதே அவரிடத்

திற்குப்போனால் மறுபடியும் அனுப்புவார். ஆகையால் அவசியம் நமக்கு பகவான் எந்த சட்டங்களோ விதித்திருக்கிறாரோ அந்த சட்டங்களே நாம் அனுசரிக்கவேண்டும். இதனுடன் இந்த வியாசத்தை நிறுத்துகிறேன்.

5-வது கற்பே மேலான பூஷணம்.

சகோதரிகளே! பெண்களுக்கு நகையும் பூஷணமும் நல்ல அலங்காரமென்று நினைக்கிறோமல்லவா அப்படி நினைக்கும்பொழுது எந்த நகை எந்த பூஷணம் அதிக அலங்காரமென்று விசாரித்தால் கற்புதான் மேலான பூஷணமென்று விளங்கும். நம் முன்னோர்களும் அப்படியே மதித்து நடந்து வந்தார்களென்பது எத்தனையோ திருஷ்டாந்தங்களால் நாம் தெரிந்துகொள்ளுகிறோம். நம்முடைய வேத சாஸ்திர புராணங்களும் அதையே முறையிடுகிறது. காட்டில் வெகுகாலம் அன்ன ஆகாரமில்லாமல் கடவுளே நோக்கித் தவஞ்செய்யும் முனி சிரேஷ்டர்களைவிட நல்ல உத்தமமான கற்புள்ள மங்கைதான் மேலானவள் என்பதற்கு சந்தேகமென்ன? ஆதலால் நாமும் அவசியம் அந்த பூஷணத்தைத் தரிக்கவேண்டும். எனென்றால் மற்ற பூஷணங்களைவிட மேலானதும் இதற்கு விலையில்லாததுமான இந்த பூஷணத்தைத் தரிக்க வேண்டும். ஒரு ஸ்திரீ கற்பைக் காப்பாற்ற பிரயாசைப்படுவாளேயானால் அவள் திரிலோகத்தையும் ஜெயிக்கக்கூடியவள். இதில் சந்தேகமில்லை. எனென்றால் கற்பைக் காப்பாற்றுவது லேசானதல்ல. யுத்தத்தில் முன்னின்று யுத்தம்செய்யும் வீரனும் கற்பை காப்பாற்ற முன்நிற்கும் ஸ்திரீயும் ஒன்றே. யுத்த வீரனுக்கு ஆயுதமும் இவளுக்கு மனஉறுதியும் வேண்டும். ஆனால் சில சமயம் இரண்டு பேரும் உயிரை ஒரு பொருளாக மதிக்கமாட்டார்கள். கற்பைக் காப்பாற்றும் பெண்களுக்கு ஆரம்பகாலத்திலும் முடிவான காலத்திலும் பல சோதனைகள்

ஏற்படும். சோதனைகள் ஏற்படும் காலத்திலெல்லாம் ஸ்திரீ யானவள் சலிக்காமலும் மனவருத்தமடையாமலும் மனஉறுதி யினலும் புத்தி யுக்தியினலும் சோதனைகளை ஜெயித்து வருவாள். அப்படி ஜெயிக்கிறதே கல்லது. அதற்கு திருஷ்டாந்தம் நம் புராணங்களிலும் சரித்திரங்களிலும் எவ்வளவோ சொல்லப்பட்டிருக்கிறது. அதில் சில ஸ்திரீகளை இங்கே குறிப்பிடுகிறேன். அருந்ததி, அநுசூயை, சீதை, கோசலை, மண்டோதரி, தமயந்தி, சந்திரமதி இவர்களெல்லாம் மேலான பூஷணத்தை அடைந்தவர்கள். ஆனல் எல்லாப் பெண்களுக்கும் சோதனை வந்ததில்லை. இதில் முக்கியமானவர்களைக் குறிப்பிடுகிறேன். அருந்ததி, கல்லைக் கடலையாக்கினுள். அநுசூயை திருமூர்த்திகளையும் குழந்தைகளாக்கினுள். சந்திரமதி நெருப்பாற்றை குளிரப்பண்ணினுள். தமயந்தி வேடனை யெரித்தாள். சகோதரிகளை இவர்கள் எதனல் இக்காரியங்களைச் செய்தார்கள். தன்னையும் கற்பையும் காப்பாற்றும் பொருட்டென்றே இப்படி செய்திருக்கவேண்டும்.

மேற்கூறிய ஸ்திரீகள் இறந்துபோய் வெகுகாலமான போதிலும் அவர்கள் கீர்த்தி அப்படியே விளங்கிக்கொண்டிருக்கிறது. பூத உடம்பு அழிந்துபோனலும் புகழுடம்பு அப்படியே இருக்கிறது. ஆதலால் கற்பே மேலான பூஷணம் என்பதற்குச் சந்தேகமென்ன. கற்பைக் காப்பாற்ற பிரயாசைப்படுவது வீணல்ல. அதற்கு மன உறுதியும் விசாலமான அறிவும் இருந்தால் சமயோசிதம்போல யுக்திகள் தோன்றும். அதனல் சரியாய் நடக்க இடமுண்டாகும் புத்தியினத்தினல் நடந்துகொண்ட பெண்களின் கீர்த்தியெல்லாம் நாளது வரையிலும் அபகீர்த்தியாய் விளக்குகிறதென்பதற்கு சந்தேகமென்ன. அகல்யை என்னும் பெண்மணி தன்னுடைய புத்தியினத்தினல் கல்லாய்ப் போகும்படி சபிக்கப்பட்டாள். தேவகுருவின் மனைவியாகிய தாரை என்னும் பெண்மணி நாண

மில்லாதவளாய் நடந்து கொண்டதினால் எவராலும் பழிக்கப் பட்டாளென்பதும் யாவருக்கும் தெரிந்த விஷயம். தேவகுரு வானவர் மூக்காலமும் உணர்ந்தவராச்சுதே. ஏன் அத்தப் பெண்ணே விவாகம் செய்துகொண்டாரென்றும் கேள்விகள் கேழ்க்கப்படுகிறது. பெண்மணிகளே ஸ்திரீயினாலேயே புரு ஷனுக்கு நல்ல கீர்த்தி உண்டாகுவதும்தவிர குடும்பமும் வெகு சீக்கிரம் முன்னுக்குவரும் என்கிறதை எப்பொழுதும் ஞாபகத் தில் வைப்பது நல்லது. அபகீர்த்தியும் மானமீனமும் ரூணம் இல்லாத பெண்களினால் உண்டாகிறதென்று அறியவேண்டும். எப்பொருளுமில்லாமல் ஒரு உத்தமமான நாரி ஒருவனுக்குத் தினவியாய் ஏற்பட்டால் அது அவனுக்குப் பொன்மாரி என் பதற்கும் சந்தேகமில்லை. இதைப்போலக் கற்பு இல்லாதவ ளால் இருக்கமுடியாது. அவள் முகத்தில் மூத்தவன் வாசம் செய்கிறதும் சோதனைகளில் ஜெயிக்கமுடியாமல் அதற்கு உள் படவும் பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் சூரிய சந்தி ராள் உள்ளபரியந்தம் அபகீர்த்தி தேடமுடியும். பின்னும் தன் ஆத்மாவை கோரமாயும் பயங்கரமாயும் இருக்கப்பட்ட நரகாக்கினியில் தள்ளிக்கொண்டு வெகு வாதனையுடன் கஷ்டப் பட்டுக்கொண்டிருப்பாளே தவிர வேறென்ன செய்யமுடியும். சகோதரிகளே ஒவ்வொரு காலும் இரவில் நாம் படுக்கைக்குப் போகுமுன்னமே நம்முடைய கடமைகளை சரியாய் முறைவே ற்றினோமா அல்லது பிசகு செய்தோமா என்று தன்னைத் தானே விசாரித்து அறிந்துகொண்டு சரியாய் முறைவேறாமல் பிசகாயிருக்கும் பக்ஷத்தில் நாம் வணங்கும் பகவானிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டும் சரியாயிருக்கும் பக்ஷத்தில் கடவுளே மேலும் கிருபைசெய்யும்படி வேண்டி பிற்பாடு படுக் கைக்குப் போகவேண்டியது நலம்.

நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டியதென்னவென்றால் தன்னுடைய புருஷன் அங்கஹீனமாயிருந்தாலும் வியாதியா

யிருந்தாலும் பணம்சாளுயில்லாமல் ஏழையாயிருந்தாலும் அவனை அவமதிக்கக்கூடாது. புத்தியுள்ளவனில் தாழ்ந்தவனுயிருந்தால் தன்னுல் கூடிய வரையிலும் பூரண மனதுடன் அவனைத் திருத்த பிரயாசைப்படவேண்டும். எதற்காகவென்றால் புத்தியில்லாதவனுக்கு ஆச்மநஷ்டமுண்டாகும் மேலும் தரித்திரத்தை வலிவில் அழைத்துக்கொள்ளுவான். ஆதலால் இகலோக வாழ்வுக்கும் கேடுண்டாகும். நல்ல கீர்த்திக்கும் பங்கமுண்டாகும். ஆதலால் மனிதன் புத்திசாலியாயிருப்பதினுல் நல்ல கீர்த்தியும் இகலோக வாழ்வும் பரலோக பேரின்பமும் கிடைத்து சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கயிடமுண்டாகும். அப்படியே ஸ்திரீக்கும் புத்தி குறைவாயிருந்தால் புருஷன் சீர்திருத்தக் கடமைப்பட்டவன் என்று உணரவேண்டியது அவசியம். இப்படி கடக்கவேண்டியதிருக்க சில மனிதர்கள் வேறொரு விதமாய் சில புஸ்தகவ்களில் பதிவிரதா தன்மங்களோ விதித்திருக்கிறார்கள். எப்படியென்றால் புருஷன் எது சொன்னலும் சரி அது செய்யவேண்டுமென்றும் அவன் அசியாயமாய் அடித்தாலும் பட்டுக்கொள்ளவேண்டுமென்றும் என் அடித்தாயென்று கேட்கக்கூடாதென்றும் யாதொரு பதிலும் சொல்லக்கூடாதென்றும் எழுதியிருக்கிறார்கள் மேலும் புருஷன் அடித்தவுடனே சுவாமி உங்கள் கை நோகுமென்றும் சொல்லவேண்டுமாம். இதென்ன அசியாயம்! அவன் விபசாரம் செய்தாலும் சரி, கள்ளு குடித்தாலும் சரி, திருடினலும் சரி இவள் என் என்று கேட்கக்கூடாது. இப்படி எழுதியிருக்கிறதைப் படிக்கும்பொழுது உங்களுக்கு ஆச்சரியமாய் இருக்கிறதல்லவா? மேலும் ஜன்னி, பைத்தியம் முதலிய ரோகங்களினுல் அவன் அவளையும் கெட்ட வழக்கத்திற்குத் தூண்டக்கூடும். இந்த விஷயத்திற்கெல்லாம் அவன் யாதொன்றும் பேசாமல் சும்மாயிருக்கமுடியுமா என்று யோசித்தால் ஒருக்காலும் முடியாதென்றே விளங்கும். மேற்சொ

ன்னபடி புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி தற்காலத்து படித்த பெண்களால் அனுசரிக்க முடியாத காரியமென்று சொல்ல வேண்டும்.

என் முடியாதென்று கேள்வி வரக்கூடும். மனச்சாக்ஷியும் நீதியும் ஆணென்றும் பெண்ணென்றும் பேதமில்லாமல் கடவுள் சமமாய் அளித்திருக்கிறார் என்பது மறுக்கக்கூடாத விஷயம். நீதியும் தயவும் உள்ள கடவுள் பக்ஷபாதமில்லாமல் சரியாய் விதித்திருக்கிறதை ஒருவரும் தப்பிதம் என்று சொல்ல முடியாது. இப்படியிருக்கும்பக்ஷத்தில் மேற்கூறியபடி தர்குணமுள்ள புருஷனை ஸ்திரீ தன்னுலானமட்டும் சீர்திருத்தி கடமைப்பட்டவளானதினால் அவனை கேள்வி கேட்காமல் எப்படி காரியம் முடியும். ஆதலால் ஒழுங்கீனமுள்ள புருஷனை அவனுடைய பெண்சாதி திருத்தக்கடமைப்பட்டவளென்றே ஒப்புக்கொள்ளவேண்டும். இப்படி ஒப்புக்கொள்ளும்பொழுது அவள் கேள்வி கேட்டது பிசகென்று சொல்லக்கூடாது. பெண்மணிகளே நமது தேசத்து முதிய சகோதரிகள் சிலர் சொல்லுவதென்னவென்றால் பெண்கள் படிக்காத காலத்திலும் சண்டைக்காரிகளென்றும் படித்தகாலத்திலும் சண்டைக்காரிகளென்றும் சொல்லுகிறார்கள். இதை விளக்கும்பொருட்டு சில சமாசாரம் சொல்லுகிறேன். அதற்குக்காரணமென்னவென்றால் நான் மேற்சொன்ன தற்குணத்தில் ஏதாவது ஒன்று அல்லது அதைச்சார்ந்த ஏதாவது ஒரு சிறு குற்றம் அவனிடத்தில் காணும்பொழுது படித்த பெண்கள் அந்தக் குற்றங்களை விட்டுவிடும்படி அவனைச் சீர்திருத்தும்பொருட்டு அதை ஏன் அப்படிச்செய்தாய், இதை ஏன் இப்படிச்செய்தாய், எதற்காக அப்படிச்செய்யவேண்டும் என்று கேள்விகள் கேட்டால் புருஷன் சரியான பதில் சொல்லாமல் உனக்கென்ன நீ ஏன் அதைக் கேட்கிறாய் உன் வேலையைப் பார் உன் ஜோலியைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்காமல் சதா தொந்தரவு

செய்கிறாய், ஒன்றும் பேசாமல் வாயை மூடிக்கொண்டு இரு, இனிமேல் சளசள வனவளவென்று பேசினால் கண்டிப்பாய் அடிப்பேனென்று சொல்லுவான். இப்படிச் சொல்லும்பொ ழுது பேதமையான பெண் என்ன செய்வாள். பாவம் அவள் விதியை நொந்துகொண்டு சில சமயம் உள்ளே போய்விடு வாள். அந்தமட்டோடும் விடாமல் பின் தொடர்ந்து கொண் டேபோய் நான் புருஷன் அப்படித்தான் செய்வேன் எனினிஷ் டப்படித்தான் செய்வேன் உன்னிஷ்டப்படி ஒன்றும் செய்ய முடியாது. நீ தடுத்துச்சொல்வதாயிருந்தால் தாய் வீட்டுக்குப் போய்விடு இல்லாவிட்டால் சன்னியாசம் வாங்கிக்கொள்வேன் என்று பயமுறுத்துவான். இந்த விஷயத்தில் படித்தவளா யிருந்தால் அவளுக்குக் கோபமும் ஆத்திரமும் பொங்காமல் என்ன செய்யுமென்று நினைக்கிறீர்கள்? அவசியம் கோபம் வரக்கூடும். அப்படிக்கோபம் வரும்போது அவளைப் பொல் லாதவளென்றும் சண்டைக்காரி என்றும் எப்படிச் சொல்ல லாம்? மேலும் அவளைக்கேவலமாய் நினைப்பது பிசகல்லவா?

காரியமிப்படியிருக்க அவள் பொல்லாதவளாகிறது அவ ளுடைய குற்றமா அல்லது அவளுடைய புருஷனுடைய குற்றமா என்று விசாரித்தால் புருஷனுடைய குற்றமென்று சொல்லாமலே விளங்கும். மேலும் தற்காலத்தில் படித்த புருஷர்கள் பல இடத்திலும் கூட்டங்கூடி பெண்கள் படிக்க வேண்டுமென்று பிரசங்கம் செய்கிறார்கள். அப்படிச் செய்வது நமக்கும் சந்தோஷந்தான். இதனுடன் வேறொன்றையும் சேர்த்துப் படித்த புருஷர்கள் பிரசங்கம் செய்யலாமென்று நினைக் கிறேன். எப்படியென்றால் புருஷர்கள் பெண்களை இம்மிக் கூடாதென்றும் அடிமைபோல் நடத்தாமல் அன்பாய் நடத் தவேண்டுமென்றும் தாய் தங்கச்சிகள் கொடுமையுள்ளவர்களா யிருந்தால் அவர்கள் பேச்சைக் கேட்டு திட்டுவதும் அடிப்பது மாய் இருக்காமல் பெண்சாதியை தன்னுடன் சமமென்று

னைக்கும்படி வற்புறுத்தவேண்டும். இந்த விஷயங்களைக் குறித்து நாம் சொல்வதைவிட படித்த புருஷர்கள் சொல்வது மேலாக மனைப்பார்கள். நம்முடைய தேசமும் குடும்பமும் க்ஷேமமடைய வேண்டுமானால் பெண்களுடைய புத்திக்கும் படிப்புக்கும் தகுந்தபடி அவர்களுக்கு தகுந்த சுதந்திரங்கள் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் குடும்பம் சீர்படமாட்டாது. எப்படியென்றால் அரசனுடைய தயவை பிரஜைகளும் பிரஜைகளுடைய திருப்தியை அரசனும் கோருகிறார்களோ அப்படி குடும்பத்திலும் அவனுடைய தயவை அவள் எதிர்பார்க்கவேண்டும். அவளுடைய பிரியத்தையும் இவன் எதிர்பார்க்கவேண்டும். குடும்பத்தில் ஒருவன் இஷ்டப்படியே நடக்கிறதென்றால் பிரயாசைப்படும். சுருக்கமாக ஒன்று சொல்லுகிறேன். நம்முடைய தேசத்தில் ஸ்திரீயின் புத்திக்கும் படிப்புக்கும் தகுந்த சுதந்திரம் கொடுக்காதவரையில் நம் தேசத்து ஜனங்களுக்கு ராஜாங்கத்திலும் தகுந்த சுதந்திரம் கொடுக்கமாட்டார்கள் என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்தால் தன்னை மதிக்கமாட்டார்களென்று சொல்வது மூடபுத்தியல்லவா? ஆதலால் இந்த மூடபுத்தி நீங்கும் வரையில் ஆங்கிலேயர்கள் நம்முடைய தேசத்து ஜனங்களுக்கு சுதந்திரம் கொடுக்க மறுக்காமல் என்ன செய்வார்கள். தற்காலத்தில் சில படித்த பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்திருக்கிறார்கள் ராஜாங்கத்திலும் சில ஜனங்களுக்கு சுதந்திரம் கொடுத்துவருகிறார்கள். நம் தேசத்துப்பெண்களைக் குறித்து ஒருவருடன் ஒருவர் வம்பும் வசைச் சொல்லும் சொல்லும்பொழுது உம் உம் என்று கேட்டுக்கொண்டிருக்காமல் உடனே அவர்களைக் கண்டிக்கவேண்டும். அப்படிக் கண்டித்தால் வம்பர் மகாசபை குறைந்துகொண்டே வரும்.

நான் சில சமயம் சகோதரிகளோடு சம்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இல்லற தர்மத்தைக் குறித்து

போதித்தேன். அப்பொழுது சகோதரிகள் நீங்கள் இல்லறத்தில் பொய் பேசாமல் இருக்கும்படி போதிப்பது உத்தமம்தான் ஆனால் புருஷனிடத்தில் பொய் பேசாமல் இருக்க சாத்தியப் படவில்லையென்று சொன்னார்கள். என், எதற்காகப் பொய் கூறவேண்டும்? என்னால் சாத்தியமானால் சமாதானம் சொல்லக்கூடுமென்று சொன்னேன். அதற்கு அவர்கள் தன்னுடைய புருஷன் உன்னிடத்தில் பணமிருந்தால் கொடு பிற்பாடு உனக்குத் தருகிறேன் என்று சொல்லி வாங்கிக்கொண்டு பிற்பாடு கேட்டால் உனக்கென்னத்திற்குப் பணம் என்று ஏமாற்றுகிறார்கள் பிற்பாடு மறுபடியும் பணம் கேட்டால் பணமிருக்கும்பொழுதே பணமில்லை என்று பொய்தானே சொல்ல வேண்டும் என்றார்கள். மேலும் ஒரு பண்டம் பதார்த்தம் வாங்கிக்கொடுக்கும்படி கேட்டால் வாங்கிக்கொடுக்கிறேனென்று சொல்லாமல் பலவிதமான ஆக்ஷேபனை சொல்லுகிறார்கள். இப்படி பல விஷயங்களிலும் பொய் பேசும்படி ஏற்படுகிறது. இதற்கு நாங்கள் என்ன செய்கிறதென்று சொல்வது சரியே. கேவலம் பேதமையுள்ள பெண்களிடத்தில் பொய்பேசி ஏமாற்றுவது புருஷனுடைய சுபாவம் என்று இப்பொழுது வினங்குகிறது. நம் தேசத்துப் புருஷர்கள் இப்படி பொய்பேசி ஏமாற்றாமல் பேதமையான பெண்களைக் காப்பாற்றுவது கடமை என்று உரைவேண்டும். இப்படி உண்மை தலையில் குடும்பத்திலுள்ள இன்பமும் சந்தோஷமும் குறைந்துபோகும். மேலும் நம் தேசத்து சகோதரிகளுக்கு பிரசவகாலத்தில் மேல்நாட்டு ஸ்திரீகளைப்போல சௌக்கியங்கள் கிடையாது. பிரசவத்திற்குப் பின்னும் வெகு பாடுபட்டுப் பிள்ளைகளை வளர்க்கிறார்கள். குழந்தைக்காகப் பத்தியமிருப்பார்கள். இரவில் குழந்தை வியாதியினால் நித்திரையில்லாமல் கஷ்டப்படும்பொழுது இவர்களும் நித்திரை விழிப்பார்கள். அவள் புருஷனோவென்றால் நன்றாய்த் தூங்குவான். பெண் தனக்கு நித்திரையில்லாமல் இருக்கிறபடியால் பல

வியாதிகளுக்கு உள்ளாவாள். இத்துடன் தரித்திரம் குடி கொண்டால் சொல்லக்கூடாத துயரம் அனுபவிப்பாள். இதற்குமேல் தன் புருஷன் அன்பில்லாதவனுய் இருந்தால் என்ன செய்வாள். பாவம், ஸ்திரீயின் கஷ்டங்கள் எண்ணத்தொலையாது, எடு இடங்கொள்ளாது. ஆதலால் பரஸ்பரம் அன்பு இருக்கவேண்டும். பரஸ்பரம் அன்பில்லாவிட்டால் விவாகம் செய்து கொண்டதினுல் என்ன சந்தோஷமோ அந்த சந்தோஷம் இல்லாமற் போய்விடும். ஆதலால் ஒருவர்க்கொருவர் அன்பாயிருக்கவேண்டும். இது முக்கியமான விஷயம் (தரை மகளானலும் பாரி உடையவனுக்கு அவள் ஊழியக்காரி) என்பது உண்மையும் அன்பும் உள்ளவனுக்கேதகும். உண்மையில்லாதவனே சீர்திருத்தும் பொருட்டு உண்மையாகப் பாடுபட்டாலும் அவள் கற்பென்ற மேலான பூஷணத்தை தரிக்கின்றுள் என்பதை மறக்கக்கூடாது. இத்துடன் இந்த வியாசத்தை நிறுத்துகிறேன். சகோதரிகளனைவரும் அடுத்த இங்கட் ஜூமை அவசியம் வரவேண்டும்.

6. ஹிந்து ஸ்திரீகளின் சனுதன தர்மம்.

சகோதரிகளே! பெண்களுக்கு கல்வியும் கற்பும் எவ்வளவு அவசியமோ அப்படியே நம்முடைய தேசத்தின் ஸனுதன தர்மங்களும் அவசியம் என்று நினைக்கிறேன். இன்றைய தினம் ஸனுதன தர்மங்களைப்பற்றி உபந்யாசம் செய்ய விரும்புகிறேன். இல்லாளகத்திருக்க இல்லாததொன்று இல்லே, என்னும் முதுமொழிக்கிணங்க இல்லாளே காலையில் எழுந்து வீட்டைச் சுத்திசெய்து அலங்காரமாய் வைத்துக்கொள்ளக் கடமைப்பட்டவள். ஆதலால் காலையில் எழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு முகம் சுத்திசெய்து நெற்றியில் குங்குமம் தரித்துக்கொள்ளவேண்டும். தலைமயிர்களை நன்றுய்க்கோதி முடிந்துகொள்ளவேண்டும். பிற்பாடு வீட்டு வேலைக்கு ஆரம்பம்

செய்யவேண்டும். பாகசாலையை யாகசாலையாக மதித்து நன்
றாய் சுத்தம் செய்யவேண்டும். அடுப்புத்தான் பெண்களுக்கு
ஓமகுண்டம் என்பதை மறந்துவிடக்கூடாது. பெண்களுக்கு
தனிப்பட ஓமம் முதலிய காரியங்களுக்கு அதிகாமில்லாத
தால் பாகசாலையும் அடுப்பும்தான் யெக்ஞசாலை என்று சொன்
னேன். ஸ்திரீயானவள் தன்னுடைய வேலைகளே சாமதான
மாகவும் சோம்பலில்லாமலும் சிறைவேற்றக்கூடியவள். ஆத
லால் பகலின் சாணியைக்கொண்டு சாம்பல் முதலிய குப்பை
களை விலக்கி சுத்தமாய் மெழுகவேண்டும். பிற்பாடு பூஜை
செய்யுமிடம், துளசிமடம், சாப்பிடுமிடம் முறையே மெழுகி
விசித்திரமான கோலங்கள் போடவேண்டும். கோலங்கள்
போடுவதில் புத்தி விசாலமாகும் என்பதற்கு சந்தேகமில்லை.
நம் முன்னோர்கள் துளசியை வைத்து பயிர் செய்தார்கள் வீட்
டில் துளசியைப் பயிர்செய்தால் புண்ணியமென்றும், பாவங்
களைத்நிர்க்குமென்றும் நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆத
லால் துளசியைப் பயிர்செய்வது இரண்டு விதமான காரியங்
களுக்கு நல்லதென்று சொல்லும்படியாயிருக்கிறது. என்ன
வென்றால் துளசியைப் பயிர் செய்தால் தொத்து வியாதிகளை
விலக்குமென்றும் கொசுக்கள் வாவிடாமல் தடுக்குமென்றும்
தற்காலத்து வைத்தியர்கள் கண்டு பரிசோதித்திருக்கிறார்கள்.
இதம், பரம் இரண்டுக்கும் துளசியைப் பயிர் செய்வது நல்லது
என்று விளங்குகிறது. ஆதலால் அவசியம் சுகாதாரத்தை
முன்னிட்டாவது பயிர் செய்யவேண்டும். துளசி பூஜைக்கும்
மருந்துக்கும் உபயோகப்படும் என்பதை ஞாபகத்தில் வைக்க
வேண்டும். சோம்பலில்லாமல் காலைபோஜனம் தயார்செய்து
கொடுத்துவிட்டு பின்பு பகல் சமயல் வேலையை செத்தையாய்
செய்யவேண்டும். அதிதிகள் வந்தால் பெண்கள் சிடு, சிடு,
வெடு, வெடு என்று விழாமல் தங்களால் ஆனமட்டும் உபசரி
த்து இன்சொல் சொல்லவேண்டும். தன் வீட்டில் உபயோகப்
படும் பாத்திரங்களை நன்றாய் சுத்திசெய்து வைக்கவேண்டும்.

வருஷா வருஷம் வரக்கூடிய பண்டிகைகளிலும் சொர்த் தாதிகளிலும் சாத்தியமான வரையில் முயற்சி எடுத்துக்கொ ண்டு வேலைகள் செய்யவேண்டும். மேலும் ஒவ்வொரு வேலை யும் துவக்கும்பொழுது கடவுளை தியானம்செய்து பிற்பாடு ஆரம்பிக்கவேண்டும். தற்காலத்தில் லௌகீகங்களை ஜாஸ்தி யாய் ஜனங்கள் அனுசரிக்கிறபடியால், வைதிக காரியங்கள் குறைவாய் இருக்கிறதென்று நினைக்க வேண்டியிருக்கிறது. அதில் பூஜை, பிராமண சந்தர்ப்பணை, தானம், தருமம் இதெ ல்லாம் கிரஸ்தாஸ்ரமத்தில் இருக்கிறவர்கள் நடத்தவேண்டும். தர்மம்செய்வது அவசியம் என்று யாவருக்கும் தெரிந்தவிஷயம் தர்மம், ராஜன், சோரன், அக்கினி இந்த நால்வரும் சகோதர ரென்று வேடிக்கையாய்ச் சிலர் சொல்லுவதுண்டு. ஆதலால் தர்மத்திற்கு கொடுக்கவேண்டிய பாகம் கொடுக்காவிட்டால் பாக்கி மூவரும் ஜேஷ்டனுடைய பாகத்தையும் சேர்த்து பங் கிட்டுக்கொள்வார்கள். ஆதலால் தருமம் என்கிற ஜேஷ்ட பாகத்தை நாம் கொடுத்துவிட வேண்டியது அவசியம். அப் படிக் கொடுத்தால் பாக்கி மூவரும் நம்மைப் பகைக்காமல் சந்தோஷப்பட்டுக்கொண்டு போய்விடுவார்கள். இதன் உண் மைகளை தெரிந்துகொள்ளாமல் சிலபேர் விருதாவாக கெட்டுப் போகிறதும்தவிர மற்றவர்களையும் கெடுக்கத் தலைப்படுகிறார் கள் எப்படியென்றால் அதில் என்ன இருக்கிறது இதில் என்ன இருக்கிறது தானமென்னத்திற்கு தருமம் என்னத் திற்கு என்று பிதற்றிக்கொண்டு எல்லாம் ஒன்றுதான் எல்லாம் பிரம்மம்தான் என்ற அகம்பாவத்தில் விழுந்து கெட்டுப்போ காமல் உண்மையை விசாரித்து தெரிந்துகொண்டு சிரத்தையாக் காரியங்களை செய்துவந்தால் சித்தசுத்தி உண்டாகு மென்று விதித்திருப்பதால் அவசியம் செய்யவேண்டும். நம் தேசத்து சனாதன தர்மங்களை செய்து வருவதால் தர்மம் தலை காக்கும் என்பது பொய்யல்ல இது உண்மைதான். இந்த விஷயங்களை சந்தேகமில்லாமல் நாம் நம்பவேண்டும். நம்பிக்

செய்தால் அனுபவத்தில் நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம். பிரகஸ்தாச்சிரமத்திலிருக்கும் ஸ்திரீ வீட்டை அலங்காரமாக வைத்துக்கொண்டு சந்தியா காலத்தில் விளக்கேற்றி வைக்க வேண்டும். தன் புருஷன் வீட்டிலில்லாத நேரத்தில் பந்துக்களாவது தன் புருஷன் சினேகிதனாவது வீட்டிற்கு வந்தால் தஷ்ட மிருகங்களைக்கண்டு வெறுப்புற்று ஓடுவதுபோல ஓடிப் போய்விடாமல் எங்கே வந்தார்களென்று தெரிந்துகொண்டு அவர்களை உபசரணை செய்யவேண்டும். புருஷன் வீட்டில் இல்லையென்றுகூட சொல்லாமல் ஓடிப்போய் உள்ளே நுழைந்துகொண்டால் வந்தவர்களுக்கு யார் பதில் சொல்லுவார்களோ தெரியவில்லை. புருஷன் வந்த பிற்பாடு என்ன சொல்லுவாள். ஒன்றும் சொல்லமுடியாமல் இன்னார் வந்தாரென்று மாத்திரம் தெரிவிப்பாள். எதற்காக வந்தார்களென்று புருஷன் தன் புத்தி கோசரத்தால் தெரிந்துகொள்ள வேண்டுமே தவிர வேறே வழியில்லை. இவளுக்குத் தூண்டியிருந்தும் பிரயோஜனமென்ன? ஒன்றுமில்லை. ஆதலால் வந்தவர்களைச் சங்கதி விசாரித்துத் தெரிந்துகொள்வதே சரியென்று நினைக்கிறேன். மேலும் இல்லற தர்மத்திற்கு சனாதன தர்மமும் அவசியம் என்பதற்கு சந்தேகமில்லை. இத்துடன் இந்த வியாசத்தை நிறுத்துகிறேன். சகோதரிகளனைவரும் அடுத்த மாதம் அவசியம் வரவேண்டும்.

7. தெய்வபக்தி அவசியம்.

எனதருமையான சகோதரிகளே, பெண்களுக்கு கல்வி, கற்பு, சுகாதாரம், தருமம் இதெல்லாம் எப்படி அவசியமோ அப்படியே எல்லாவற்றிற்கும் மூல காரணமான தெய்வபக்தி அவசியம். தெய்வபக்தி பிறக்க [illegible] பக்தி தாய் தந்தை பக்தி இதெல்லாம் [illegible] உண்டாகும் [illegible] சந்தேகமில்லை. எல்லா ஐஸ்வர்யமும் உலகிலுள்ள எல்லாவற்றை

யும் நம்மையும் படைத்தவன் ஒருவன் உண்டென்றே வேதங்கள் முறையிடுகிறதும் தவிர பொதுவாக எல்லா ஜனங்களும் கடவுளிருக்கிறாரென்றே மதித்து வணங்குகிறார்கள். வெகு காலமாக கடவுளே பின்னப்படுத்தி பலவிதமாய் வணங்கி பல மதங்கள் ஏற்படுத்தியிருப்பதால் அவைகளே கண்டிக்க நம்மால் சாத்தியமில்லாத காரியம். ஆதலால் அவரவர்கள் மதாசாரப்படி வணங்கும் கடவுளே சரிவர வணங்கி பக்தி செய்யவேண்டுமென்பதே என்னுடைய கருத்து. நாம் தினந்தோறும் கடவுளே வணங்கவேண்டும். தியான செபங்களும் செய்யவேண்டும். எனென்றால் அற்பமான வயிற்றுப் பிழைப்புக்காக எவ்வளவோ பிரயாசை எடுத்துக்கொள்ளுகிறோம். கொஞ்சகாலத்தில் நடத்தப்போகும் இக்காரியங்களில் இவ்வளவு சிரத்தை இருக்கும்பொழுது முடிவில்லாத சுகத்தையடையும் ஆத்மாவுக்காக நாம் எவ்வளவு பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை யோசித்துப் பாருங்கள். அப்படி யோசிக்கும் பொழுது முடிவில்லாத சுகத்தையடையப்போகும் ஆத்மாவுக்காக நாம் தேவனே பக்தி செய்யவேண்டுமென்பதே விளங்கும். இப்பொழுதென்ன நமக்கு வயதாய்விட்டதா இல்லையே, இப்பொழுதென்ன அவசரம் பிற்காலத்திற்காக இப்பொழுதே கவலை எடுத்துக்கொள்ளவேண்டியது என்று சும்மாயிருப்பது பிசகென்றே நினைக்கவேண்டும். எப்படி என்றால் ராத்திரி வேண்டிய சாமான்களே பகலில் கடையில் வாங்கி வைக்கிறோம். ஏன் அப்படி வாங்கிவைக்கிறோம்? குறித்த நேரம் முடிந்தவுடன் கடையை மூடிவிடுகிறார்கள். தற்சமயம் வேண்டுமென்றால் சாமான் கிடைக்காது. ஆதலால் பகலில் சாமான் வாங்கிவைக்கிறோம். மழைகாலம் வந்தால் கஷ்டமாயிருக்கும் இதுவும் உண்மையே யௌவன காலத்தில் தன் குடும்பத்திற்கு போதுமான சம்பாத்தியம் செய்யவேண்டுமென்று பால்ய வயதிலேயே அதற்கு சாதகமான படிப்பு படிக்கிறான். எல் பிற்காலமாகவேண்டிய வேலைக்கு முன்னாலேயே முயற்சி எடு

த்துக்கொள்ளுகிறதென்ற இப்பொழுது விளங்குகிறதல்ல வா? நித்தன காலத்திற்கும் ஆகவேண்டியதை யெளவன காலத்தில் தேடிவைக்கிறோம். அதைப்போலவே பரலோகத் திற்கு ஆகவேண்டிய காரியங்களை இகலோகத்திலேயே தேட வேண்டும். மேலும் மரணத்திற்கு காலம் நிர்ணயிக்க முடி யாத காரியம். ஆதலால் இந்த தேகம் இருக்கும்பொழுதே பக வானை பக்திசெய்து அவருடைய கிருபையை பெற்றுக்கொண் டால் நல்லதென்று நினைக்கிறேன்.

கடவுளை பக்திசெய்யும் விதத்தில் எத்தனையோ மதங்க ளில் எத்தனையோ விதங்களாய் சொல்லி இருக்கிறார்கள். இரு ந்தாலும் நம் சகோதரிகளுக்கு சுலபமாய் பக்திசெய்யும் விதம் சொல்லவேண்டியது அவசியம். எப்படி என்றால் பெண்கள் பாத்திரங்கள் சுத்தி செய்யும்பொழுது அதின்மேலே சுத்தி செய்வதைவிட உள்ளே நன்றாய் நாம் தேய்த்து அழுக்கெடுக்க பிரயாசை எடுத்துக்கொள்ளுகிறோம் அல்லவா? அப்படி சுத் திசெய்யும்பொழுது, பகவானே; என்னுடைய சித்தத்தை நன்றாய் உம்முடைய கிருபையினாலும் கிருணையினாலும் சுத்த ப்படுத்த வேண்டுமென்று வேண்டிக்கொள்வது உத்தமம். எனென்றால் யேக்காயும் சோப்பும்போட்டு நாம் மேலே தேய் த்துக்கொள்ளுகிறோம் ஆனால் உள்ளே சுத்தம் செய்துகொ ள்ள நம்மால் முடியாத காரியம் வீடு கூட்டி குப்பை அள்ளும் பொழுதும் பகவானே என் உள்ளத்தில் அடிக்கடி தோன்றும் கெட்ட எண்ணங்களை விலக்கி சுத்தமான ஞானம் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளவேண்டும். மேலும் மனித சுபாவமானது எப்பொழுதும் கெடுதலுள்ளது சில சமயம் மா யையினுடைய தூண்டுதலினால் கெட்ட காரியம் செய்ய சம்ம திக்கும். என் சம்மதிக்கும்? மாயையானது கடவுள் நமக்கு வெளிச்சமாய்க் கொடுத்திருக்கும் மனச்சாக்ஷியை மறைத்தி விடும். அப்படி மறைக்கும்பொழுது வெகுகெடுதல் கெட்ட

காரியம் செய்ய தவிப்பதுவோமென்பதற்கு சந்தேகமில்லை ஆதலால் நம் முன்னோர்களுக்கு பகவத்கீதையில் பகவான் அதை எப்படி விளக்கி இருக்கிறாரென்பதை கொஞ்சம் சொல்லுகிறேன் மாயையானது பொல்லாததென்றும் அது மனிதர்களை வெகுசீக்கிரம் தன்வலையில் போட்டுக்கொள்ளுமென்றும் மோக்ஷ மார்க்கத்திற்கு விரோதமானதென்றும் மனிதர்களை அடிமையாக்கிக் கொள்ளுகிறதற்குமுன் மனிதர்கள் அதை தங்களுக்கு அடிமையாக்கிக் கொள்ளவேண்டுமென்றும் அது அவருடைய கிருபையினால் முடியுமென்றும் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார். இந்த விஷயத்தில் கடவுளை பக்தி செய்யாதிருந்தால் அது யாருடைய குற்றமென்பது இப்போது விளங்குகிறதல்லவா? அப்படி பக்தி செய்யாதிருப்பது நம்முடைய குற்றம்தான். ஆதலால் கடவுளை அவசியம் ஒவ்வொருவரும் தன ஆத்மரக்ஷிப்புக்காக அவரை பக்தி செய்யவேண்டும். இது முக்கியமான விஷயம்.

மேலும் நாம் சரியாய் பக்திசெய்கிறோமா இல்லையாவென்று யாரிடத்தில் கேட்கவேண்டும்? அது நமது மனச்சாக்ஷியைக்கேட்கவேண்டும்! எப்படி கேட்கவேண்டுமென்றால் நான் சரியாக பக்தி செய்கிறேனு இல்லையா ஜெபதபம் சரியாய் செய்கிறேனு நல்ல கடத்தையா யிருக்கிறேனு நான் மாயைக்கு அடிமையா அல்லது பகவானுக்கு அடிமையா என்று இப்படி கேட்டுத் தெரிந்துகொண்டால் தன் மனச்சாக்ஷியே தனக்கு நன்றாய் விளக்கும். அதில் கொஞ்சம் சீர்திருந்த இடமுண்டாகும். மேலும் குடும்பங்களில் பலவிதமான கஷ்டநஷ்டங்களும் வியாதிகளும் வரும்பொழுது கடவுளை நினைத்தே அதற்கு முயற்சி செய்யவேண்டும். இப்படி கடவுளை நினைக்காமல் மருந்து கொடுக்கக்கூடாது. வீதி என்றும் வைத்தியர்கள் சொல்லிக்கொண்டு முயற்சி செய்யாமல்கூட இருந்துவிடுகிறார்கள். அது தப்பான காரியம் மாயையான பிசாசுகாம் கல்ல வழியில் போ

கும்பொழுது அந்த வழியை மறிக்கும், அதை ஜயிக்க நமக்கு பகவானுடைய பலம் வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது.

பக்தி செய்யும்பொழுது சேர்ப்பக்தி செய்யக்கூடாதென்று விதிக்கப்பட்டிருப்பதை அவசியம் கவனிக்கவேண்டும். சேர பக்தி என்றால் என்ன? சேரபக்தி என்றால் சாதாரணமாய் தன் குலசாரப்படி பக்திசெய்யும்பொழுது வேறொருவர் வந்து இன்னொரு விதமாய் பக்திசெய்யும்படி தூண்டுவார்கள் சரி என்று அந்த விதம் பக்தி செய்யும்பொழுதே மற்றொருவர் வந்து நான் சொல்லுகிற பஞ்சாக்ஷரம் நல்லதென்று சொல்லுவார்கள், வேறொருவர் வந்து அஷ்டாக்ஷரம்தான் நல்லதென்று சொல்லுவார் மேலும் ஒலர் தாரகநாமம் நல்லதென்று சொல்லுவார் இன்னும் ஒலர் கோபுர தரிசனம் போதுமென்பார்கள் வேறொருவர் க்ஷேத்ர ஸ்தானம் நல்லதென்பார் மற்றொருவர் சேதுக்கரைதான் பாவம் ஒழிக்க சுலபமான தென்று சொல்லுவார் இப்படிப் பலவிதமாய் பக்திசெய்யச் சொன்னால் பக்தனுக்கு மன உறுதி இல்லாமல் ஆயுள் முழுவதும் இதில் கொஞ்சம் அதில் கொஞ்சம் பக்தி செய்து பிற்பாடு மன நிருப்தி இல்லாமல் அசீயாயமாய்க் கெட்டுப்போவான் மன உறுதியும் கெட்டுப்போகும் பலபேர் பலதினுசு சொன்னாலும் கடவுள் ஒருவர்தான் என்று பகவத்கீதையில் பகவான் சொன்னதை மறக்காமல் எல்லாவற்றிலும் நிறைந்தவராதலால் பரிபூரணரென்று பேர்படைத்திருக்கிறார். ஆதலால் எங்கும் நிறைந்தவரையே பக்தி செய்கிறோமென்று நினைத்து பக்தி செய்யவேண்டும். உண்மை இப்படி இருக்க வேறொரு விதமாய் பக்திசெய்யும்படி தூண்டுகிறவர்களை சாதுர்யமான வகையில் தனக்குத் தெரிந்ததைச் சொல்லி சமாதானப்படுத்திவிட்டு தன்னுடைய பக்தியை தப்பாமல் தான் செய்ய வேண்டும்.

பக்தியில்லாமல் முக்தி யில்லை என்பதை உணரவேண்டும். கற்புள்ளவள் விவாகமான பிற்பாடு இதைவிட வேறொரு புருஷன் கன்முயிருந்தாலும் அவனை மதிக்கமாட்டான். அது போலவே விபசார பக்திசெய்யாமல் வீட்டிலிருந்துகொண்டு உண்மையான பகவானை தெரிந்துகொண்டு பக்தி செய்வதே மேலானது. சகோதரிகளே நம்முடைய மார்க்க சங்கதிகளில் விக்கிரக வணக்கமிருப்பதை மேல்நாட்டார் பழிக்கிறார்களென்பது உண்மை. ஆனால் விக்கிரக வணக்கம் நமக்கு ஞானம் வர மூலகாரணமென்று நம் கிரந்தங்களில் விதித்திருக்கிறார்கள். அதாவது பொருளைக் காட்டி பொருளை விளக்குவது போல நமக்கு காட்டியிருக்கிறார்களே தவிர வேறொன்றுமில்லை. எப்படி என்றால் பகவான் நம்மை எப்பொழுதும் பார்க்கிறார். நாம் பகவானைக் கண்ணால் காணமுடியாது. நாம் பகவானைக் காணவேண்டுமென்றால் ஞானக்கண்ணால் அல்லது மனக்கண்ணால் பார்க்க முடியும். ஆதலால் எங்கும் நிறைந்தவர் விக்கிரகத்திலும் தம்மை நாம் பார்த்து தரிசிக்கும்பொருட்டும் நம்மை திருப்திசெய்விக்கும் பொருட்டும் அதில் தங்குகிறார் என்று நாம் நினைத்து பூஜைகள் செய்யவேண்டும். பூரணமான ஞானம் உதித்த பிற்பாடு விக்கிரசாராதனை வேண்டியதில்லை என்று சொல்லியிருக்கிறதை அறிவில்லாத சாதாரண ஜனங்களாகிய நமக்குச் சொன்னதாக நாம் அர்த்தம் செய்யக் கூடாது. நம்முடைய மனம் எவ்வளவு தூரம் திருப்தியில்லாமலிருக்கிறதோ அவ்வளவு தூரம் மனத்திருப்தி நமக்கு வேண்டுமென்று நாம் தகுந்தபடி பகவானை வணங்கி பக்தி செய்ய வேண்டும். மேலும் நம் புராணங்களிலும் சாஸ்திரங்களிலும் இன்னும் பல கிரந்தங்களிலும் கடவுளைக்குறித்து பலவிதமாய் சொல்லியிருந்தால் ஒரே ஒரு கடவுளைத்தான் குறித்திருக்கிறதென்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

பகவானை பக்தி செய்யும்பொழுதும், கம்மா யிருக்கும்

பொழுதும், ஒரு அபிமானமும் ஒன்றின்மேலும் ஆசையும் இருக்கக்கூடாதென்ற சிலர் சொல்லுவதும் சில புஸ்தகங்களே வாசிப்பதும் சரியாயிருக்கிறபடியால் நாம் அதையே ஜாஸ்தி கவனிக்காமல் சிற்றின்ப ஆசைகளே, திருப்தியாய் அனுபவித்து பேரின்பம் சேரவேண்டுமென்கிறதையே கவனிக்கவேண்டும். ஆதலால் சிற்றின்பத்திற்கு சாதகமானதை நாம் பகவானிடத்திலேயே பெற்றுக்கொள்ளவேண்டும். ஒழுங்காக வரங்கள் கேட்டால் அவர் அவசியம் அவர் கொடுப்பார். நாம் சந்தோஷமாய் அனுபவித்து, பிற்பாடு அவரிடத்திற்கு போக வேண்டும். இதுதான் சாதாரணமான மனிதர்கள் செய்யும் பக்தி. இப்படி யில்லாமல் நம் மனத்திலுதித்த ஆசைகளே அடக்கி வைத்திருப்பதைவிட, அனுபவித்து தீர்ப்பதே நல்லது. இசற்கு திருஷ்டாந்த மென்னவென்றால் நம்முடைய பிள்ளைகள் நாமிடும் கட்டளையை மீறாமல் நடந்து நம்மை சந்தோஷபடுத்தும்பொழுது முக்கியமாய் தனக்குவேண்டும் பதார்த்தம் நம்மைக் கேட்காமல் யாரைக் கேட்கும்? அப்படி வேண்டும் பதார்த்தங்களே நம்மைக் கேட்காமல் மனதில் நினைத்துகொண்டேயிருந்தால் நமக்குத் தெரியாது. தெரிந்தாலும் நமக்கு கொடுக்கவேண்டும் என்று தோன்றலது தர்மம். அது நம்மை கேட்க பயப்படுவதை நாம் அறிந்தால் பச்சாதாபப்படுவோமே சவிர வேறென்ன செய்வோம் குழந்தைகளே கண்டிக்கமாட்டோம். இந்த பதார்த்தம் கேட்டால் நான் கொடுக்கமாட்டேனு என்றும் சொல்லுவோம் அதைப்போல நமக்குத் தோன்றும் ஆசைகளே முதலில் யுக்தமான ஆசைதானுவென்று யோசித்து பிற்பாடு பகவானிடத்தில் வரம் கேட்கவேண்டும் யுக்தமில்லாத ஆசைகளே நமக்கு அனுக்கிரகம் செய்யும்படி நாம் பகவானை வரம் கேட்கக்கூடாது. எப்படி யென்றால் ஒருவனைக் கொலை செய்யவேண்டுமென்றும் ஒருவன் பொருளைத் திருடவேண்டுமென்றும் ஒருவனை அடிப்பதற்கும் உள்ள கெட்ட ஆசைகளே நிறைவேற்றும்படி பகவான் அனுக்கிரகம் செய்யும்

படி நாம் பகவானை வரம் கேட்கக்கூடாது. எப்படி யென்றால் ஒருவனைக் கொலைசெய்யவேண்டுமென்றும் ஒருவன் பொருளைத்திருடவேண்டுமென்றும் ஒருவனை அடிப்பதற்கும் உள்ள கெட்ட ஆசைகளை நிறைவேற்றும்படி பகவானை அனுக்கிரகம் செய்யும்படி கேட்கக்கூடாது. அப்படி தப்பாக வரம் கேட்டால் தெய்வம் சகாயம் செய்யாமல் நன்றாய் சிட்சிக்குமேதவிர அனுக்கிரகம் செய்யமாட்டாது. நம்முடைய பிள்ளைகள் தனக்கு வேண்டும் பதார்த்தம் கேட்டால், நாம் கொடுப்போமே தவிர அடுத்தவீட்டுப் பிள்ளைகளை அடிக்கவேண்டும் என்று நம்மை உத்தரவு கேட்டால் சிட்சிப்போம். ஆதலால், மேற் சொன்ன மாதிரி பக்தி செய்வதே சாதாரணமாய் பக்தி செய்யும் முறை. நாம் நினைத்தோறும் பகவானை பக்திசெய்யும்பொழுதும் வணங்கும்பொழுதும் பகவானே எனக்கு இந்த உலகத்திலும் உதவிபுரிந்து பரலோகத்திலும் இடம் கிடைக்கும்படி அனுக்கிரகம் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கவேண்டும். இதுதான் சுலபமான பக்திமுறை. ஆதலால் சகோதரிகளே நாம செய்யும் நல்ல காரியங்களை அவர் ஆசீர்வதிக்கும்படி நாம் சதா பிரார்த்திக்கவேண்டும். இந்த உபக்கியாசங்களை அவர் மனமுவந்து ஆசீர்வதிக்கும்படி நான் பகவானைப் பணிந்துகொண்டு பிரார்த்திக்கிறேன்.

8. பால்ய விவாகம் சரியானதா.

சகோதரிகளே! தற்காலம் நம்முடைய தேசத்தில் சிறு பெண்களுக்கு விவாகம் செய்வதை அவசியம் தடுக்கவேண்டும். என் தடுக்கவேண்டுமென்றால் பால்ய விவாகம் அநேக இடைஞ்சலுக்கு மூலகாரணமாயிருப்பதும் தவிர முக்கியமாய் பெண்கள் படிப்புக்கு விகாதமாயிருக்கிறது. இதை வெகு பிரயாசையோடு தடுக்கவேண்டுமென்பதே எனது கோரிக்கை. மேலும் நம் தேசத்து படித்த ஜனங்களின் மனதில் இந்த விஷய

த்தைக் குறித்து வெகு காலமாக வேலைசெய்துகொண்டிருக்கிறது. ஆனால் அநேகம் ஜனங்கள் ஆக்ஷேபனை செய்துகொண்டே வருகிறார்கள். ஏனென்றால் தர்ம சாஸ்திரத்தில் 8வது வருஷத்தில் கன்னிகாதானம் விதிப்படி கன்னிகாதானம் செய்யவேண்டுமென்பதை விதித்திருக்கிறது காரணமென்றுசொல்லுவார்கள் இந்த ஒரு காரணத்தையே முன்னிட்டு பேசிக்கொண்டே இருந்தால் நமக்கு வரப்போகிற நன்மையை நாமே கெடுத்துக்கொள்ள மூலகாரணமென்று நினைக்கிறேன் பால்ய விவாகம் செய்வது சாஸ்திர யுக்தமென்று நினைத்து செய்துவந்தால் அதில் இருக்கிற கெடுதல்களை கொஞ்சம் சொல்லுகிறேன்.

முதலாவது தற்காலத்தில் அவசரப்பட்டு விவாகம் செய்யும்போது தகுந்தவரன் கிடைக்கிறது கஷ்டமாய் இருக்கிறது. இப்படி கஷ்டமாயிருக்கும்பொழுது அவசரப்பட்டு மனதிற்கு ரம்மியமில்லாத பையனுக்கு கொடுக்கும்படி சம்பவிக்கிறது. இரண்டாவது பால்ய விதவைகள் கொஞ்சம் குறையுமென்பதற்கு சந்தேகமில்லை. மூன்றாவது படிப்பு, பாட்டு, தையல், வீட்டுவேலை இதை எல்லாம் கற்றுக்கொள்ள குறைந்தபக்ஷம் 16 வயது சாவகாசம் வேண்டும் மேலும் வயது வந்தபெண்களுக்கு விவாகம் செய்வது நல்லதென்று நம் மனச்சாக்ஷியே நமக்குச் சொல்லுகிறது. 25 வயதுள்ள மனிதனுக்கு படிப்பு முடிந்து உத்தியோகம் செய்வதோ ஏதாவது தொழில் செய்யவோ தலைப்படுவான். அப்பொழுது அவனுக்குச் சமையல் செய்துபோடவும், வீட்டை அலங்காரம் செய்யவும் அவசியம் அவனுக்கு துணைவி வேண்டும். அவன் தாய் தந்தை வயது சென்று தள்ளாமை வந்திருக்கும்பொழுது விதிப்படி தகுந்த வயது வந்த பெண்ணை மணந்துகொண்டால் எவ்வளவோ சௌக்கியமாயிருக்குமென்பதற்குச் சந்தேகமென்ன? மேலும் ஆண்களுக்கு 25 வயதுக்கு மேற்பட்டுத்தான் விவாகம் செய்ய

வேண்டுமென்று வைத்திய சாஸ்திரமும் தர்மசாஸ்திரமும் முறையிடுகிறது. என் அப்படிச் சொல்வானேன்? வைத்திய சாஸ்திரம் வியாதி வருமென்றும் தர்மசாஸ்திரம் வேதங்கள் சாஸ்திரங்கள் படிக்க விகாதமாயிருக்குமென்றும் சொல்லுகிறது. அதை நாம் அவசியம் கவனித்து அதைப்போல் செய்ய வேண்டும். நம் தேசத்திய பால்ய விவாகம் கூடாது என்று சொல்லும்பொழுது வயது சென்றவர்கள் சொல்லுவதென்ன வென்றால் விதவையாகிறது தலைவிதி யென்றும் ஜன்மாந்தர பாவமென்றும் எத்தனையோ பேர்களுக்கு மூன்று வயதில் விவாகமாய் வெகுகாலம் நீர்க்காயுசுடனும் நீர்க்க சுமங்கலியுடனும் இருக்கவில்லையாவென்று சொல்லுகிறார்கள். விதவையாகிறது அவர்கள் சொல்லுகிறபடி விதி என்றே நினைத்து சரி என்று ஒப்புக்கொண்டாலும் கூட இந்த விதி என்பது தாலிகட்டினால் தானேவரும். இல்லாவிட்டால் எப்படி வரும்? வராதல்லவா? லெ ஜோயிர்கள் சொல்லுகிறபடி பெண்களுக்கு இத்தனை வருஷம்தான் மங்கிலியம் நிலைக்குமென்று கணக்கு சொன்னாலும்கூட பத்து வருஷம்தான் பிராப்தி என்றசொன்னால் பதினாலு வயதில் விவாகம் செய்தால் 26 வயதில் விதவையாகிறான். நம்முடைய சட்டப்படி 8-வது வயதில் விவாகம்செய்தால் பதினெட்டாவது வயதில் விதவையாகிறான். பார்த்தீர்களா? விதியைக் கொஞ்சம் தாமசமாய் வரவழைக்க நமக்கு பகவான் மதியைக் கொடுத்திருக்கிறார். அப்படி இருந்தும் நாம் என் அவசரப்பட்டு விதியை சீக்கிரம் வரவழைக்கவேண்டும். ஆதலால் பால்யவிவாகம் சரியில்லை என்றே சொல்லவேண்டும் என்பதற்கு ஆக்ஷேபனை என்ன?

பெரும்பாலும் நம்முடைய தேசத்தில் விதவைகள் அதிகமாய் இருக்கிறார்களென்றே கணக்கெடுக்கப்படுகிறது. நாம் சாத்தியமான வரையில் விதவைகள் கணக்கில் குறையும்படி ஓர் உபாயம் தேடவேண்டும் அதற்கு பால்ய விவாகம் செய்யாமல்

இருக்கிறது ஓர் உபாயமாகும். ஒரு கிராமத்தில் ஒருவனுக்கு சமமையான வியாதி வந்து பிழைத்துக்கொண்டால் மற்றவர்களை முன்னிட்டு சுகாதாரம் கவனிக்காமல் இருக்க சாத்தியப்படாது அதைப்போலவே மூன்றுவயது விவாகத்தையும் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது. நம்முடைய முன்னோர்களாகிய முனிஸ்ரேஷ்டர்களும் ரிஷிஸ்ரேஷ்டர்களும் எத்தனை வயதுள்ள பெண்ணை எந்த வயதில் விவாகம் செய்துகொண்டார்கள் என்பதையும் மற்றவர்களுக்கு எத்தனை வயதில் விவாகம் செய்வித்தார்களென்பதையும் நாம் அவசியம் விசாரித்தறியவேண்டும். அப்படி விசாரித்தறிந்தால் உண்மை வெளிப்படும். இப்படி இருக்க அவர்கள் பிறப்பை அறிந்துகொள்ளாமலும் எவ்வளவு வயதுள்ள பெண்களை விவாகம் செய்துகொண்டார்களென்பதை அறியாமல் அவர்கள் எழுதிவைத்திருக்கிற கிரந்தங்களையே படித்து தெரிந்துகொண்டு எழுதிவைத்திருக்கிறபடியே எல்லா நடபடிக்கையும் நடக்காமல் பால்ய விவாகத்தை மாத்திரம் குறிப்பிட்டு எதிர்கட்சி ஆடாமல் அனைவரும் ஒத்து பால்ய விவாகத்தைத் தடுக்கவேண்டும். ஆதலால் சாஸ்திரமெல்லாம் சாதாரண ஜனங்கள் நேர்தபடி நடந்து கெட்டுப்போகாமல் இருக்கும்படி எழுதினது உண்மையாயிருந்தாலும் நாம் கடவுள் இட்ட சட்டப்படியும் நடக்கவேண்டியது அவசியம்.

கடவுள் இட்ட சட்டமென்பது பலவிதமாய் ஏற்பட்டிருப்பதால் வெகு சுலபமாய்த் தெரிந்துகொள்ள ஒரு வழி இருக்கிறது அந்தவழி என்னவென்றால் நம்முடைய மனச்சாட்சிதான். ஒவ்வொரு படித்த சகோதரியும் இந்த இடத்தில் கவனம் வைக்கவேண்டும் என்பதே என்னுடைய கருத்து. பால்ய விவாகம் கெடுதலென்றே, படித்த வருப்பார் தங்கள் மனதில் கண்டிப்பாய்த் தெரிந்திகொண்டிருக்கிறார்கள், அவர்கள் மனச்சாக்ஷியே நன்றாய் இடம் கொடுக்கிறது என்னுடைய மனச்சாக்ஷி

யும் பால்ய விவாகம் கெடுதலென்றே சொல்லுகிறது. இப்படி இருக்க நாம் பால்ய விவாகம் சரி என்று எப்படி ஒப்புக்கொள்ளலாம்?

மேலே சொன்ன நம் முன்னோர்களின் விவாக விஷயங்களை கொஞ்சம் விஸ்தரித்து சொல்லுகிறது நல்லது. கலியுகத்தில் பராசரரிஷி செய்த சுருதிதான் மேலாக மீனேக்கப்படுகிறது. அந்த பராசரரிஷி எத்தனை வயது பெண்ணை விவாகம் செய்துகொண்டார் என்று, விசாரித்தால் மச்சகெந்தி யென்னும் பெண்ணை விவாகம் செய்துகொண்டாரென்றும் அந்த பெண் செம்படவ வீட்டில் வளர்ந்ததென்றும், பெண் ருதுவானவளென்றும், இவ்விவாகம் செய்துகொண்டவுடனே வேத வியாசர் உற்பவானரென்றும் சொல்லுகிறது. இப்படி சொல்லும்பட்சத்தில் நாமும் நம்முடைய குமாரத்திகளுக்கு ருதுமதி விவாகம் செய்தாலென்ன? மேற்சொன்ன பராசர் எல்லாமறிந்த வசிஷ்டருடைய புத்திரர் அவர் விவாகம் செய்துகொண்டதை யாவரும் அக்காலத்தில் தடுக்கவில்லை ஆதலால் அவர் செய்தது சரி. சரியில்லாத காரியங்களை அவர் செய்யமாட்டார். அகஸ்திய மகரிஷி லோபாமுத்திரை யென்னும் அரசன் மகளை விவாகம் செய்துகொண்டார். அந்த பெண்ணும் 16 வயதுள்ள பெண் என்பதற்கு சந்தேகமில்லை. சௌபரிமகரிஷியும் ருதுவான ஐம்பது பெண்களை மாந்தாதாவினிடம் யாசித்து விவாகம் செய்துகொண்டார். இன்னும் நம்முடைய புராணங்களை படித்தால் எத்தனை ரிஷிகள் எத்தனையோ பெண்களை தகுந்த வயது வந்த பிற்பாடு விவாகம் செய்துகொண்டிருக்கிறார்களென்று நன்றாய் விளங்கும். இப்படி பெரிய பெண்களை விவாகம் செய்துகொண்டவர்களெல்லாரும் நரகத்திற்கா போனார்கள்? இல்லை மனுதர்ம சாஸ்திரத்தில் ருதுவான பெண்ணை விவாகம் செய்துகொடுத்தால் கொடுத்தவனும், விவாகம் செய்துகொண்டவனும், நரகத்திற்கு போவா

ர்களென்று சொல்வது, பயமுறுத்துகிற காரியமே தவிர வேறென்ன. சிறு பிள்ளைகளே, பூச்சாண்டி வருகிறானென்று சொன்னால் உடனே பயப்பட்டு நமக்கு கிழ்ப்படிகிறது இந்த விஷயமும் அப்படியே யிருக்கிறது என்பதற்கு சந்தேகமென்ன. அவர்கள் அப்படி யெழுதியிருக்கும் காரணம் வேறொரு விதமாயிருக்கலாம். என்னவென்றால், கலியுகத்தில் அசியாயம் ஜாஸ்தியாயிருக்கும். ஒருவேளை ருதுவான பெண்களை வைத்திருந்தால், யாராவது, பலாலிகள் றைபிடிப்பார்கள் மேலும், பெண் தன் மனமார சீர்கெட்டுப்போகக்கூடும் என்று ஜீனத்து சீர்திருத்தத்தை உத்தேசித்து இப்படி சொல்லியிருக்கலாம்.

நாம் இப்பொழுது இந்த விஷயத்தில் பயப்படவேண்டியதில்லை. ஏனென்றால், நேசமானுகிறவர்கள் நீதியாயிருப்பதால் றைபிடிக்க பலாலி முயற்சி செய்யமாட்டான். அப்படி செய்தாலும் நீதி கிடைக்கிறது. பெண்கள் சுயமாகவே கெட்டுப்போகாதிருக்கும்படி நல்ல படிப்பும், கொடுத்து சன்மார்க்க போதனையும் செய்யவேண்டியது யுக்தமேதவிர, வேறில்லை. மேலும் புராணங்களை நாம் படிப்பது எதற்காக? அதில் சொல்லியிருக்கும் கன்மாதிரிகளைப் பின்பற்றவும் கெடுதல்களை நீக்கிவிடுவதும் உத்தமமென்றே சொல்லுவார்கள். புராணங்களிலிருக்கிற நல்ல பேர்களைக்குறித்து சொல்லுகிறேன். சீதை, தமயந்தி, தாரோபதை, சந்திரமதி, ருக்மணி, சாவித்திரி, சுபத்திரை இத்தனை நற்கீர்த்திபெற்ற பெண்களும் ருதுவான பிற்பாடு தனக்கு இஷ்டப்பட்டவர்களை விவாகம் செய்துகொண்டார்கள். இந்த பெண்களெல்லாம் நரகத்திற்கா போனார்கள்? நரகத்திற்குப் போனார்களென்று எப்படிச் சொல்லலாம்? சொல்ல முடியாது. 8-வது வயதில் கன்னிகாதானம் செய்துகொடுத்தால் கன்னிகாதான பலன் இல்லாவிட்டால் இல்லை என்று சொல்லக்கூடாது. எனென்றால்

பெண் உள்ளபடி விவாகம் செய்யாததாலும் உண்மையில் நல்லவளாகவும் இருந்தால் அதுதான் கன்னிகாதான பலன். கன்னிகையாயிருக்கும்வரையில் கன்னிகாதான பலன் இருக்கவே இருக்கிறது. தர்ம சாஸ்திரத்தில் வேறொருபக்கத்தில் பெண்ணுக்கு நல்லவன் கிடைக்காவிட்டால் கன்னிகாமடம் கட்டி வைக்கவேண்டுமென்று லிகித்திருப்பானேன்? நல்லவனுக்கு கன்னிகையை கொடுத்து கன்னிகாதானம் செய்வது சாஸ்திர புத்தமல்லவென்று யார் சொல்லக்கூடும்? ஒருவராலும் சொல்லமுடியாத விஷயம். தற்காலத்தில் கூடியவரையிலும் நல்லவரன் தேடினால், போட்டிமேல் பணம்கேட்காமல் என்ன செய்வார்கள். ஆதலால் அதிக பணம்கொடுத்து சிறு பிள்ளைகளுக்கு கல்யாண விலங்கைப் பூட்டாமலிருக்கவும், ஓட்டாண்டியாய்ப் போகாமலிருக்கவும் நான் சொல்லுகிற முறைதான் நல்லது. மேலும் மனச்சாட்சியின்படி நடக்கிறது தெய்வசம்மதம். மனச்சாட்சிக்கு விரோதமாய் நடந்தால்தான் நரகம். மனச்சாட்சிதான் கடவுள் சித்தமென்று அறியவேண்டும். கடவுள் நமக்குள்ளிருந்து பேசுவதை உணர்ந்து அந்தப்படி நடப்பதுதான் உத்தமம். நம் தேசத்து படித்த சகோதரிகளே அதிபால்யத்திலேயே விவாகமென்னும் விலங்கைப் பூட்டிவிடாதீர்கள். சகுந்த வயது வந்த பிற்பாடு நன்றாய் யோசனை செய்து தகுந்தவனுக்குக் கொடுத்து விவாகம் செய்யுங்கள். அவசரப்பட்டு விவாகம் செய்து பல நஷ்டத்திற்குள்ளாகாமலிருக்கிறதே நல்லது.

என்ன நஷ்டமென்றால் விவாகசெலவு செய்து கடன்படுகிறார்களல்லவா, அந்த கடன்கொடுத்து நீருமூன்னமே ஆறுவது மாசம் தீபாவளி பண்டிகை, சங்கராந்தி முதலிய விஷயங்களால் சதனங்கள் கொடுக்கும்படி ஏற்படுகிறது. விவாகக்கடன் தீராமல் அப்படியே யிருக்கும். இதில் நஷ்டப்படுவதும் தவிர கடன்காரன் பணம் கேட்கும்பொழுது பணமில்லாவிட்

டால் அவன் அவமரியாதையாய்ப் பேசுவான். அதில் இவர் களுக்கு மானஙவ்ட மூண்டாகுமென்பதற்கு சந்தேகமில்லே. ஆதலால் பெண்பிள்ளைகளுக்கு படிப்பு, பாட்டு, தையல், வீட்டு வேலே, சன்மார்க்கபோதனே முதலியவைகள் கன்முய்த்தெரிந் தபின்பு விவாகம் செய்யத்துணியுங்கள். துணிந்து மூன்வா ருங்கள். பின் தங்சாதீர்கள். பால்ய விவாகம் சரியில்லே என் றே சில உதாரணங்களுடன் எடுத்துக் கூடியவரையில் காட்டி யிருக்கிறபடியால் பெரும்பாலும் படித்தவர்கள் ஆக்ஷேபனே செய்யமாட்டார்கள் என்றே நம்புகிறேன். மேலும் வேறொரு உதாரணமும் இருக்கிறது. நம்முடைய தேசத்து பிள்ளைக ளுக்கு மைனரா யிருக்கும்பொழுதே குழந்தைகள் பிறந்தால் மைனரா யிருக்கும் அந்தப் வயயனே பிள்ளைகளே எப்படி காப் பாற்றகூடும்? அது முடியாத காரிய ம் மேலும் சம்பாத்தியம் செய்துகொள்ளாதவனுக்கு விவாகம் செய்வது பிசகு. பின்னே கள் பிறந்தால் மேலும் சங்கடந்தான். ஆதலால் பால்ய விவா கத்தைத் தடுத்துவிடுங்கள். ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்றுதடவை, பதினுயிரம் தடவை, சொல்லுகிறேன். பால்ய விவாகத்தை அவசியம் தடுக்கவேண்டும். பண்டை காலத்தி லிருந்து எவ்வளவோ காரியங்கள் மாறிக்கொண்டு வருகிறது. விவாக விஷயம் மாற்றிக்கொள்ளுவதில் தடையென்ன. ஒரு நன்மையை உத்தேசித்து பல தீமைகளுக்கு ஆளாவது புத்தி யினம் என்பதை அறியவேண்டும்.

9-வது விதவா விவாகம்.

சகோதரிகளே! விதவா விவாகத்தைக் குறித்து படித்த வர்கள் மனதில் சில சந்தேகங்கள் நிகழ்ந்துவருவதால் அதைக் குறித்தும் இங்கு கொஞ்சம் சொல்வது சரியென்று நினைக்கி றேன். பால்ய விவாகம் சரியில்லே என்று ஒப்புக்கொண்ட மனச்சாக்ஷியே விதவா விவாகம் சரியில்லே யென்ற ஒப்புக்

கொள்ளும். எப்படியென்றால் அதற்கும் சில உதாரணமிருக்கிறதென்றே சொல்லவேண்டும். ஸ்திரீகளுக்கு கற்பு அனுசரிக்கிறதே தோன்பென்றும், விரதமென்றும் சொல்லுகிறபடியால் அந்த கற்புக்கு விக்கினம் வராமல் தடுப்பதே யோக்கியமான காரியம். விதவா விவாகம் கூடாதென்றுதான் பால்ய விவாகம் தடுக்கவேண்டுமென்றதே தவிர வேறில்லை. கண் திறக்காத பாலிய பெண்கள் விதவையாகக் கூடாதென்றே நம்மெல்லோருடைய அபிப்பிராயம். ஆதலால், விதவாவிவாகம் செய்தால் வர்ண சங்கரம் கெட்டுப்போகுமென்பதில் சந்தேகமில்லை. நாம் நல்ல படிப்புகளை கொடுத்து சன்மார்க்கம் போதித்து, பிற்பாடு ருதுமதிவிவாகம் செய்வித்து அதன் பிற்பாடு விதவையாய்ப்போனால் பெரும்பாலும் படித்த பெண்களாகிய விதவைப் பெண்களே விதவை விவாகம் செய்துகொள்ளமாட்டார்கள் என்பதற்கு சந்தேகமில்லை. ஆதலால் விதவா விவாகம் தெய்வசம்மதமில்லையென்றே சொல்லவேணடும். அதற்குக் காரணம் மனச்சாகஷி இடம் கொடுக்கவில்லை என்பதுதான். ஆதலால் விதவா விவாகத்திற்கு நாம் இடம்கொடுக்கக் கூடாது.

கற்பென்னும் மேலான காரியம் கெட்டுப்போவதும் தவிர ஒருவன் அனுபவித்த பெண் வேறொருவனுக்கு விஷமென்றும் பல வியாதிக்கு மூலகாரணமென்றும் வைத்திய சாஸ்திரம் முறையிடுகிறது. ருதுமதி விவாகம் செய்து விதவையாய் போனால் பிற்பாடு வேறொரு விவாகம் செய்வது தார்த்தாதிகள் முறைகெட்டுப்போகும். மேலும் சுத்த பிசகான சரியம். இப்படி அனுசிதமான விஷயங்களை எப்படி சரியென்று சொல்லலாம்? மேல்நாடுகளில் சன்மார்க்கம் போதிக்கப்பட்ட அநேகம் பெண்கள் விவாகமே யில்லாமல் பரலோக காரியங்களை முன்னிட்டு அநேகம் பேர்கள் வேலைசெய்திருக்கிறார்கள். நம் தேசத்தில் ஸ்திரீகளுக்கு சந்யாச மார்க்கமில்லாததாலும் சக்தி விரு

த்திக்காகவே ஸ்திரீகளை பகவான் சிருஷ்டித்ததாலும் அவசியம் ஒரு தடவை விவாகம் செய்யவேண்டுவதுதான் யுக்தமான காரியம். பெண்கள் ஒருதடவை விவாகம் செய்த பிற்பாடு இரண்டாவது விவாகத்திற்காக மேல்நாட்டு ஜனங்களைக்குறித்து சொல்வது சரியில்லையென்றே சொல்லவேண்டும். அப்படி இரண்டவது விவாகத்தை ஒட்டி மேல்நாட்டாரை குறித்து சொன்னால் ஸ்திரீகள், முதல் விவாகமே யில்லாமலிருப்பதை சொல்லும்படியாய் ஏற்படும். ஆதலால் முதல் விவாகத்தை வெறுக்கும் மன உறுதியுள்ள ஸ்திரீகளிருப்பதால் நம் தேசத்திலும் விதவைகள் மன உறுதி உள்ளவர்களாகும் போரிருக்கிறார்கள். கெட்டுப்போன ஸ்திரீகளும் மேல்நாடுகளில் இல்லாமலிருக்கமாட்டார்கள். நம்முடைய தேசத்திலு மிருக்கிறார்கள். ஆதலால், விதவா விவாகம் செய்யாமலிருப்பதுதான் தருமம். செய்தால் அதருமம் தான். நம்முடைய புராணங்களில் ருதுமதிவிவாகம் செய்துகொண்ட ஸ்திரீகள் பழிக்கப்படவில்லை. ஆனலும் வேறொரு புருஷனை மனதிலுல் நினைத்தவர்களைக்கூட பழித்திருக்கிறார்கள். அப்படிப் பழிக்கப்பட்ட பெண் யாரென்றுல் ரேணுகாதேவி யென்னும் பெண் மணி ஜமதக்னி மகாரிஷி பத்தினிதான் பரசுராமரை ஈன்றெடுத்தவள். கார்த்த வீரியார்ச்சுனனை ஜலத்தின் கீழலில் பார்த்தாள். ஆதலால் அவள் பழிக்கப்பட்டாள். பழிக்க காரணமென்னவென்றுல், ஜலம் திரட்ட முடியவில்லை. பரபுருஷனை கிழலில்கண்டு இப்பேர்பட்ட புருஷன் உலகத்திலிருக்கிறானென்று நினைத்ததுதான் காரணம். ஆதலால் விதவா விவாகம் கேவலமென்பதற்கு ஆட்சேபனை கிடையாது. மனதிலுல் நினைக்கப்பட்டவர்களைக் கேவலம் என்று நினைக்கப்படுவதால ஸ்திரீகளுக்கு இரண்டாவது விவாகம் செய்வது சுத்த பிசகென்று நினைப்பதற்கு சந்தேகமில்லை. இத்துடன் இந்த உபந்யாசத்தை முடிக்கிறேன். சகோதரிகள் அனைவரும் அடித்திங்கட்கிழமை அவசியம் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

10 வது ஒற்றுமை வேண்டும்.

பிரிய சகோதரிகளே ஒற்றுமை அவசியம் என்று நாம் உணரவேண்டும். என் உணரவேண்டுமென்றால், நம் வாழ்வுக்கு அவசியம் ஒற்றுமைதான் ஒற்றுமையினால் விளையக்கூடிய நன்மைகள் சொல்லிமுடியாது. ஆதலால் ஒற்றுமையுடன் வாழ்வதே மேலானது. எறும்பைப் பாருங்கள். கறையானைப் பாருங்கள் நம்மைப்போல மேலான அறிவு இல்லாதிருந்தும் எவ்வளவு ஒற்றுமை யிருக்கிறது என்று கவனியுங்கள். அப் பொழுது ஒற்றுமைதான் மேலானதென்று விளங்கும். ஒரு கிராமத்தில் ஒற்றுமையுண்டானால் சண்டை சச்சரவு ஒழிந்து போய் அந்த கிராமத்தில் ஜனங்கள் ஒற்றுமையாய் வாழ்வார்கள். பெரிய பட்டணங்களிலும் ஒவ்வொரு தெருவிலும் ஜனங்கள் அந்தந்த தெருவில் சண்டைகள் இல்லாமல் ஒற்றுமையாய் இருக்கப் பிரயாசை எடுத்துக்கொண்டால் போலீஸ்காரருக்கும் அதிகாரிகளுக்கும் அதிக வேலை யிருக்கமாட்டாது. பணச்செலவு மிருக்கமாட்டாது. குடும்பங்களிலும் ஒற்றுமை அவசியமென்பதை மறக்கக்கூடாது. குடும்பங்களிலும் சண்டைசச்சரவு இல்லாமல் வாழ்வது மேலான காரியம். சவிரவும் கௌரவமாகவும் இருக்கும். சில உதாரணத்தால் விளக்கிக்காட்டுகிறேன். பல மனிதர்கள்கூடி தேர் இழுக்கிறார்கள். அப்படி ஏன் பல மனிதர்கள்கூடி இழுக்கிறார்கள்? பலபேர் கூடி ஒற்றுமையுடன் இழுக்காவிட்டால் தேர் கனமுள்ளதாகையால் இழுக்க முடியாது. கிராமத்து குடித்தனக்காரர்கள் சதா கலகட்டிக்கொண்டு வழக்குக் கொண்டுவருகிறார்கள். அதனால் பணகஷ்டம்! அடைவதும் தவிர அடுத்த ஊர்களிலிருந்து வழக்குக் கொண்டுவருவதால் வேளைக்கு நல்ல சாப்பாடு இல்லாமல் தேகத்துக்கு அசௌக்கியமுண்டாகிறது. வீணான பணம் செலவு செய்து இவ்வளவு கஷ்டம் அனுபவிப்பதைவிட கிராமங்களில் ஒற்றுமையா யிருப்பது மேலானது.

அதனால் அளவிடா நன்மைகள் அடையலாம் என்பதை உணர வேண்டும். சில இடங்களில் பெண்களாலேயே சண்டைகள் வருகிறதென்றும் பெண்களில்லாவிட்டால் சண்டை வம்புகள் வரமாட்டாதென்றும் பெண்களை பழித்துச் சொல்லுகிறார்கள். பெண்களால் சண்டைகள் வருகிறது வாஸ்தவம்தான். என்றாலும், கச்சேரிவரையிலும் மண்டைகள் உடைத்துக்கொண்டு சண்டைகள் செய்து வழக்கு கொண்டுபோய் சேருகிறதற்கு காரணம் பெண்களல்ல ஆண்களென்பதை அறியவேண்டும். பெண்களினால் வருகிற சண்டையை நாம் சாத்தியமானவரைக்கும் பிரயாசைப்பட்டு ஒழிக்கவேண்டும்.

சகோதரிகளே! ஒற்றுமை வேண்டுமென்றால் ஸ்திரீகளுக்காக பல சங்கங்கள் ஏற்படுத்துவதும் அவசியமென்று உணர்ந்து ஏற்படுத்தவேண்டும். நமது தேசத்து வயதான சகோதரிகள் நாம் சங்கங்கள் ஸ்தாபிப்பதை குளற்றங்களை வம்பர் மகாசபையின் மூல்யமாய் பிரசென்று நமக்கு அறிவித்தார்கள். பெண்களுக்கு மீட்டிங் என்னத்திற்கென்றும் வீட்டு வேலை கெட்டுப்போகுமென்றும் ஸ்திரீ சங்கத்திற்குப்போனால் அகௌரவமென்றும் சொல்லி அனுப்பினார்கள். நாம் சங்கத்தின் வியாசம் மூலமாக நமது முதிய சகோதரிகளுக்கு பதில் சொல்வதும் அவசியமென்று நினைக்கிறோம். என்னவென்றால் நம் முதிய சகோதரிகளுக்கு பன்னிரண்டு வயதுள்ள பேத்திகளிருந்தால் அந்தப்பெண்களைப் பள்ளிக்கூடம் போய் படிக்காமல் தடுப்பார்கள். எப்படி என்றால் நன்றாயிருக்கிறது பன்னிரண்டு வயது பெண்கள் பள்ளிக்கூடம் போவது நான் பார்த்ததிலே இந்த அதிசயத்தை என்னவென்று சொல்லுவேன் என்று படிப்பைக் கெடுத்துவிடுவார்கள். அவசியம் தட்டான் வீட்டிற்கு சம்மந்தித்துப் போகச் சொல்லுவார்கள். அப்படிப் போவது கௌரவமானதாவென்று நினைக்கமாட்டார்கள். சாயங்கால வேளையில் சிறுபிள்ளைக்கு பேப்பிடிக்குமென்று வீட்டு

க்கொல்லுபுறத்தில் கற்றவாங்க, உலாவ விடமாட்டார்கள். ஆனல் அந்திக்கடைக்கு அவசியம் போகச் சொல்லுவார்கள். மேலும் இந்தக் கிழவிகள் தேர் திருவிழா காலங்களில் தன் பேத்திகளே கன்றாய் அலங்கரித்து ஆலயங்களில் கூட்டத்தின் மேலில் அழைத்துப்போவார்கள். அப்படிப் போகும்பொழுது இந்தப் பெண்களின்மேல் அனேகம் பேர்கள் ஊராய்ந்துகொண்டுபோவார்கள். இதெல்லாம் இந்தக் கிழவிகளுக்கு கெடுதலென்று தோன்றுமல் போனது யார் செய்த பாவமோ நாம் அறியோம்.

இதனுடல் சம்மா யிருக்காமல் வேலயக்காரனிடத்தில் போய் அப்பா என் பேத்திக்கு கன்றாய் வேலயல் போட்டுவிடு என்று சொல்லுவார்கள். அதற்கு அந்த வேலயகாரன் கையை பிடித்து இப்படிவா பாப்பாத்தியளே போடுகிறேன் என்று பிடித்த இழுப்பான். பிற்பாடு கல்சட்டிக் கடைக்குப்போய் அவமரியாதையாய்ப் பேசிவிட்டு கல்சட்டியை எடுப்பார்கள். அவன் இந்த கிழவிகளைப் பார்த்து இந்த பாப்பாத்திக்கு என்ன ஆசையென்றும் விலை குறைத்துக் கேட்கிறளென்றும் அவமரியாதையாய்ப் பேசி ஏ பாப்பாத்தி இப்படி கொடுத்துவிட்டுப் போ நீ வாங்கி கிழிச்சாச்சு போவென்று சொல்லுவான். இதெல்லாம் இந்தக் கிழவிகளுக்கு கௌரவமாகத் தோன்றும். நம்முடைய ஸமாஜங்கள் கௌரவமாக தோன்றமாட்டாது. இதற்கு நாமென்ன செய்யலாம். சகோதரிகளே! வயது சென்ற சகோதரிகளே நாம் பழிக்கவில்லே. என் இப்படி எடுத்துச் சொன்னேனென்றல் நம்முடைய ஸமாஜத்தை ஒற்றுமைக்காக ஏற்படுத்தினேனென்று அறியாமல் வம்பு சொன்னதின்பேரில் நாம் சமாதானம் சொல்லும்படி இருந்தேதவிர வேறில்லே. எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம் என்னும் பழமொழி உண்மையே. நம்முடைய வாழ்வுக்கு ஒற்றுமையே மூலகாரணம். முற்காலத்தில் பிராமணர்கள் சூத்திரர்களே

யும் மேலும் தாழ்ந்த ஜாதிகளையும் ஒற்றுமையை உத்தேசித்து பக்ஷமாய் நடத்திவந்தார்களென்று அறிகிறோம். அப்பொழுது ஒற்றுமை ஜாஸ்தியாய் இருந்தது. எப்படி என்றால் ஒரு ஊரில் பாரி குடும்பமிருந்தால் வெகுகாலமாகவும் வெகுதலை முறையாகவும் நீடித்து வாழ்ந்து வரும்பொழுது அந்த குடும்பத்தில் வேலைசெய்து வந்துகொண்டிருக்கும் தலைமுறையிலிருந்தே வேலைக்காரர்களும் வேலைசெய்து வந்தார்களென்பது சில உதாரணத்தினால் விளங்குகிறது. தற்காலத்தில்கூட சில இடங்களில் இருக்கிற ஒற்றுமையைக் கவனித்து அவர்களுடைய பூர்வோத்திரங்களை நன்றாய் விசாரித்தறிந்தால் விளங்கும். இப்பொழுது வரவர தற்காலத்தில் ஒற்றுமை குறைந்து கொண்டே வருகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. கச்சேரிகளிலும் ஹைகோர்ட்டுகளிலும் வருஷா வருஷம் வருகிற வழக்குகளை கணக்கெடுத்துப்பார்த்தால் தெரியவரும். வழக்குகள் அதிகமாய் பாக்கியிருக்கிறதை கவனித்து புதிது புதிதாக ஜட்ஜுகளை நியமிக்கிறார்கள் என்பதை அறியுங்பொழுது ஒற்றுமை குறைவாயிருக்கிறதென்று தெரிந்துகொள்ளுகிறோம்.

ஆதிகாலத்தில் கிராமங்களில் பஞ்சாயத்துகள் இருந்தது அதனால் வெகுஜனங்கள் கண்ணியமடைந்தார்கள். தற்காலத்திலும் பஞ்சாயத்துகள் கிராமங்களில் வைக்கவேண்டுமென்று அநேக ஜனங்கள் சொல்லுவது நன்மைதான். எனென்றால் பஞ்சாயத்து வழக்கு தீர்த்த உடனே அப்பீலுக்கு போகமாட்டார்கள். அதனால் பணச்செலவில்லாமல் சுகமாய் வாழ்வார்கள். சகோதரிகளே இந்தனை பெரிய தேசத்தில் ஒற்றுமையை உண்டாக்கவும் நம் தேசத்து பெண்களுக்கு குடும்ப ஒற்றுமையைப் போதிக்கவும் நம்மால் சாத்தியமாவென்று நினைத்து சும்மாயிருக்காமல் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை பிரயாசப்பட்டு சேர்ந்திருக்கச்செய்தலும் கூடியவரையில் சேர்ந்திருந்துவார்களென்றே நம்பவேண்டும். நம் தேசத்து மாமி சாத்தி

கள் சண்டையும் ஓகத்தி சண்டையும் ஒழியும்படி நாமே சீர் திருத்திக்கொள்ளவேண்டும். எப்பொழுதும் தன்னேத்தானே ஆளுவது மேலான விஷயமென்று உணரவேண்டும். அடுத்த வீட்டு சண்டை எதிர்த்தவீட்டு சண்டை ஆற்றங்கரை சண்டை குளத்தங்கரை சண்டை கிணற்றங்கரை சண்டை இதெல்லாம் ஸ்திரீயினுலெ உண்டாகிறது உண்மையென்றே சொல்லவேண்டும். காட்டுப்புறங்களிலும் கோள்சொல்லி குண்டுணிவேலை செய்து குடும்பங்களில் கண்ணி முடிந்துபோடுவதும் பெண்களென்றே சொல்லவேண்டும். ஆதலால் சண்டை சச்சரவு இல்லாமல் ஒழிக்க சதா நாம் பாடுபடவேண்டும். அறிவில்லாத சுத்த ஜடமான கல்மரம் சுண்ணும்பு மண் இதெல்லாம் சேர்ந்த உடனே நாம் பார்க்கும் ரம்யமான மாளிகைகளும் கட்டடங்களும் எவ்வளவு நன்றுயிருக்கிறது பாருங்கள். நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டியதும் தவிர நம்முடைய பிள்ளைகளையும் ஒற்றுமையாயிருக்கும்படி போதிக்கவேண்டும். ஒற்றுமைக்காக சங்கங்கள் இருப்பது வேறொரு விஷயத்திற்குகூட நல்ல தென்று நினைக்கவேண்டும். ஸ்திரீ சங்கங்களில் நன்றுய் படித்து அனுபவமுள்ளவர்களே மெம்பர்களாயிருப்பதாலும் தெரியாதவர்கள் இதில் சேர்ந்த உடனே பெரும்பாலும் புத்தி விசாலமாய் இருக்கும் என்பதில் நம்பிக்கை இருப்பதாலும் சமாஜ விஷயம் அண்ணியில் தன் வீட்டிலிருக்கும் சொந்த விஷயங்களைக் குறித்தும் அபிப்பிராயம் கேட்டு மெஜார்டி மைனர்டியினுல் காரியங்களை சீர்திருத்திக்கொள்ளவும் இடமுண்டாகும் என்றே நினைக்கவேண்டும். சகோதரிகளே மேலும் மேலும் சமாஜங்கள் ஏற்படுத்த முன் வாருங்கள். சோம்பலில்லாமல் பாடுபடுங்கள். ஒற்றுமையினுல் மேலான வாழ்வு வாழ்கிறதை விட்டுவிடாதீர்கள். சிறு கயிறுகள் தனித்தனி இருந்தால் அவசியம் அறுந்துபோகும். அதே சிறு கயிறுகளை சேர்த்து முறுக்கினுல் அறுபடாமல் இருக்கிறதும் தவிர நம்முடைய வேலைகளுக்கெல்லாம் பிரயோஜனப்படும் என்பதை ஞாபகத்தில்

வைக்கவேண்டும், என்ன பிரயோஜனமென்றால் தண்ணீர் இறைக்கவும், தோழுக்கவும், கப்பல் பாய்மரங்களுக்கும் இன்னும் எவ்வளவோ வேலைகளுக்கும் உபயோகமாகும். இதைப் போலவே காமும் ஒற்றுமையாயிருந்தால் எவ்வளவோ பிரயோஜனமாகுமென்பதில் சந்தேகமென்ன?

ஒற்றுமையைக் குறித்து முற்காலத்தில் ஒரு சிறு பறவை சமுத்திர ஜலமிறைத்ததை ஒருகதையாக கேட்டிருக்கிறேன். அந்தக் கதையைப் பின்வருமாறு சொல்லுகிறேன். சமுத்திரக் கரையோரமாய் ஒரு மரத்தில் ஒரு சிறு பறவை தன் ஜோடி பறவையுடன் கூடிவாட்டி, முட்டையிட்டது பிற்பாடு ஆண் பறவை பெண்பறவையைப் பார்த்து இரை தேடப்போவோமென்று கூப்பிட்டது. அதற்கு பெண் பறவை முட்டையை சமுத்திரராஜன் கொண்டுபோய்விடுவான் ஆகையால் வேறு மரத்தில் முட்டையைப் பத்திரப்படுத்திவிட்டுப் போவதே நல்லது என்றது. அதற்கு ஆண் பறவை ஏன் பயப்படவேண்டும் நாம் போவோமென்று சொல்லிற்று. பெண்பறவை சமுத்திரக் கரையோரமாய் மரம் இருப்பதால் பயப்படுகிறேன் என்று மறுத்தது. அதற்கு ஆண் பறவை "சமுத்திரராஜனுக்கு அவ்வளவு சௌரியமா அவ்வளவு இருமாப்பா, அவ்வளவு அகம்பாவமா அது முட்டையைக் கொண்டுபோய்விட்டால் அந்த முட்டையை என்னுடைய பராக்ரமத்தினால் கொண்டுவந்து சொடுப்பேன்" என்று சொல்லிற்று. பிறகு இரண்டு பறவையும் இரை எடுக்கச் சென்றது. மேற்சொன்ன விஷயங்களை கேட்டுக்கொண்டிருந்த சமுத்திரராஜன் பெரிய அலை எழும்பி முட்டையைக் கொண்டுபோய்விட்டது. பறவை இரண்டும் இரை எடுத்துத் திரும்பி வந்து பார்க்கும்பொழுது முட்டையைக் காணோம் பறவைகள் என்ன செய்யும், பாவம் பிரலாபித்துக்கொண்டிருந்தது. பிறகு ஆண்பறவை ஒரு யோஜனை செய்தது, என்னவென்றால், சமுத்திர ஜலம் இறைத்து முட்

டையை எடுத்துக்கொண்டுவருவேன் என்று சொல்லி மூக்கி னால் ஜலம் இறைத்துக்கொண்டிருக்கும்பொழுது அதன் இன மாகிய பக்ஷிகளெல்லாம் வந்து பார்த்தன. இதை எடுக்காமல் என் ஜலம் இறைக்கிறாய் என்று கேட்டன. அதற்கு தண்ணீர் இறைக்கும் பறவை என்னுடைய மூட்டையை இந்த சமுத்திரம் திருடி ஒளித்துவைத்திருக்கிறது. ஆதலால் நான் ஜலம் இறைத்து மூட்டையை எடுத்துக்கொண்டு வந்தபிறகு இதை எடுக்க வருவேனென்றது. இப்படிச் சொன்னவுடனே மற்றப்பறவை இனமெல்லாம் ஒற்றுமையாய் ஜலம் இறைக்கத் தலைப்பட்டன. எத்தனை பக்ஷிகள் ஜலம் இறைத்தபோதிலும் ஜலம் குறையாமலிருந்தது. அப்பொழுது திரிலோக சஞ்சாரி யாகிய நாரதர் அந்த வழியாய் வந்துகொண்டிருந்தார். பக்ஷி கள் ஜலம் இறைப்பதைப் பார்த்து ஏன் ஜலம் இறைக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்குப் பறவைகள் மேல் நடந்தவற்றை உண்மையாய்ச் சொல்லிற்று. உடனே நாரதர் ஆச்சரியப்பட் டுக்கொண்டே போய்விட்டார். பிற்பாடு பரமபதத்தில் மகா விஷ்ணுவானவர் நாரதரே! நீர் சுகந்தானுவென்று விசாரித்து நீர் திரிலோக சஞ்சாரியாதலால் எக்கேயாவது அதிசயம் நடந் ததுண்டா என்று கேட்டார் அதற்கு நாரதர் பகவானைப் பணி ந்து சுவாமி! நான் சமுத்திரக் கரையோரமாய் நடந்துகொ ண்டிருக்கும்பொழுது ஒரு அதிசயம் பார்த்தேன், அதென்ன வென்றால் ஒரு பறவையின் மூட்டையை சமுத்திரம் திருடி ஒளித்து வைத்திருக்கிறதாம். பறவையெல்லாம் ஒற்றுமையு டன் ஜலமிறைக்கிறது என்று சொன்னார்.

உடனே பக்கத்தில் இருந்து கேட்டுக்கொண்டிருந்த பக்ஷி யின் இனமாகிய கருடன் சீக்கிரம் எழுந்து பகவானைப்பணி ந்து எனக்கு உத்தரவுகொடுங்கள் என் இனமாகிய பறவை மூட்டையைப் பறிகொடுத்திருக்கும்பொழுது நான் சும்மாயிரு க்கமுடியவில்லை. ஆதலால் நான் சீக்கிரம் போய் என்னுல்

கூடிய பிரயாசை எடுத்து முட்டையை வாங்கி பறவைக்கு க்கொடுக்க யோசித்திருக்கிறேன் என்றது. மகாவிஷ்ணுவும் உத்தரவு கொடுத்தார். உடனே கருடன் பறந்துவந்து ஆதி யில் மந்தரகிரி சமுத்திரத்திலிருந்து கடைந்தது போலவே தொப்பென்று சமுத்திரத்தின் நடுவில் குத்துக்கலக்கி சேரு க்கி தும்சப்படுத்திற்று அப்படிக் கலக்கின உடனே சமுத்திர ஜலம் நாலு பக்கமும் வழிந்தோடிற்று. உடனே சமுத்திர ராஜன் அவமானப்பட்டு கருடனிடத்தில் வந்து சுவாமி! உம க்கு நான் என்ன அபசாரம் செய்தேன் என்று வணங்கினான். உடனே கருடன் என் இனமாகிய பறவையின் முட்டையை நீ ஒளித்துக்கொண்டது குற்றமல்லவா என்றார். அதற்கு சமுத்திரராஜன் சுவாமி நான் வேண்டுமென்று அப்படி செய்ய வில்லை. இந்த ஆண் பறவை என்னை வசைச்சொல்லால் பழி த்ததினால் எனக்கு கோபம் வந்ததேதவிர வேறில்லையென்று சொல்லிற்று. உடனே கருடன் தன் இனமாகிய பறவையைப் பார்த்து பெரியோர்களே இனிமேல் குற்றம்சொல்லாமல் சுக மாய் வாழ்ந்திருவென்று பலவிதமாய்ப் புத்திசொல்லி முட்டை யை வாங்கிக் கொடுத்துவிட்டது. அதற்குப் பறவை மகாசந் தோஷத்துடன் கருடனை வணங்கி நன்றி செலுத்தி முட்டை யை எடுத்துக் கொண்டுபோய் சந்தோஷத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தது. கருடனும் தன்ஸ்தானம் போய்சேர்ந்தது.

ஆகையால் ஒற்றுமையே மேலானதென்று இந்தக்கதையி னுல் விளங்குகிறது. ஒற்றுமையினுல் சாதிக்கக் கூடிய விஷ யம் அநேகமிருப்பதால் அவசியம் ஒற்றுமை வேண்டும். காட் டில் மிருகங்களெல்லாம் தனித்தனி இருக்கமாட்டாது அந்த ந்த இனத்துடன் சேர்ந்து வாழும். மனித இனமாகிய நாம் மட்டும் ஒற்றுமையில்லாமல் இருப்பது சரியல்ல. இனிமே லாவது அவசியம் ஒற்றுமைக்காக பாடுபட்டு ஜாதி மதவேற்று மையினுல் துவேஷிக்காமல் மனிதர்களெல்லாம் ஒரு இனமெ

வேறே கினைத்து ஒற்றுமையாய் இருக்கவேண்டும். இத்தடன் இந்த வியாசத்தை முடிக்கிறேன். அடுத்த கிழமையில் பாலர் போதனையைக் குறித்து சொல்ல கினைத்திருப்பதால் அகியம் நம் சகோதரிகள் வருவார்களென்றே நினைக்கிறேன்.

11-வது பாலர் போதனை.

சகோதரிகளே நம் தேசத்தில் சிறுபின்னைகளுக்கு சன்மார்க்க போதனை கிடையாதென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சொல்லவேண்டும். ஆதிகாலத்தில் வேததியானம் செய்துகொண்டும் சாஸ்திரக் கேள்விகளிலும் கல்விக் கேள்விகளிலும் தேர்ந்தவராகவும் இருந்தார்களென்பதற்கு சந்தேகமில்லை. இப்பொழுது நம்முடைய பாலர்கள் ஆரம்பத்திலேயே மேல்நாட்டுக் கல்வியைப் படித்துவருகிறார்கள். அதனால் பல இடைஞ்சல்களிருக்கின்றன. மேல்நாட்டுக் கல்வி அவசியம் இல்லை என்று சொல்லவில்லை. தான் பேசும் சொந்த பாஷையாகிய சுயபாஷையும் தேச பாஷையும் படித்துக்கொஞ்சம் தெரிந்துகொண்டு பிற்பாடு மேல்நாட்டுக் கல்வியைக் கற்க ஆரம்பஞ் செய்யவேண்டுமென்பதையே முதலில் ஞாபகத்தில் வைக்கவேண்டும். அதனால் என்ன இடையூறென்றால் நம்முடைய பாலர்களுக்கு மதத்திலுள்ள நம்பிக்கை போய்விடுகிறது. இங்கிலீஷ் பாஷையிலுள்ள பைபிள் முதலிய புஸ்தகங்களைப் படிப்பது தப்பென்று சொல்லவில்லை. எனென்றால் "கண்டதைக் கற்க பண்டிதனாவான்" என்று முதுமொழியிருக்கிறபடியால் அவசியம் பல புஸ்தகங்களை வாசிப்பது நலமேயானாலும் பின்னைகள் கல்வி கற்க ஆரம்பித்தவுடனே நம்முடைய மதவிஷயங்களைக் கூடுமானவரையில் போதிக்கவேண்டும். அப்படிப் போதித்தால் பின்னைகள் வளர்ந்த பிற்பாடு அந்திய மதங்களைப் படிக்கும்பொழுது நம்முடைய மார்க்கத்துக்கும் அந்திய மார்க்கத்துக்கும் உள்ள தாரதம்யத்தை அவர்களே

தெரிந்துகொள்வார்கள். இப்படியில்லாமல் சும்மா மேல்நாட்டுக்கல்வியைப் படிக்கும்பொழுது அதுவே சரியென்று தோன்றும். நம்முடைய மார்க்கங்களில் பற்றுதலில்லாமல் போகுமென்பதற்கு சந்தேகமில்லை. தற்காலத்தில் அநேகம் பிள்ளைகளுக்கு நம்முடைய மதத்தில் பற்றுதல் இல்லையென்றே சொல்லவேண்டும். ஆகையால் சகோதரிகளே நம்முடைய பாலர்களுக்கு மதபோதனை அவசியம் வேண்டுமென்று தோன்றுகிறது. சன்மார்க்க போதனை செய்யும் மாதிரியை சுருக்கமாக சொல்லுகிறேன்.

நம்முடைய மதங்களில் ஆதிகாலத்தில் மதவிஷயங்களைப் போதித்தார்கள். மத்தியகாலத்தில் சூக்ஷுமத்தை விளக்கும் பொருட்டு வெளிப்பாடாய் சில பொருட்களைக் காட்டி போதித்தார்கள். இப்பொழுது தற்காலத்தில் சூட்சும சம்மந்தமில்லாமலே சுத்த ஜடமாகவே போதிக்கும் புஸ்தகங்கள் பல எழுதியிருக்கின்றன. ஆதலால் எவ்விதம் ஆதிகாலத்தில் போதித்தார்களென்று விசாரித்துத் தெரிந்துகொள்வதவசியம். ஆதிகாலத்தில் தன்னைப் பண்டத்த கடவுள் ஒருவர் இருக்கிறாரென்று அவரை இருதயத்தில் வைத்து வணங்கி சூட்சுமமாக பக்தி செய்துவந்தார்கள். தன்னுடைய இருதயத்திற்கும் பகவானுக்கும் தெருங்கிய பாசமும் அன்பும் வைத்துக்கொண்டு அகம்பாவமில்லாமல் பக்தி செய்வதையே போதித்தார்களென்று தோன்றுகிறது. மத்யகாலத்தில் ஏழாவது வயதில் பகவானை நேசிக்கும் விதம் வேறொரு மாதிரியாய் போதித்தார்களென்று விளங்குகிறது. அதற்காக உபநயனம் என்று ஒன்றை ஏற்படுத்தினார்கள். இதனுடைய அர்த்தமென்னவென்றால் மேற்சொன்ன விஷயத்தை வெளிப்பொருளாக நமக்குக் காட்டினார்களென்றே நினைக்கவேண்டும். எப்படி என்றால் கடவுளை மிகவும் நேசபாசமாக விசுவாசிக்கும் பொருட்டு அவருக்கும் மனிதனுடைய இருதயத்திற்கும் அன்பென்னும் பாசம்

தொடுத்திருக்கவேண்டும். ஆகையால் இடதுபக்கம் மார்பில் நூலை அணியும்பொருட்டு விதித்திருக்கிறார்கள். மேலும் எழாவது வயதிலிருந்து மதவிஷயங்களைப் பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டுமென்பதும் கம் முன்னோருடைய அபிப்பிராயமென்று தோன்றுகிறது. இப்படியிருக்க நாம் நமது அருமையான பாலர்களுக்கு சூட்சுமத்துடன் போதிப்பதே முறையென்று போதிக்கவேண்டும்.

கம்மூடைய மதங்களில் அநேகம்பேர்கள் மண்ணையும் கல்லையும் சாணியையும் மஞ்சளையும் தூணையும் தூரும்பையும் பிள்ளைகளுக்குக்காட்டி இதுதான் சுவாமியென்று போதிப்பதை நாம் பலமுறையும் பார்த்திருக்கிறோம். கம்மூடைய முன்னோர்கள் பொருளைக்காட்டி பொருளை நமக்கு விளக்கும்பொருட்டு அநேக ஆலயங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது சரியே. நாம் கம்மூடைய பாலர்களை ஆலயங்களுக்கு அழைத்துப் போகும்பொழுது குழந்தைகள் அம்மா அங்கே என்ன இருக்கிறதென்று கேட்டால் நாம் சுவாமியிருக்கிறார் என்று பதில் சொல்லுவோம். எங்கே நான் அவரைபார்க்கவேண்டுமென்று உள்ளே போய் சுவாமியை பார்த்து அம்மா சுவாமி கல்லாயிருக்கிறாரே. ஏன் என்று கேட்கும். நாம் அப்படிச் சொல்லாதே கடவுளை கல்லென்றால் பாவம் வரும். மேலும் அவர் நம்மை கோபித்துக் கொள்வார். பிற்பாடு கரகத்திற்குதான் போக வேண்டும என்று பதில் சொலலக்கூடாது. பின்னை எப்படி பதில் சொல்லுவதென்று கேட்டால் நாம் பிள்ளைகளை ஆலயத்திற்கழைத்துக் கொண்டுபோக வேண்டியதவசியம். அங்கே பிள்ளைகள் கேள்வி கேட்டாலும் சரி கம்மாயிருக்காலும் சரி. நாம் நன்றாய் அதற்குத்தெரியும்படியாய் போதிப்பது நமது கடமை. என்றே உண்மையைப் போதிக்கவேண்டும்: அம்மா சுவாமி கல்லாயிருக்கிறதே என்றால். நாம் என்னருமைக் குழந்தாய் அதற்கு காரணம் சொல்லுகிறேன் கேள். கடவுள் உள்

னபடி அரூபியானவரே தவிர ரூபமுள்ளவரல்ல. ஆனாலும் கிருஷ்டி, திதிசம்காரங்களென்னும் மூத்தொழிலும் அவரே செய்யக்கூடியவராதலால், அந்த சமயங்களுக்குத் தகுந்தபடி ரூபம் எடுத்துக்கொள்வாரென்றும் உலகத்தை கிருஷ்டிக்கும் பிரம்மதேவனாகவும் ரக்ஷிக்கும் பொழுது மகாவிஷ்ணுவாகவும் சம்காரம் செய்யும் பொழுது பரமசிவனாகவும் ரூபம் எடுத்துக் கொள்வார். அந்தரூபங்களே ஆலயங்களில் பிரதிஷ்டை செய்திருக்கிறது. விக்கிரக ரூபமாய் வைத்திருப்பது நம்முடைய நன்மைக்காகவென்றும் போதிக்கவேண்டும். நாம் விக்கிரகங்களே வணங்கும் பொழுது நமக்கார்க பகவான் அதில் தங்குகிறாரென்று நினைத்தாம் உண்மையாக பக்திசெய்யவேண்டும். அப்படி செய்யும் பொழுது அவர் கன்றுய்த் தெரித்து கொள்வார் என்று நாம் நினைத்துக்கொள்ளவேண்டும்.

கிறிஸ்தவர்கள் நாம் விக்கிரக வணக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று புழிக்கிறார்கள் என்று பாலர்கள் நம்மைக் கேட்பார்கள். அப்பொழுது நாம் பதில் என்ன சொல்லவேண்டுமென்றால் அசற்கு ஒரு கிருஷ்டாந்தம் சொல்ல வேண்டும். கிறிஸ்தவராகிய நம்முடைய சக்ரவர்த்திக்கு 1911 வருஷம் டிசம்பர் மீ 12-உ டில்லியில் பட்டாபிஷேக மகோத்சவம் நடந்தது. அப்பொழுது எல்லா ஊர்களிலும் சக்ரவர்த்தி தம்பதிகளுடைய படங்களே என் சாரட்டு வண்டிகளில் வைத்து ஊர்வலம் செய்வித்தார்களென்றும் நாம் விளக்கிக்காட்டவேண்டும். எப்படி என்றால் அந்தப்படமே அரசனல்லவென்று எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். நாம் ராஜபக்தியைக் காட்டும்பொருட்டும் நமக்கு சதா ஞாபகம் இருக்கும் பொருட்டும் அந்த தினத்தை பண்டிகை தினமாகக் கொண்டாடினோம் என்பது தெரிந்த விஷயம். மேற்சொன்ன சக்ரவர்த்திக்கே இவ்வளவு ஆடம்பரங்கள் வைத்துக்கொண்டிருக்கிறோம். எல்லாவற்றையும் உண்டுபண்ணின கடவுளுக்கும்

இந்த பரத்தில் நம்மை ஆதரிக்கிறவருக்கும் நாம் ஆலயங்கள் கட்டி உற்சவாதிகள் செய்வது என் பிரசனென்று நினைக்கவேண்டும்? ஆலயங்களுக்குப்போவதும் விக்கிரகங்களை வணங்குவதும் காளுக்கு நாள் பாவங்கள் குறைந்து ஞானம் அதிகமாகிறதற்கென்றே நினைத்து ஆலயங்கள் கட்டியிருக்கிறார்கள். "ஆலயந்தொழுவது சாலவு நன்று" என்று நம் முன்னோர்கள் வித்திருக்கிறார்கள். ஆகையால் ஆலயந் தொழுவது உத்தமமே தவிர அதம மில்லை என்று போதிக்க வேண்டும். மேலும் பிள்ளைகள் பலவிதமான கேள்விகளைக் கேட்கக்கூடும். ஆதலால் இன்னுஞ்சில விஷயங்களை குறிப்பிட்டுச்சொல்ல வேண்டும். என்னவென்றால், மதமதங்களில் இருப்பவர்கள் ஒரே ஒரு கடவுளென்று சொல்லும்பொழுது நாம் மாத்திரம் பதினாயிரம் கடவுளென்று சொல்லுவானேன் என்று கேட்பார்கள். அதற்கும் நாம் பிள்ளைகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். நம்முடைய தேசத்திற்காவது அல்லது உலகத்திற்காவது உண்மையாக ஒரே ஒரு கடவுள்தான். பல கடவுள் வந்த விதமும் காரணமும் சொல்லுகிறேன் என்றும் விபரமாய்ச் சொல்லவேண்டும். எப்படி என்றால், இந்த உலகம் உண்டான நாள் முதல் இவ்வளவுகாலம் ஆன தென்று கணக்கிட்டுச் சொல்லமுடியாது. உலகம் உண்டான நாள் முதற் கொண்டு நல்லவர்களும் பொல்லாதவர்களுமாயிருந் திருக்கிறார்கள். இப்படி இருக்கும் பொழுது கடவுள் துஷ்ட ஜீக்கிரகம் சிஷ்டபரிபாலனம் செய்வது அவருடைய கட்டமையாதலால் துஷ்ட ஜனங்கள் மீறி நல்லவர்களுக்கு சதா இடைஞ்சல் செய்யும் பொழுதும் மாயா பிசாசின் மகிமையினால் வர்ணஸ்ரமங்களுக்கும் தருமங்களுக்கும் ஹானியுண்டாகும் பொழுதும் அவர் பல ரூபங்கள் எடுக்கும்படி ஏற்பட்டது. இதுவே தவிர பலவிதமான சுவாமிகள் உள்ளபடி கிடையாது. இராவணனால் ஜனகனுக்கும் தேவாளுக்கும் இம்சை பொறுக்க முடியாதிருந்தது. அப்பொழுது அவர்கள் பர

வானைக்கூப்பிட்டு சத்தமிட்டார்கள். கடவுள் இராமராய்ப் பிறந்து துஷ்டநிக்கிரகத்தின் பொருட்டு இராவணனை சம்காரம் செய்தார்

இதைப்போலவே இரண்யாக்ஷனென்னும் இரண்யகசிபு வென்னும் அசுரர்கள் ஜனங்களைப் பலவிதமாய் இம்சித்தார்கள். கடவுள் நரசிங்க ரூபமாய் வந்து மகாகோரத்துடன் வந்து அசுரனை சங்காரித்தார். சூரன் என்னும் அசுரனால் ஜனங்கள் கஷ்டப்படும்பொழுதும். கடவுளைநோக்கி கூப்பிட்டார்கள். அப் பொழுது கடவுள் சுப்பிரமணிய ரூபத்துடன் வந்து. வேலாயுதத்தினால் சூரனை இரண்டாகப் பிளந்தார் துவாபரயுகத்தின் முடிவில் கிருஷ்ணனாக வந்து கம்சனையும் ஜராசந்தன் முசலிய வர்களையும் சிட்சித்தார். இன்னும் அநேக இடைஞ்சலும் தீர்த்து வைத்து பகவத்கீதை என்னும் அமிர்தத்தை நமக்குப்புகட்டினார். அந்தக்காலங்களில் இருந்த வித்வான்கள் உடனுக்குடனே அந்த ரூபங்களை வர்ணித்து நமக்குபலபுஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். நமக்கு புத்தியில்லாதபடியால் முன்னோர் எழுதிவைத்த சூட்சமங்களைத் தெரிந்து கொள்ளாமல் மதச்சண்டைக்கு கட்சிகட்டுகிறோம் அதற்கு கடவுள் என்ன செய்வார். இன்னும் முன்னோர்கள் எழுதின எல்லாபுஸ்தகங்களும் நாம் படிப்பதில்லை படித்தால் முதலில் பிரமாதமாகத் தோற்றும். பிற்பாடு விசாரித்துத்தெரிந்து கொண்டால் நன்றாய் விளக்கும். சூட்சமம் என்னவென்றால். உண்மையான கடவுள் ஒருவரென்றும். ஜனங்களை ரட்சிக்கும்பொருட்டு பலரூபங்களாய் அவரே அவதாரம் எடுக்கிறார் என்றும் போதிக்கவேண்டும். ஒருவித்வான் எழுதின நூலில் எந்த அவதாரத்தைக் குறித்து எழுதினாலை அந்த அவதாரம் தான் உண்மையான கடவுள் என்றும் எழுதியிருக்கிறதற்கு தவிர. அவரே பெரியவரென்றும் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறான். இப்படி பலவிதமான ரூபங்களாய் நூல்கள் எழுதினார்கள். எதற்காக

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 OCT 1913
MADRAS.

எழுதினார்களென்றும் கேட்டால் நமக்கு லாபகார்த்தத்திற்காக வும் ஆபத்துகளில் ரக்ஷித்த பகவானே மறக்காமலிருக்கும்படி க்குந்தான். மேலும் நம்மை ஆபத்துகாலங்களில் ரட்சித்து பர மபதமளிக்கும் பொருட்டும் எழுதியிருக்கிறார்கள். இதுதான் உண்மையான விஷயம். எல்லா ரூபங்களுக்கும் உடனுக்குட னே ஆலயங்கள் உண்டுபண்ணினார்கள். ஆதலால் தனித்தனி மேலே சுறிப்பிட்ட ரூபங்களுக்கு கோவில்கள் ஏற்பட்டிருக்கி றது. இந்த உண்மையான காரணத்தை நாம் தெரிந்துகொள் ளாமல் அந்தக் கடவுள் வேறேயென்றும், இந்தக்கடவுள் வேறே யென்றும் ப்ரம்மா வேறேயென்றும் மகாவிஷ்ணு வேறேயென் றும் பரமசிவன் வேறேயென்றும் நம்முடைய அறியாமையினா ல் சொல்லிக்கொள்ளுகிறோம். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். நாடகத்தில் சிலசமயம் ஒருவனே பல வேஷ ங்கள் போட்டுக்கொண்டு நடிப்பான். அதை வேடிக்கை பார் க்கும் ஜனங்கள் பெரும்பாலும் தெரிந்துகொள்ளமாட்டார்கள். அதைப்போலவே சில காரணத்திற்காக ரூபங்கள் எடுத்துக் கொள்வதையறியமாட்டார்கள். மேலும் சில மூட ஜனங்கள் பிசாசுகளையும் கோரமான இராக்ஷதர்களையும் காளியென்றும் கூளியென்றும் பெயர்வைத்து மாமிச பலிகளைக் கொடுத்து சந்தோஷமாக வணங்குவார்கள். இதெல்லாம் அந்த உண்மை யான கடவுளுக்கு ஒருபொழுதும் பிரியமில்லை. அவர் உண் மையான கடவுளானதினாலும் பரிசுத்தரானதினாலும் அசுத்த மான இரத்தத்தையும் மாமிசத்தையும் இச்சிக்கமாட்டார். ஆனால் எதை இச்சிப்பாரென்றால் நாம் ஜீவகாருண்யமா யிருக்க வேண்டுமென்பதையும் அவர் இட்ட சட்டத்திற்கு நாம் உட் பட்டு நடக்கவேண்டுமென்பதையுமே.

ஆகையால் பாலர்களே! மதவிஷயமான சங்கதிகள் தெரி ந்துகொண்டீர்களல்லவா என்று நாம் கேட்கவேண்டும். இப் பொழுது முக்கியமாய் நாம் தெரிந்துகொள்ள வேண்டியதென்

னவென்றால் கல்லே கடவுளில்லையென்றும் நமக்காக அதில் தங்குகிறாரென்றும் தெரிந்துகொள்ள வேண்டியது. மேலும் பூகோள கோள சாஸ்திரங்கள் நம்முடைய ஜனங்கள் எழுதி வைத்ததற்கும் மேல்நாட்டு ஜனங்கள் எழுதிவைத்ததற்கும் சில வித்தியாசங்கள் உள்ளபோதிலும் இவற்றை நம்முடைய புத்தியினால் சரியாயிருக்கிறதாக நினைத்துக்கொள்ளலாம். எப்படி என்றால், சூரிய சந்திர கிரகணமென்று அடிக்கடி சொல்லுகிறார்களல்லவா? அதனுடைய விபரம் நம்முடைய ஜனங்கள் சொல்லுகிறபடி ராகுவென்றும் கேதுவென்றும் பாம்புகள் போய் சூரிய சந்திரர்களே பிடிக்கிறதென்று சொல்லுகிறார்கள். மேல்நாட்டு ஜனங்கள் சூரியனே பூமி சுற்றிவரும் பொழுதும் சந்திரன் பூமியைச் சுற்றிவரும்பொழுதும் இடையில் கிரகத்தினால் மறைக்கப்படுகிறதென்று சொல்லுவார்கள். இந்த விஷயத்தில் ராகு கேதுவென்னும் கிரகங்கள் நவக்கிரகங்களில் சேர்த்திருக்கிறபடியால் சூரிய சந்திர கிரகத்தை ராகுவென்னும் கிரகமாவது, கேதுவென்னும் கிரகமாவது மறைக்கவேண்டும். இந்த விஷயத்தில் சூட்சுமமாக பொருத்தமிருக்கிறபடியால் நம்முடைய ஜனங்கள் சொல்லுவது பொய்யல்லவென்றே கினைக்கவேண்டும். மேல்நாட்டுக்காரர்கள் பூமியை உருண்டை வடிவமென்று சொல்லுகிறார்கள். நம்முடைய ஜனங்களும் பூமியை அண்டம் என்றும் ப்ரமாண்டம் என்றும் சொல்லுகிறார்கள். அண்டமென்றால் முட்டை, இந்த விஷயத்திலும் பொருத்தமுடையதாயிருக்கிறது. இன்னும் நாம் சூட்சுமங்களே நன்றாய்ப் பாபெட்டு விசாரித்தால், உண்மை விளங்கும். கிரகணம் தீண்டுகிற காலங்களில் மூழ்குவானேன் என்று சில பிள்ளைகள் கேட்கக்கூடும். ஆகையால் அதற்கும் ஒரு காரணம் இருக்குமென்று தோன்றுகிறது. என்னவென்றால் கிரகணம் தீண்டும்பொழுது பாரிசகாலமென்றும் மத்ய காலமென்றும் மோக்ஷகாலமென்றும் குறிப்பிட்டிருக்கிறது. நாம் அதை சில விஷயத்தில் அர்த்தம் செய்துகொள்ளவேண்

டும். சூரிய சந்திரான் பீடிக்கப்பட்டு விமோசனம் அடைவ தால் நமக்கும் பத்தமென்றும் மோக்ஷமென்றும் ஏற்படுத்தியிரு ப்பதை நாம் நினைவு கூறவேண்டும். சூரிய சந்திராளே வெளி ச்சமில்லாமல் ராகு கிரகங்கள் மறைக்கிறபடியால் அக்கியான ம் என்னும் மாயா பிசாசு நம் மனதில் இருக்கிற வெளிச்சத் தை மறைக்கிறது. ஆகையால் கிரகணங்களே நமக்கு விளக் கும் பொருட்டு ஸ்நானங்கள் செய்யவேண்டுமென்று ஏற்படுத் தியிருக்கவேண்டும். நாம் ஸ்நானம் செய்யும்பொழுது நம்மு டைய மனதிலிருக்கும் மாயா பிசாசின் இருட்டை விலக்கும் படி பகவானைப் பிரார்த்தித்து முழுகவேண்டும்.

மேற்சொன்ன விஷயங்களே நாம் தெரிந்துகொள்ளவே ண்டுமென்று நம் முன்னோர்கள் அபிப்பிராயப்பட்டு கிரகண ஸ்நானம் விதித்திருக்கிறார்களென்று நாம் போதிக்கவேண் டும். சகோதரிகளே! அத்துவிதம் என்னும் பாகத்தை சிறு பிள்ளைகளுக்கு போதிக்கக்கூடாது. அப்படிப் போதித்தால் அகம்பாவம் ஸிருத்தியாகி சங்கடப்படுவார்கள். எனென்றால் அத்துவிதத்தை அநுசரிக்கிற முறை வெகு கஷ்டம். இந்த கஷ்டமான பாகத்தை சிறு பிள்ளைகளுக்குப் போதித்தால் "சூட்டி வேதாந்தம் குடியைக் கெடுக்கும்" என்னும் பழமொ ழியை உண்மை யாக்கிவிடுவார்கள். அத்துவிதம் என்னும் வேதாந்தம் மனது சுன்னுப்பக்குவப்பட்டவர்களுக்கே தெளி வாய் விளங்கும். அல்லாமல் நம்மைப்போல சாதாரண மனி தர்களுக்கு அது விளக்கமாட்டாது. அப்படி மனதிற்கு விள ங்கினாலும் வாசாஞ்ஞானமாய் பேசமுடியுமே தவிர அது சொன்ன முறைப்படி நடக்கமுடியாது. மேலும் நம் பாலர் களுக்கு சந்நியாச மார்க்கத்தையும் போதிக்கக்கூடாது. அப் படிபோதித்தால் மோசம் நாசம் கும்பளி வேஷம் என்று முடி யுமே தவிர, சந்நியாச மார்க்கம் உண்மையாய் நடக்கமுடியாது. என் முடியாதென்றால், தன்னைப் பெரியவனென்று எல்லாரும்

வணங்க வேண்டுமென்ற கெட்ட எண்ணம் முதலில் உற்பத்தி யாகும். இரண்டாவது தன்னுடைய ஆத்மாவை மகிழ்த்துக் கொள்ளும் வீதம் தெரியாமல் பலபேர் ஆத்மாவை கரை ஏற்றுவதற்கு எனக்குத் தெரியுமென்றும் சொல்லிக்கொள்வான். தன் மனதிலுள்ள அழுக்கை கழுவமுடியாமல் பிறருக்கு உபதேசம் செய்யத் தலைப்படுவான். அந்த மோசமான உபதேசத்தைக் கேட்டு ஏமாந்துப் போகாமல் சந்தோஷமாய் நாம் கடைத்தேறுகிற வித்தத்தைத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். நான் மேற்சொன்ன விஷயங்கள் உண்மையான மகாத்மாக்களாகிய சந்நியாசிகளை அல்ல தற்காலத்தில் வேஷங்கள் போட்டு மோசங்கள் செய்யும் துர்க்குணமுள்ளவர்களையே குறிப்பிட்டு சொன்ன விஷயம் தற்காலத்தில் சந்நியாசி வேஷம்போட்டுக் கொள்ளுகிறவர்கள் பெரும்பாலும் ராவண சந்நியாசி என்றும் அர்ச்சுன சந்நியாசி என்றும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

கங்காஸ்நானத்தைக் குறித்து நம்முடைய பிள்ளைகள் கேள்விகள் கேட்கக்கூடும். அதனுடைய சூட்சுமத்தையும் நாம் போதிக்கவேண்டும். எப்படி. என்றால், தாகமுள்ளவன் தண்ணீரைத் தேடுவான். அழுக்குள்ளவனும் தண்ணீரைத் தேடுவான். அதைப்போலவே ஆத்மாவுக்கு கடவுளைப் பார்க்கவேண்டுமென்னும் தாகம் உண்டான உடனே அவன் அவசியம் கடவுளைத்தேடுவான் அல்லது தேட முயற்சிப்பான். தாகம் எடுத்த பிற்பாடு தண்ணீர் குடிக்க கிணறு வெட்டுவது தப்பு. முதலிலேயே குடிஜலத்திற்காக கிணறுவெட்டவேண்டும். கங்காஸ்நானம் செய்தால் மோக்ஷமென்று விதித்திருக்கிறதை சூட்சுமமாக தெரிந்துகொள்ளவேண்டும். கங்கை சரீரத்திற்கு தாகத்தைத் தீர்க்கும். கடவுள் ஆத்மாவுக்கு தாகத்தைத் தீர்ப்பார். கங்கை சரீரத்திலுள்ள அழுக்கை நீக்கும். கடவுள் சித்தத்திலுள்ள அழுக்கை நீக்குவார். கங்கை உன்

னதமான இமயமலையிலிருந்து நம் தேசத்தை போஷிக்க இற
ங்கிவருகிறது. கடவுளும் நம்முடைய ஆத்மாவைப் போஷிக்
கும்படி உன்னதமான இடத்திலிருந்து இறங்கி வருகிறார்.

ஆகையால் நம் முன்னோர்கள் கங்கையை மோக்ஷம் கொ
டுக்கும் வஸ்துவென்று சூட்சுமமாக விதித்திருக்கிறார்கள்
இந்த சூட்சுமத்தை நாம் பிள்ளைகளுக்கு போதிக்கவேண்டும்.
இப்படி பலவிதமாய் பிள்ளைகளுக்கு சூட்சுமமான போதனை
கள் போதிக்கவேண்டும். மேலும் ஆண்டவன் என்றும் அடிமை
என்றும் துவிதத்தையே போதிக்கவேண்டும். இப்படி இல்
லாமல் நாமே கடவுளென்றும் கடவுளே நாமென்றும் போதிப்
பது பிசகென்று உணரவேண்டும். இந்த இடத்தில் பகவான்
பகவத்கீதையில் சொல்லுகிறதென்னவென்றால் அத்துவிதத்
தை அனுசரிக்கிறது கடினமான வழியென்றும் தமது திவ்
விய மங்கள ரூபத்தை பக்திசெய்வதே மேலானதென்றும்
சொல்லியிருக்கிறார். ஆகையால் வேதாந்த வழிகளை அனுசரி
க்காமல் சித்தாந்த முறையை அனுசரிக்கும்படி நம்முடைய
பாலர்களுக்கு உபதேசிக்கவேண்டும். அத்துவித முறையை
கோபத்தையே விட்டவர்களும் ஆசையை பூராவாக விட்டவர்
களும் மகாத்துமாக்களும் ஆகிய பெரியோர்களுக்கு விதித்து
ருக்கிறதை சாதாரணமான நமக்கு விதித்ததாக நினைக்க
க்கூடாது. தாயினிடத்தில் பிள்ளைகள் பக்தியாயும் அன்பாயும்
பிரியமாயும் கூடிக்கொள்ளுவதுபோல நாமும்பகவானிடத்தில்
பக்தியாயும் ரெத்தையாயும் விசுவாசமாயும் இருக்கவேண்டும்.
இந்த முறையை பாலர்களுக்கு போதிக்கும்படி கடவுள் அரு
ளிக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். இத்துடன்
இந்த உபக்கியாசத்தை நிறுத்துகிறேன். அடுத்த ஞாயிறு சுகா
சாரத்தைக் குறித்து சொல்லப்போகிறேன். ஆகலால் அவசி
யம் எல்லாரும் வாவேண்டும்.

12-வது சுகாதாரம்.

சகோதரிகளே! நீங்களெல்லாம் தவறாமல் ஸமாஜத்திற்கு வருவதைக் குறித்து சந்தோஷப்படுகிறேன். இன்றையதினம் சுகாதாரத்தைக் குறித்து சொல்லுகிறேன். இதுவும் முக்யமான விஷயமாதலால் சகோதரிகள் கவனமாய் கேட்கவேண்டுமென்பதே எனது கோரிக்கை. நம் முன்னோர்கள் சுத்தாசுத்தத்தைக் குறித்து நமக்காக பலசாஸ்திரங்களே எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். தற்காலத்திலும் சுகாதாரங்களே குறித்து அதிகம் படித்தவர்கள் விசேஷமாய் அக்கரை யெடுத்துகொண்டிருக்கிறார்களென்பதும் அநேகர் அறிந்த விஷயம். நம் முன்னோர்கள் தர்மசாஸ்திரத்தில் அசுத்தமான பேர்கள் மேல் விழுந்தால் அல்லது அவர்களைத்தொட்டால் ஸ்நானம் செய்ய வேண்டுமென்றும் கால்களைக் சுத்தம் செய்து சாப்பிடவேண்டும் என்றும் மேலும் பலவிதமாய் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் தற்காலத்திலுள்ளவர்களும் அநேகமாய்ப் பாடுபடுகிறார்கள். இராஜதானிக்குத் தலைமையான நகரங்களில் கார்பொரேஷன் என்றும் பெரிய பட்டணங்களில் முனிசிபாலிடியென்றும் தாலூக்காதோறும் யூனியனென்றும் பிரித்து ஆபீஸ்கள் வைத்து சிப்பந்திகளே ஏற்படுத்தியிருக்கிறார்கள். என்ன ஏற்படுத்திலுலும் பெண்களாகிய நாம் சுகாதாரத்தை கவனிக்காவிட்டால் பூர்த்தியாகமாட்டாதென்றே சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் சுகாதாரமுறை பூர்த்தியாகமாட்டாது. ஏனென்றால் தனவான்களும் தனவான்களும் தங்களருமையான உயிரை பேதையான பெண்களிடத்திலும் அசுத்தமான சமையல்காரனிடத்திலும் கேவலம் ஆபாசமாகிய காப்பிக்கடையிலும் ஒப்புவித்தார்களென்றே சொல்லவேண்டும். இதற்கு சந்தேகமில்லை. ஆக, சுத்தத்தை நாம் முதலில் கவனிக்கவேண்டும்.

சுத்தம் மூன்று விதம்.

1. வீடு சுத்தம். இது முக்கியமான விஷயம் ஆகையால் மேற்குறித்த கார்பொரேஷன் முனிசிபாலிடி யூனியன் முதலிய ஆபீஸ்களிலுள்ள வேலைக்காரர்கள் நம்முடைய வீட்டிற்கு வெளியே யிருக்கும் குப்பைகளை அப்புறப்படுத்தி சுத்தம்செய்வார்களே தவிர வீட்டிற்குள் வந்து குப்பையை சுத்தம்செய்ய மாட்டார்கள். ஆகையினால் வீட்டு சுத்தத்தைக் குறித்து நாம் தான் கவலையெடுத்துகொள்ளவேண்டும். எப்படியென்றால், ஒருவாளுக்கு குறைந்தபட்சம் இரண்டு தடவையாவது நன்றாய்க்கூட்டிப் பெருக்கி குப்பையை அப்புறப்படுத்தவேண்டும் சாக்கடை ஜலம் தேங்கி நீற்காமலும் சாக்கடை நாற்றமில்லாமலும் சுத்தம் செய்யவேண்டும். நன்றாய் ஜலம்விட்டு கழுவவேண்டும். நாம் உபயோகிக்கும் பாத்திரங்களையும் நன்றாய் சுத்தம் செய்யவேண்டும். குறைந்தபட்சம் வருஷத்திற்கு இரண்டு முறையாவது நன்றாய் நாம் வாசம்செய்யும் வீட்டிற்கு சுண்ணாம்படிக்கவேண்டும். வீட்டுக் கொல்லைப்புறத்திலுள்ள குப்பைகளை நன்றாய அள்ளி கொஞ்சம் தூரத்தில் எருவாகப் போட்டுவைக்கலாம். மேலும் கொல்லையெல்லாம் சாணி தெளித்து சுத்தமாய் கூட்டிவைக்கவேண்டும். ஆதலால் வீடு சுத்தம் அவசியம்.

2. தேக சுத்தம்.—இதுவும் முக்கியமான விஷயம் தேகத்தில் அழுக்கு விருத்தியாகாமல் தினந்தோறும் ஸ்நானம்செய்யவேண்டும். சோப்பாவது சீயக்காயாவது போட்டு நன்றாய் அழுக்கைத் தேய்த்துக் குளிக்கவேண்டும். தலைமயிர்களை நன்றாய் எண்ணெயிட்டு வாரி முடிந்துகொள்ளவேண்டும். இது அழகுக்காக மட்டுமல்ல. பேன், ஈறு முதலியவைகள் தலையில் வராமலிருக்கும் பொருட்டு சுத்தம் செய்துகொள்ளவேண்டும். இப்படி சுத்தமாய் இருந்தால் வியாதி வரமாட்டாது. தேகம் ஆரோக்கியமாயிருக்கும்.

3. உடை சுத்தம்.—இதுவும் முக்கியமான விஷயம். நாம் தரிக்கும் உடை சுத்தமானதா அல்லவாவென்று கவனிக்க வேண்டும். தினந்தோறும் அவசியம் உடையை மாற்றிக்கொள்ளவேண்டும். தினந்தோறும் நாம் தோய்த்து வைத்திருக்கும் உடையை வாரத்திற்கு ஒருமுறை வண்ணானுக்குப் போட்டு சுத்தம் செய்துகொண்டு வரச்சொல்லவேண்டும். அதனுடன் படுக்கை உரைகளையும் வண்ணானிடத்தில் வாரத்துக்கு ஒரு முறைபோட்டு சுத்தம் செய்யவேண்டும். நாம் படுத்துக்கொள்ளும் படுக்கையை மாதத்திற்கு ஒருமுறையாவது வெயிலில் போடவேண்டும். இதனுடன் பிள்ளைகளுடைய உடுப்புகளையும் அவசியம் கவனிக்கவேண்டும். தொட்டிலில் விரிக்கிற துணிகளும் சுத்தமானதாவென்று கவனிக்கவேண்டும். தொட்டில் கட்டுகிற துணியும் சுத்தமாயிருக்கவேண்டும். பிள்ளைகளுக்கு ஆறுமாதமான உடனே அம்மை வைக்கவேண்டும். பாலர்களுக்கு நிரக்பீடை என்று பரிகாரம் செய்வதைவிட சுத்தமான உடுப்பு விசேஷம். மேலும் இன்னம் நம்முடைய தேக சுகத்திற்கு இன்றி அமையாத மூன்று முக்கிய விஷயங்களையும் நாம் கவனிக்கவேண்டும். அதென்னவென்றால் காற்று, ஜலம், உணவு.

1. காற்று—இது தேகத்துக்கு சுகமானது இதில் அமிர்தம் கலந்திருப்பதாக புராதன வைத்திய சாஸ்திரிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் நாம் உட்கொள்ளும் காற்று நல்லதா கெட்டதாவென்று காமே கவனித்துக்கொள்ளவேண்டும். நல்லகாற்று எதுவென்றால் கடற்காற்று சுத்தமானதோட்டம் அல்லது சுகாரவனம், இதில் உலாவும் காற்று, ஆறு குளம் இதின் சமீபத்தில் உள்ள காற்று, சுத்தமான வீடுகளில் மாடி மேற்புறத்தில் உள்ள தெல்லாம் நல்ல காற்று. கெட்ட காற்று எதுவென்றால், சேங்கொட்டை மரங்கள், நோவாள மரங்கள், அசுத்தமான மலங்கள் நிறைந்த குப்பைகளிருக்கு

மிடங்களில் உலாவும் காற்றெல்லாம் கெட்ட காற்றுதான். இது தேகத்துக்கு வியாதி உண்டாக்கும் என்றறியவேண்டும். ரஸ்தா பள்ளங்களிலும் கெட்டகாற்றுதான். ஆகையால் நாம் உட்கொள்ளும் காற்றை அவசியம் நாம் கவனிக்கவேண்டும்.

2. ஜலம்—இதுவும் நம்முடைய தேகத்துக்கு முக்கியமான விஷயம்தான் என்பதற்கு சந்தேகமில்லை. ஜலத்தை மூன்று விதமாக உபயோகப்படுத்துகிறோம். எப்படியென்றால், குடிக்கும் ஜலம், குளிக்கும் ஜலம், சமையல் முதலியவைகளுக்கு உபயோகிக்கும் ஜலம் என்ற மூன்று விதத்திற்கு ஜலம் அவசியம் என்பது நம்முடைய சகோதரிகளுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம். இருந்தாலும் ஜலத்தைக்குறித்து எத்தனை சடவை எத்தனை பெயர் சொன்னாலும் கல்லதென்றே கவனிக்கவேண்டும். நம் தேசத்தில் இதையறியாததினால் பலபேர் மாண்டுபோகிறார்கள் என்பது பொய்யல்ல ஆதலால் ஜலத்தை அவசியம் நாம் கவனிக்கவேண்டும். குடிக்கும் ஜலம் கல்ல ஊற்றுகளிலிருந்து கொண்டுவரவேண்டும். அப்படி சரிப்படாவிட்டால் ஆழமான கிணறுகளிலிருந்து கொண்டுவரவேண்டும். சமயலுக்கு உபயோகிக்கும் ஜலமும் அப்படியே சுத்தமாயிருக்கவேண்டும். தொத்து வியாதிகள் நடமாடும்பொழுது ஜலத்தை நன்றாய்க்காய்ச்சி வடிகட்டி ஆறவைத்து சாப்பிடுவது கல்லது. குளிக்கும் ஜலமும் சுத்தமாயிருப்பது கல்லது. நீராதபஸ்தானத்திற்கு சமீபத்தில் இருக்கும் ஜலத்தையே வெண்ணீர்வைத்து குளிப்பதும் கல்லது. உட்கொள்ளும் ஜலத்தை அவசியம் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும்.

மேலும் சமயல் வேலைக்காரர்கள் சுத்தமாய் இருக்கிறார்களா என்று அவசியம் கவனிக்கவேண்டும். அப்படி கவனிக்கும் பொழுது பெரும்பாலும் சமயல் வேலைக்காரர்கள் அசுத்தமானவர்கள் என்றே விளங்கும். சற்காலம் நாம் ஒரு சீர்திருத்தம்

செய்துகொள்ளவேண்டும். பெரும்பாலும் சமயல்காரர்கள் அசத்தமானவர்களாயிருப்பதால் சுகாதாரத்தைக் குறித்து ஒரு சிறு பரிக்ஷை நடத்தவேண்டும். அது தேச பாஷையிலிருந்தால் போதுமானது. அது முக்யமானது. பெண்களுக்கும் சுகாதார பாடங்கள் அவசியம். இந்த கோதுருத்தத்திற்கெல்லாம் கவர்ண்மென்ட் அவசியமில்லை. இந்த விஷயம் அவசியமானதால் கிராமத்திலும் பட்டணங்களிலும் நகரங்களிலும் உள்ளவர்கள் அந்தந்த ஊர்களில் கூட்டங்கள் கூடி சுகாதார பாடங்கள் படித்து பரிக்ஷை கொடுத்தால்தான் கண்டிப்பாய் சமயல் வேலைக்கு வைக்கமுடியுமென்று சமயல்காரருக்கு சொல்ல வேண்டும். அந்தப்படி சமயல்காரர்கள் பரிக்ஷைகொடுத்தாலும் வீட்டிலுள்ள பெண்கள் மேல்பார்த்துகொள்ளவேண்டியது அவசியமாதலால் சுகாதாரமுறை பேப்பர்களே பெண்களும் படிக்கவேண்டும். சதுர்வித புருஷார்த்தங்களையும் அனுபவிக்க பிராணனே மூலகாரணமாயிருக்கிறபடியால் வியாதிகள் வராமல் இருக்கும்பொருட்டு சுகாதாரமுறை அவசியம். காப்பிக்கடைகளுக்கு புருஷர்களைப் போகாமலிருக்கும்படி சாத்திய மானவரையிலும் தடுக்கவேண்டும் ஏனென்றால் புருஷர்கள் அடிக்கடி காப்பிக்கடைக்குப்போய் அசுத்தமான பதார்த்தங்களே சாப்பிட்டு வியாதி வருவித்துக்கொள்ளுகிறார்கள். ஏனென்றால் காப்பியில் கலக்கும் பால் பல்வித தரமான பாலென்பதும் தெரிந்த விஷயம். எருமைப்பால், ஆட்டின்பால், பசுவின்பால் இதையெல்லாம் கலப்பார்கள். மேலும் இதைக் கறந்த உடனே காப்பியில் கலக்தாலும் சில வியாதிகளாவது கண்டிக்கும். அப்படியும் இல்லாமல் இராத்திரி கறந்தபால் மறுநாள் காலையில் காப்பியில் கலப்பார்கள். இன்னும் கூடியே இல்லாமல் கடையில் ஆபாசம் சாஸ்தியாயிருக்கும். இந்த கடைகளுக்கெல்லாம் பெண்பிள்ளைகள் போகிறதில்லை. ஆண்பிள்ளைகள் தான் அடிக்கடி போகிறார்கள். பலவகை பக்ஷணங்களிலும் இலுப்பநெய், கல்லநெய், கல்லெண்ணெய், தேங்காயெண்

ணெய், கடலெண்ணெய், விளக்கெண்ணெய் இதெல்லாம் சேர்த்து பலகாரங்கள் செய்கிறார்கள் என்று யாவருக்கும் தெரிந்த விஷயம். நம்முடைய தேசத்தில் பலகாரணங்களினால் வியாதி வருகிறதென்று சொல்லுவதில் புருஷர்கள் காப்பிக் கடைக்கு போவதும் ஒரு காரணமென்று சொல்லவேண்டும். ஆகையினால் சாத்தியமானவரையிலும் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரையும் காப்பிகடைக்குப் போகாமல் தடுக்கப் பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும். அல்லது காப்பி கடையை சுத்தமாய் வைத்துக் கொள்ளும்படியாவது தூண்டவேண்டும்.

நம்முடைய தேசத்தில் வயதானவர்கள் காப்பிக்கடை மடியாயிருக்கிறதில்லை என்று போகாததினால் அவர்கள் தொந்திப்பான வியாதி இல்லாமல் இருந்தார்களென்று தோன்றுகிறது. சமயல் வேலைக்காரன் தோள்மேல் அசுத்தமான துணியிருப்பது தெரிந்த விஷயம். அந்த அசுத்தமான துணியை நாமெல்லாரும் சாப்பிட்டான பிற்பாடுதான் கீழேவைப்பான். பிறகு நல்ல உடையைத்தரித்துக்கொண்டு வெளியில்போவான். வீட்டில் வேலைசெய்யும்பொழுது இந்த அசுத்தமான துணியினால் மூக்கைத் துடைத்துக்கொள்வான். சமயலுக்கு புளி கரைக்கும்பொழுதும் கையை அதில் துடைத்துக்கொண்டு கரைப்பான். அம்மி, கல்லுரல், முதலியதைத் துடைக்கும்பொழுதும் அந்த அசுத்தமான துணியினால்தான் துடைப்பான். பிற்பாடு சட்னி கையைக் கரைக்கத் தலக்குவான். பாத்திரங்களைத் துடைத்து வைக்கச்சொன்னால் அந்தத் துணியினால்தான் துடைப்பான். கடைகளில் பலகாரங்கள் வாங்கிக்கொண்டு வரும்படி உத்தரவிட்டால் அந்தத் துணியைக்கொண்டுதான் மூடுவான். புகையினால் கண் எரிச்சலாயிருந்தால் உடனே அந்தத் துணியினாலேயே துடைத்துக்கொள்வான். இத்தனை அசுத்தமும் சுகாதார புஸ்தகங்கள் படித்தவனுயிருந்தால் அவனுக்கே அசுத்தமாய்த்தோன்றி விட்டுவிடுவான். ஆதலால்

அவசியம் சுகாதார பாடங்களைப் படித்துப்பரிகை கொடுத்த வேலைக்காரனை வேலைக்கு வைக்க ஆரம்பம் செய்யவேண்டும். அநேகமாய் உத்தியோகஸ்தர்களையும் தனவான்களையும் வியாதிகள் விடாமல் தொந்தரவு செய்கிறபடியால் நாம் அவசியம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். மேற்சொன்ன விஷயங்கள் வேலைக்காரர் சீர்திருத்தவும் சுத்தமான வேலைக்காரர்களை நாம் வேலைக்குவைக்கவும் சொன்ன விஷயங்கள். சுகாதாரத்துக்காக நாம் வேறே தனிப்பட முயற்சி எடுத்துக்கொள்வது நல்லதென்று தோன்றுகிறது. நம்முடைய வீட்டுப் புருஷர்கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தில் பாதிக்குமேல் காமே அனுபவிக்கிறோம். எப்படி என்றால் நல்ல நகைகள் தரித்துக் கொள்ளவும் நல்ல உடுப்புகளை உடுத்திக்கொள்ளவும் புருஷர் சம்பாதிக்கும் பணமே மூலகாரணமாயிருக்கிறபடியால் வீட்டிலுள்ள சுகாதாரம் கவனிக்க காமே பாதிபடபட்டிருக்கிறோம் என்று உணரவேண்டும். மேலும் தாய்க்கு பின் தாரம் என்று பழமொழி வழங்குவதால் அதை காம் நிலைநிறுத்தும்பொருட்டு சுகாதாரத்திற்காகப் பாடுபடவேண்டும். வீட்டிற்கு உடையவளாதலால் சகலத்திற்கும் பாத்தியப்பட்டவளென்றே நினைத்துக் கொள்ளவேண்டும். நம்முடைய முன்னோர்கள் மடியென்றும் விழுப்பென்றும் விதித்திருக்கிறதை காம் அறிந்து நடந்து கொள்ளவேண்டியது உத்தமம். இலயதானவர்கள் அழுக்குத் தனியாயிருந்தாலும் ஜலத்தில் நனைத்த உடனே மடியென்று சொல்லுவார்கள். அது சரியல்ல. கத்தையானாலும் கசக்கி உதறி, கூழ் ஆனாலும் குளித்துக் குடி, என்னும் பழமொழி எற்பட்டிருக்கிறதை உணர்ந்தால் சுத்தியாயிருப்பதே உத்தமமென்று தோன்றுகிறது. மேலும், சுத்தம் சோறு போடுமென்று சிலபேர்கள் சொல்லுவார்கள். சுசி ருசி யென்று சிலபேர் சொல்லுவார்கள். அதாவது சுசியாயிருப்பதே ருசியாயிருக்கும். சுசிபுள்ளவர்கள் செய்த பண்டம் வாய்க்கு ருசியாயிருக்கும் என்ற அர்த்தம்.

மேலும் சுகாதாரத்தைக் குறித்து மனுதர்ம சாஸ்திரத்தில் கால்களையும் கைகளையும் நன்றாய்க் கழுவிக்கொண்டு பிறபாடு சாப்பிடவேண்டுமென்றும் ஈரம் காயாமல் சாப்பிட்டால் ஆயுள் விருத்தியென்றும் விதித்திருக்கிறது நம்முடைய நன்மைக்காகத்தான். நாம் சாப்பிடும்பொழுது கால்களிலுள்ள தூசியும் அழுக்கும் சாப்பாட்டில் விழுகாமலிருக்கும்பொருட்டு என்றே நாம் நினைக்கவேண்டும். சமையல்வேலைக்கு வேலைக்காரனை வைக்கும்பொழுது சுத்தமுள்ளவனாயிருந்தாலும் யோக்கியனாகவுமிருக்கவேண்டும் மேலும் கற்புள்ளவளாயிருக்கிறாளென்றும விசாரித்தறியவேண்டும். எனென்றால் திருடனாயிருந்தால் நம் வீட்டுப் பொருள்களை திருடுவான். கற்பில்லாதவளாயிருந்தால் பல சொறியும் சிரங்கும் உள்ளவனாயிருப்பான். அப்பொழுது, சொறிந்துகொண்டே சமையல் செய்வான். ஆதலால் நன்றாய் விசாரித்துத்தெரிந்துகொண்டு வேலைக்கு வைக்கவேண்டும்.

நம்முடைய தேசத்தில் புருஷர்கள் மட்டும் நல்ல காற்றுக்காக உலாவ வெளியே போகிறார்கள் பெண்கள் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை. அவர்களையும்கூட உலாவ அழைத்துக்கொண்டுபோவதில்லை. புருஷரைவிட பெண்களுக்குத்தான் சுகாதாரம் முக்கியமாய் வேண்டுமென்று நினைக்கவேண்டும். எனென்றால் நெல் வயலில்விளைவதுபோல ஆணும் பெண்ணும் விளைய ஸ்திரியின் வயிறுதான் மூலகாரணம் என்பதை அறியாமல் இருப்பது பிசகு. கேவலம் நஞ்சை புஞ்சை விளையும் வயல்களுக்கு எராளமான எரு சேர்ப்பார்கள். பெண்களைக் காப்பாற்ற முன்வருவதில்லை. நம்முடைய தேசத்து பெண்கள் கர்ப்பிணியாயிருந்தால் நல்ல காற்றில் உலாவவிடாமலும் தேகத்துக்கு போதுமான ஆகாரங்கள் புஷ்டியாய்க் கொடுக்காமலும் சதா பாகசாலையைவிட்டு வெளிவராமலுமிருக்கும்படிக் கண்டிக்கவும் நன்றாய்த்தெரியும்.

பிள்ளைகள் மட்டும் கன்முய் எப்படிப் பிறப்பார்கள். வெகு ஆரோக்கியமாக அவளுடைய தேகத்தைக் காப்பாற்றவேண்டும். மனதையும் கூடுமானவரைக்கும் சந்தோஷப்படுத்தவேண்டும். இப்படிக்கில்லாமல் கண்ணீரோடும் சதா துக்கப்படும்படி வைத்தால் பிள்ளைக்ளும் ரம்மியமாய்ப் பிறக்கமாட்டார்கள். கர்ப்பிணியா யிருக்கும்பொழுது தாய் எதை கினைக்கிறாளோ அப்படியே பிள்ளைகள் பிறக்கும் என்பது வைத்தியசாஸ்திரம். கர்ப்பிணியாயிருக்கும்பொழுது மூக்கைப்பிடிக்க சாப்பிடக் கூடாது. அப்படி சாப்பிட்டால் குழந்தைகள் மக்காய்ப்பிறப் பார்கள் என்றம் சொல்லுவார்கள். அசனல் ஒளவையும் உண்டி சருவுதல் பெண்மர்க்கழகு என்ற சொல்லியிருக்கிறள். ஆதி லால் நல்ல பிள்ளைகள் பிறந்தால் தேசத்துக்கு உபகாரமா யிருக்கும். நல்ல பிள்ளைகள் பிறக்கும்பொருட்டாவது ஸ்திரீ களை கன்முய்க்காப்பாற்றவேண்டும்.

மூன்முவது.—உணவு. இதவும் முக்கியமான விஷயம் தான். நாம் உட்கொள்ளும் ஆகாரம் நல்லதா கெட்டதா என்று தீர விசாரித்து சாப்பிடவேண்டும். அசுத்தமானதாயிருந்தால் வியாதி வரும். மேலும் உயிர்க்கு அபாயமான பதார்த்தம் சேர்ந்திருந்தால் உயிர்க்கு ஆபத்துவரும் என்பதற்கு சந்தேகமென்ன? நம்முடைய தேசத்தில் சாஸ்திரங்கள் எழுதியிருக்கும். நம் முன்னோர்கள் நமக்காக ஒரு கன்மையை முக்கியமாய் செய்திருக்கிறார்கள். என்னவென்முல், நாம் சாப்பிடுமுன் கொஞ்சம் சாதத்தை காக்காய்க்குப் போட்டு நம்மை சாப்பிடும்படிசெய்தது கன்மையான காரியம். உயிர்க்காபத்தான பதார்த்தம் சேர்ந்திருந்தால் காக்கை செத்துப்போகும். ஆகையினல் இது நல்ல ஏற்பாடு. நாம் சாப்பிடும் ஆகார விஷயங்களில் நாம் சிரத்தை ஜாஸ்தியாய் எடுத்துக்கொள்ளவேண்டும். அழுகிப் போன காய்கறிகள் சமைக்கக்கூடாது. தேகத்துக்கு ஒத்துக் கொள்ளாத காய்கறிகளை சமையல் செய்யக்கூடாது. புளியை

சிலபேர்கள் சேர்த்துக்கொள்வதில்லை. அப்படி சேர்க்காமல் சாப்பிட்டால் சாந்தமுண்டாகாது. மேலும் நம் தேசம் உஷ்ண மூள்ளதாகையால் இரத்தக்கொதிப்பைத் தணிக்கும். ஆகலால் நம்தேசத்து ஜனங்கள் புளிசேர்த்துக்கொள்வதே நல்லதென்று தோன்றுகிறது. சிலர் அறிவீனத்தினால் கல்ல பதார்த்தங்களே கெட்டதாகவும் கெட்ட பதார்த்தங்களே நல்லதாகவும் நினைக் கிறார்கள். கடவுள் படைத்த பூலோக பதார்த்தங்களில் கெட்டது நல்லது சேர்ந்ததானிருக்கிறது. ஆகையினால் அதற்குப் பரிகாரம் சேர்த்து சாப்பிடுவதே முறையாகும். சிலபதார்த்தங்களில் குணம் நல்லதாகவும், தூர்க்குணம் உபாயமாகவும், சிலதுகளில் தூர்க்குணம் ஜாஸ்தியும் நல்ல குணம் கம்மியாகவுமிருக்கும். இதுபாதி அதுபாதியாகவும் இருக்கும். நாம் தகுந்த பரிகாரத்துடன் சாப்பிடுவதே நல்லது. பிள்ளைகளுக்கும் சாப்பிடும் பதார்த்தங்களே நாம் முதலில் பார்த்துப் பிற்பாடு கொடுக்கவேண்டும். அவர்களும் அழுகின பழங்கள் முதலியவைகளே சாப்பிடக்கூடாது. இந்த விஷயத்தில் சாக்கிரதையாய் இருக்கவேண்டும். இதனுடன் இந்த வியாசத்தை சிறுத்துகிறேன்.

13-வது ஜாதிபேதம்.

சகோதரிகளே, "ஜாதி பேதகம் எத்தேசத்திலுமில்லை; நம்முடைய தேசத்தில்மட்டும் விதித்திருக்கிறார்கள்" என்று சிலர் ஜாதிபேதகம் அனுவசியமென்று சிலர் சொல்லுகிறார்கள். மேலும் சமபோஜனம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் தேசம் முன்னுக்கு வராதென்று பிடிவாதம் செய்கிறார்கள். ஆனால் உண்மை என்னவெனில், மேற்சொன்ன சுகாதாரங்களே சேர்ந்திருக்கும்பொருட்டே ஜாதிபேதகம் உண்டாக்கினார்கள் என்று அறியவேண்டும். இப்படியறியாமல் வீருதாவாக ஜாதிபேதகம் எற்படித்துவரானேன் என்றுசொல்லுவதில் பிரயோஜனமில்லை. மேல்நாடுகளிலும் அந்தஸ்தைப்

பொறுத்த ஜாதிபேதக மிருக்கிறதென்று உணரவேண்டும். மேல்நாடுகளில் விதித்திருக்கிற ஜாதிபேதகப்படி சம்மந்தமும் செய்துகொள்ளமாட்டார்கள். சமபந்திபோஜனமும் செய்ய மாட்டார்கள். இது யாவரும் அறிந்த விஷயம். ஜாதிபேதக மில்லாமல் இது என்னவென்று நினைக்கிறீர்கள்? நம்முடைய தேசங்களில் பெரிய அந்தஸ்துடையவர்களோக்கூட மேல்நாட் டார் விவாகம் செய்துகொள்ளமாட்டார்கள். இதற்குக் கார ணம் பலவிதமாயிருக்கிறபடியால் இங்கே குறிப்பிட்டுச்சொல்ல முடியாது.

நம்முடைய சாஸ்திரத்தில் ப்ரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்று நாலேவகுப்புத்தான் விதித்திருக்கிறது. சங் கரஜாதியென்றும் பஞ்சமர்களென்றும் கீழ் ஜாதிகள் பிரிக்கப் பட்டிருக்கின்றார்கள். வேறு ஜாதிபேதமில்லை யென்று தெரிந் துகொள்ளாமலிருப்பது சங்கடமாயிருக்கிறது. தெலுங்கர்க ளுக்குள் அநேக ஜாதியும் தமிழர்களுக்குள் அநேக ஜாதியும் சாஸ்திரத்தில் விதிக்கவில்லை. இப்படியே சூத்திரர்களிலும் பலஜாதி பிரிக்கப்படவில்லை. இச்சாதிகளெல்லாம் மத்திய காலத்தில் ஏற்பட்டனவே தவிர வேறில்லை. இந்தியாவில் ஜாதிபேதகம் அவசியமென்றும் பிராமணர்கள், சூத்திரர்கள் முதலிய வேறு ஜாதிகளிலுள்ள பிரிவுகளே ஒன்றுக்கொன்றமென் றும் நினைக்கிறேன்.

இப்பொழுது சகாதாரத்தை முன்னிட்டு ஏற்பட்டிருக் கிற ஜாதிபேதத்தைக்குறித்துச் சொல்லுகிறேன். எல்லோ ரும் சுத்தமாயும் சுயமாயும் இருக்க சாத்தியமில்லாததாலும் நம முன்னோர்கள் ஜாதியைப் பிரிக்க யோசித்திருக்கவேண்டும். மேலும் அந்தக்காலத்தில் இருந்த மனிதர்களெல்லோரும் வேதம் படிக்கவில்லை. வேதம்படிக்க அநேகருக்கு சாவகாச மிருந்தில்லை யென்றே சொல்லவேண்டும். தற்காலத்திலும்

கூட கிறிஸ்தவர்கள் எல்லாரும் வேதம் (Bible) படிக்க வேண்டுமென்று விதித்திருந்தும் பட்டாளத்தில் வேலைசெய்யும் சோல்ஜரொருவனே மேற்படி மதக்குரு ஒருவர், "நீ இயேசுகிறிஸ்துவைத் தெரிந்துகொண்டாயோ?" என்று கேட்டாராம். அதற்கு இவன் கிறிஸ்தவனுயிருந்தும் "இல்லையே, நான் தெரிந்துகொள்ளவில்லை. அவர் எந்தப் பட்டாளத்திற்குத் தலைவர்?" என்று பதில் சொன்னனும். ஆகையால் எந்த மதத்திலும் எல்லாரும் அந்த மத வேதத்தைப் படிக்கமுடியாதென்பது விளங்குகிறது. இப்படிப் படிக்காத சோம்பேறிகளே, நம் மூன்னோர்கள் சிலத்தில் பாடுபடவேண்டுமென்று விதித்தார்கள். அந்த சோம்பேறிகளெல்லாம் அசுத்தமாயிருக்கிறபடியால் அடிமை வேலைகள் செய்யும்படி ஏவப்பட்டார்கள். அந்த வம்சங்களில் பிறந்தவர்கள் சூத்திரர்களெனப் பெயர் பெற்றார்கள். வேதம் படித்தவர்கள் வேதியரென்றும், பிரமதேவனுல் சொல்லப்பட்ட வேதம் ஓதுவதனுல் பிராமணர்களென்றும் பெயர்பெற்றார்கள். இவர்கள் எக்காலத்திலும் புத்தியிலுயர்ந்தவர்களாயிருந்தார்கள். இவர்களுக்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டுமென்று ஒரு சாதி. இவர்கள் உலகமாளுபவர்கள் இதற்கடுத்த சாதியாகிய வைசிய சாதியிலுள்ளவர்கள் வியாபாரம் செய்தார்கள். சூத்திரர்கள் இவர்களுக்கு வேலைசெய்துவந்தார்கள். இவர்களில் சிலர் மனமொப்பி தோட்டிவேலை செய்கிறபடியால் குறவரென்றும், சிலர் செருப்பு தைப்பதினுல் கீழ் சாதி சக்கிலியரென்றும் பள்ளனென்றும் பறையனென்றும் பெயர் பெற்றார்கள். ஆகையால் அந்தந்தத் தொழிலுக்குறித்து ஜாதியைப்பிரித்தார்கள். இவர்கள் எப்படி ஒன்றாயிருக்கக்கூடும்? ஆதிகாலத்தில் பிரிக்கப்பட்ட ஜாதிகளிலுற்பத்தியடைந்த தாழ்ந்த ஜாதிப்பையன்கள் எவ்வளவு மன்றாய்க் கற்றிருந்தபோதிலும், 'க்ஷ' என்னும் அட்சரத்தையாவது, அல்லது அதைப்போல உச்சரிக்கக் கஷ்டமான எழுத்தை

யாவது உச்சரிக்க நேரிட்டால் அவ்வெழுத்து வாயில் நுழை யாமல் பரிதபிப்பார்கள். தற்காலத்தில் உயர்ந்த பரீட்சை கொடுத்த சூத்திரர்களில் சிலபெயர்கள் அழுத்தம் திருத்தமா ய்ப் பேசும்பொழுதுகூட பிராமணர்களைப்போல் எக்கேபேசு கிறார்கள்? பிராமணர்களில்கூட சிலபெயர்கள் சரியாய்ப் பேசுகிறதில்லே. இவர்களுடைய முன்னோர்கள் மத்தியகால த்தில் தான் படிக்க ஆரம்பித்திருப்பார்களென்று சொல்ல வேண்டும். உயர்ந்த ஜாதியென்று சொல்லும் பிராமணன் பள்ளர் பறையர் வீட்டில் எப்படி சாப்பிடமுடியும்? அவர்க ளுடைய அசுத்தத்தினால் சாப்பிட முடியாது.

பிராமணர்கள் வேதம் படித்ததனால் வேதியரென்றும் மறைந்திருக்கும் பொருளை அல்லது கடவுளை அறிகிறபடியால் மறையோர் என்றும், கடவுளை அந்தரங்கத்தில் பார்க்கிறபடி யால் பார்ப்பார் என்றும், ஆதிகாலத்தில் வேதங்களை விரிவாக ச்சொன்னதனாலும் பிறருக்குபதேசித்ததனாலும் ஆதிவருண ரென்றும் பெயர்பெற்றார்கள்.

ஜாதிவிட்டு வேறு ஜாதியில் விவாகம் செய்வது பொருந் தாத விஷயம். இப்படி ஜாதிவிட்டு ஜாதியில் விவாகம் செய்து கொண்ட பிள்ளைகளுக்கு 'அனுலோமன்' என்றும் 'பிரதி லோமன்' என்றும் பெயர். விவாக சம்மந்தம் சரிசமமாயிருக் கவேண்டுமென்றே விதித்திருக்கிறார்கள். ஆதலால் ஜாதி பேதகத்தை நம் முன்னோர் விதித்தது சரிதான். என் தற் காலத்தில் ஜாதி பேதகம் கூடாதென்று சொல்லுகிறார்களோ தெரியவில்லே. சிலர் ஜாதி பேதகமிருக்கும்வரை தேசம் முன்னுக்கு வராதென்கிறார்கள். தேசம் முன்னுக்கு வருவத ற்கும் ஜாதிபேதகமிருப்பதற்கும் என்ன சம்மந்தம்? சூத்திர ர்கள் பார்த்து நாம் சாப்பிட்ட உடனே தேசம் முன்னுக்கு வந் துவிடுமா? ஆதலால் சகோதரிகளே, சுகாதாரத்தை முன்

னிட்டும் அத்தஸ்தை முன்னிட்டும் நம்முடைய முன்னோர்கள் ஜாதியைப் பிரித்தார்களே தவிர வேறில்லை என்று நன்றாய் அறியவேண்டும். அசுத்தமான ஜாதியாகிய பள்ளன், பறைய னெல்லாம் சுகாதாரமில்லாததினால் மரணமடைகிறார்களா வென்று கேட்கக்கூடாது. எனினும் அவர்களுக்கு அது அசுத்தமென்று தோன்றுமல் மனதிற்கு ஒத்துப்போகும். எப்படியென்றால் பாஷாணத்தில் புழுத்தபுழு பாஷாணத்தின் கொடுமையினால் எப்படி சாகாதோ அப்படியே, அந்தக்குறவர் கள் மரணமடையமாட்டார்கள். ஆனால் இந்த ஜாதியாருக்கு சித்த சுத்தமும், விஞ்சித்து ஞானமும் இருக்கமாட்டாதென்றறி யவேண்டும். இவ்வளவு அசுத்தமான ஜாதியாரை எப்படிப்பக் தியில் வைத்துக்கொண்டு சாப்பிடுகிறது? அவர்களைக் கூடக் குப்போய்ச் சாமான் வாங்கிவரச்சொல்லவும் நம் மனது இசை யாது. நாம் உபயோகிக்கிற பாத்திரங்களை அவர்கள் தொட் டாலும் அசுத்தந்தான். இப்படி குப்பைகளை அள்ளி சாக்க டையை சுத்திசெய்யும் குறவர்களோடு எப்படி ஒன்றுபோருக்க முடியும்? ஆகையால் ஜாதிபேதகம் கூடாதென்று எத்தக் காரு ணத்தினாலும் சொல்லக்கூடாது. பேதகமில்லை யென்று எல்லாம் ஒன்றுப்போகும்படி செய்துகொண்டால் பிற்பாடு தலைகால் தெரியாமல் பகுத்தறிகிற விஷயம் சங்கடப்படும். மேலும் உயர்ந்த ஜாதியென்று சொல்லிக்கொள்ளும் பெரிய மனிதர்களெல்லோரும் விவாக சம்மந்தம் சரியாய் அகப்படா மல் கஷ்டப்படுவார்கள். ஆதலால் குதர்க்கம் பேசாமல் ஜாதி பேதகம் பிரித்தது சரியென்றே ஒப்புக்கொள்ளவேண்டும். மனதில் பச்சாதாபப்பட்டு கீழ் சாதிகளுக்கு ஒத்தாசை செய் யலாமே தவிர வேறில்லை. அவர்கள் கூலிகளை வேண்டுமா னால் உயர்த்தலாம். பஞ்சமர் பள்ளிக்கூடமென்று ஓர் பள்ளிக் கூடம் ஏற்படுத்தவேண்டும். அவர்களுக்காகத் தனியே இணை கள் வெட்டுவதும் சரிதான். ஜீவகாருண்யத்தை முன்னிட்டு அவர்களைப் பட்சமாய் நடத்தவேண்டும்.

ஐரோப்பியர்கள் நம்மில் மேலானவர்களென்ற சொல்லும் ஜாதியைக்கூட பந்தியில் வைத்துக்கொண்டு சமபோஜனம் செய்யமாட்டார்கள். ஆனல் வேலைக்காக, தாழ்ந்த ஜாதியார்களை வேலைக்காரர்களாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தேசத்தின் ஜாதி பேதகம் சூட்சுமமானது. அவர்களுடைய ஜாதி பேதகம் ஸ்தூலமானது. இதுதான் வித்தியாசம். நம்முடைய ஜாதி பேதகம் சித்த சுத்தத்தையும் தேக சுத்தத்தையும் பொறுத்தது. அவர்களுடையது தேகசுத்தத்தை மாத்திரம் பொறுத்தது, எவ்வளவு தாழ்ந்த ஜாதியானலும் மேலே சோப்புப்போட்டுத் தேய்த்து வெள்ளை வஸ்திரம் உடுத்தின உடனே தொட்டுக்கொள்ளுவார்கள். நாம் அப்படி செய்யமாட்டோம். ஒரே நாளையில் அவனுக்கு சித்த சுத்தம் வரமாட்டாது. சண்டாளன் என்றால் அவன் மனதில் அளவில்ல பாவம் கலந்திருக்கிறதென்ற நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஜனங்கள் எந்தக் குலத்திலும் ஜாதிகளிலுமிருந்து ஜனித்தார்களோ அந்தக் குலத்தாருடைய குணம் இலகுவில் அவர்களைவிட்டு நீங்காது. இவ்விஷயம் பெரும்பாலும் உண்மைதான் என்பது "ஜாதி அந்த புத்தி குலமந்த ஆசாரம்" என்ற ஒரு தெலுங்குப் பழமொழியாலும் தெரிவாம்.

தேகத்தின்மேல் அழுக்குப்பட்டால் தண்ணீர்க் கழுவிவிடலாம். மனதிற்குள் அழுக்குப்பட்டால் அது நம்மால் கழுவ முடியாது. அப்பொழுது பகவானிடத்தில் முறையிடவேண்டும். அவர் நம்மைப் பார்த்து என்ன சொல்வார், 'உனக்குத் தகுந்தபடி என் பக்தர்களைக்கொண்டு எல்லா சௌக்கியத்தையும் அனுபவிக்கும்படி உண்டாக்கியிருக்கிறேன். அதை மீறி செய்ததினல் இப்படி அனுபவிக்கிறாய்' என்ற இன்னம் நன்றாய் கடிப்பார். ஆதலால் நம் முன்னோர்களுடைய மார்க்கத்தை சாத்தியமானவரையில் பின்பற்றவேண்டும். வியாதிக்கு அழுக்கு எப்படி காரணமோ அப்படியே அக்ஞானத்திற்கும்

மூலகாரணம். சித்த சுத்தமில்லாதவர்களே வீட்டு வேலைக்கு வைத்துக்கொண்டால அக்ஞானந்தான் மூலகாரணமாயிருந்து நம்மைக் கெடுத்துப்போடும். பிசாசுக்கு அழுக்குப்பிடிக்கும். பகவானுக்கு சுத்தம் பிடிக்கும். இதெல்லாம் அறிந்ததான் நம் முன்னோர்கள் நன்றாய் ஆராய்ந்து ஜாதி பேதத்தை உண்டாக்கினார்கள். இதை அறியாமல் நாம் தூஷிக்கிறது தப்பான காரியம்.

மேலும் நம்முடைய நன்மையைத்தான் உத்தேசித்து இப்படி எழுதியிருக்கிறார்கள். ஆதலால் பிராம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரென்ற நாலு ஜாதி சாஸ்வதமாக உலகத்திலிருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் சுகாசாரம், சித்த சுத்தம், ஆயுள்விருத்தி முதலியதெல்லாம் விருத்தியாய்க்கொண்டேவரும் என்பதற்குச் சந்தேகமில்லை நம்முடைய தேசத்து சகோதரிகளே, பாலர்களே, அவசியம் ஜாதிபேதம் இருப்பது நல்லதென்றே நினையுங்கள். கூடுமானவரைக்கும் அசுத்தமான ஜாதிகளின் மேல் படாமலிருங்கள். திருவீழாகாலங்களில் சுவாமி தரிசனம் செய்யும்பொருட்டு ஆலயத்திற்குள் போக வேண்டுமென்று பல அசுத்தமான ஜனங்கள்மேல் ஊர்ந்து போகாமல் சுவாமி பல்லக்கில் வெளியில் வரும்பொழுது தரிசனம் செய்து ஆனந்தியுங்கள்! அல்லது கூட்டமெல்லாம் போன பிற்பாடாவது ஆலயதரிசனம் செய்யுங்கள். கடவுள் நமக்காக ஆலயத்தில் எப்போது இருக்கிறாரென்பதை அறியுங்கள். கூட்டமிருக்கும்பொழுது போனால் தான் புண்ணியமென்று நினையாதேயுங்கள். கூட்டத்திலுள்ள ஜனங்களுக்கு அதிக வியர்வை உண்டாகி ஒருவருடைய வியர்வை மற்றவர்களுடையைப் பாழாக்கி விடுமென்பதை அறியுங்கள். சுகாதாரத்தை நாடியாவது நான் சொல்லுவதைக் கவனியுங்கள். பாலர்களே, கோவிலுக்கு கூட்டத்திற் போய் ஸ்வாமி தரிசனம் செய்யவேண்டுமென்று பெற்றோரை இம்சிக்காமலிருங்கள். பெரும்பாலும் பகவான் கொடுத்த புத்தியைக்கொண்டு நம

க்கு நன்மைவரும்படியாய்ப் பாடுபடுங்கள். மனிதனுல் ஒரு வரையும் தூஷிக்கக்கூடாதே தவிர வெளிக்கு ஒருவர் பேரில ஒருவர் பட்டுக்கொண்டே இருக்கவேண்டுமென்பது ஜீவகாருண்யமல்ல. ஆதலால் ஜாதியையும் மதத்தையும் தூவேஷிக்கக்கூடாதென்று இப்பொழுது விளங்குகிறதல்லவா? மனதினுலும் புத்தியினுலும் பணத்தினுலும் கூடுமான வரையிலும் ஒருவருக் கொருவர் ஒத்தாசை செய்துகொள்ளவேண்டும். இதுதான் தெய்வ சம்மதம் படித்த சகோதரிகளே, இதில் குற்றங் கண்டு எதிர்க்கட்சி பேசாமலிருக்கும்படி நான் உங்களைக்கேட்டுக்கொள்கிறேன். தீய் சாதியை அடிமைகொள்ளும் படி சொல்லவில்லை யென்பதை நீங்கள் உணரவேண்டும். இத்துடன் இந்த வியாசத்தை நிறுத்துகிறேன்.

14-வது தேகாப்பியாசம்

பிரியமான சகோதரிகளே, நம்முடைய தேசத்தில் அநேகமாய் பணமுள்ளவர்களும் கனமுள்ளவர்களும் தேகபலம் குன்றி பலவீன முள்ளவர்களாயிருக்கிறார்களென்றே சொல்ல வேண்டும். எனென்றுல் வேலைசெய்தால் சரீரம் குறைந்து விடுமென்றபயத்தினுலோ, அல்லது கௌரவக் குறைச்சலென்ற யோசனைதானே, அது நமக்கு நன்றுய் விளங்கவில்லை. பலவீனமாயிருப்பதால் ஞாபக சக்திகுறைந்துபோகும். ஞாபகம் குறைவாயிருந்தால் அநேக வேலைகளுக்கும் கீர்த்திக்கும் இடையூறுண்டாகும் என்பதில் சந்தேகமில்லை. மேலும் தேகத்தினுல் வேலைசெய்யாமல் மனப்பயிற்சி மட்டும் செய்யக் கூடாது. மனப்பயிற்சி செய்தால் மூளை குறைந்துபோகும். பிற்பாடு பைத்தியரோகங்கள் சம்பலக்க எதுவாகும் என்பதையும் உணரவேண்டும். ஆதலால் நம்முடைய தேசத்திலும் மேல்நாடுகளிலும் தேகாப்பியாசத்தைக் குறித்துப் பலவிதம் எழுதியிருக்கிறார்கள். இந்த விஷயத்தில். பாலர்களுக்கு ஒரு மாதிரியாயும் பெண்களுக்கு ஒரு மாதிரியாயும் ஆண்

களுக்கு ஒரு மாதிரியாயும் ஆதிகாலத்திலிருந்து தேசாப்பி யாசம் வழக்கத்தில் வந்திருக்கிறது. அது இன்னர் எப்படித்தி பிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. பாலர்கள் விளையாட்டை ஆனந்தமாயெண்ணுவார்கள். ஆத லால் அவர்களுக்கு விளையாட்டுக்காக நம்முடையவர்கள் நேரம் குறிக்கவேண்டும். சில பெரியவர்கள் சிறுவர்களை சதா படித்துகொண்டிருக்கும்படித் தூண்டுவது வழக்கம். தங்களுடைய குமாரர்கள் படித்து வித்வானாக வேண்டும் என்ற எண்ணத்தினால் அவர்களை விளையாட விடுவதில்லை. இப்படிச்செய்வது மிகவும் பிசகான காரியம். ஏனென்றால் பாலியத்திலிருந்தே தேகப்பயிற்சி செய்து வந்தால் மனப் பயிற்சிக்கும்போதுமான இரத்தஓட்டம் கொடுத்துப் படித் ததை ஞாபகத்திலிருக்கும்படி செய்யும். இப்படி இல்லா மல் தேகாப்பியாசம் கெடுவென்று சும்மாபடித்துக்கொண் டிருந்தால் தேகத்திலுள்ள சூட்சுமத்துவங்களுக்கு இரத்த ஓட்டம் குறைந்து போகும்.

ஆதலால் பாலர்களை தேகாப்பியாசம் செய்யும்பொழுது நேரம் குறித்து, பிற்ப டி இடத்தையும் குறித்துக் கொடுக்க வேண்டும். இடம் குறிக்காமல் நேரத்தை மாத்திரம் குறித் தால் அபாயமான இடங்களில் விளையாடி உயிர்க்கு சேதம் விளைவித்துக் கொள்ளுவார்கள். இதற்குப் பலதிருஷ்டாந்த மிருக்கின்றது. என்ன வென்றால், நாட்டுப்புறங்களில் கிணற் றோரத்தில் பிள்ளைகள் விளையாடுவதை வீட்டிலுள்ளவர்கள் கவனிக்காமல் இருந்தார்கள். அப்பொழுது பிள்ளைகள் கிணற்றில் விழுந்து மாண்டு போனார்கள். ஆற்றில் வெள்ளம் பெருகி வரும்பொழுது நாட்டுப்புறத்துப் பிள்ளைகள் படித் துறையில் விளையாடி ஆற்றில் விழுந்த வெள்ளத்திற் கிரை யாவது யாவரும் அறிந்த விஷயமே. இன்னம் மோட்டை மாடிகளில் பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது

தடுமாறி மாடியிலிருந்து பிள்ளைகள் விழுந்து சேதமடைந்தும் உண்டு. இப்படி சேதமானவுடனே பிள்ளைகளுக்கு விளையாட்டுக்காக இடம் குறித்துக்கொடுக்காமல் பெற்றோர்கள் பிள்ளைகளை கண்டிக்கும் விதம் வேடிக்கையாயிருக்கும். எப்படி என்றால் இனிமேல் நீ விளையாடப் போகாதே, போனால் அந்தப்பிள்ளைக்கு வந்த கேடு உனக்கும் வரும், ஆதலால் நீ உன் பாட்டில் தனிப்பட இருந்து புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிரு என்றும் விளையாடப் போனால் தெரியும் சேதி, கண்ணில் கிராம்பை அரைத்துப் போடுவேன் பார், பத்திரம் என்றும் கண்டிப்பார்கள். அந்தப் பிள்ளை தேகாப்பியாசத்தை விருத்தி செய்துகொள்ள இடமில்லாமல் சும்மா படித்துக்கொண்டிருந்து வியாதிக்கிரையாகப் போகும். ஆதலால் சகோதரிகளே, தங்கள் அருமைக் குமாரர்களையும், குமாரத்திகளையும் அவர்களுடைய இஷ்டப்படி விளையாட ஆபத்தில்லாத ஒரு இடம் குறித்துக் கொடுப்பதே நல்லதென்று நினைக்கிறேன். நிலாமுற்றம் அல்லது சுத்தம் செய்த தோட்டம் இப்படிப்பட்ட இடங்களில் பிள்ளைகளை அவர்களிஷ்டப்படி விளையாட விடுவதே நலம்.

சில டவுன்களில் வண்டிகள் ஜாஸ்தியாய்ப் போகும் தெருக்களில் பிள்ளைகளை விளையாடச்சொல்வதும் பிள்ளைகள் வண்டி சந்தில் விழுந்து காயப்படுவதும் உயிர் துறப்பதும் உண்டு. ஆதலால் தெருக்களில் பிள்ளைகளை விளையாட விடுவதும் பிசகு. ஆதலால் தகுந்த இடம் கொடுத்தும் தேசத்து மாதிரியாகவே விளையாடச்சொல்லவேண்டும். மேல்நாட்டு மாதிரி தேகாப்பியாசம் அவ்வளவு உத்தமமல்ல என்பதை யறியவேண்டும். பாலர்கள் விளையாடுவதில் பல நன்மைகளுண்டு. சும்மா உட்கார்ந்து விளையாடுவதும் ஓடி விளையாடுவதும் உண்டு. பள்ளிக்கூடத்தில் லீவ் கொடுக்கிற நாட்களில் கட்டம் அல்லது சதுரங்கம், பல்லாங்குழி இந்த

விளையாட்டுகளெல்லாம் புத்தி கூர்மையாக்கும் பொருட்டு உண்டாக்கியிருக்கிறார்கள். சாப்பிட்டவுடன் கொஞ்சம் இளைப்பாறி பிற்பாடு வெயில் ஜாஸ்தியிருக்கும்பொழுது வேடிக்கையாய்க் கணக்குகள் வரவும் புத்தி கூர்மையாயுமிருக்கிற மேற்சொன்ன விளையாட்டுகளை விளையாடவேண்டும். பிற்பாடு சாயங்கால நேரத்தில் தேகாப்பியாசத்தை ஒட்டி தோட்டங்களில் ஓடிவிளையாடும் ஆட்டத்தை ஆடும்படி செய்யவேண்டும். சுமார் ஆறரைமணிமட்டும் விளையாடி கொஞ்சம் இளைப்பாறினவுடன் இராப் போஜனம் கொடித்து, பிற்பாடு கொஞ்சம் பாடம் படிக்கச் சொல்லி நித்திரைக் கனுப்பி விட வேண்டும். ஓடி விளையாடும் நிறுசு, பந்து, பாண்டி, கோலி, உங்களிலெல்லாம் ஒரு கள்ளி யென்னும் விளையாட்டு, பந்ய ஒட்டம் முதலியன பாலர்கள் குறித்த நேரத்தில் விளையாட வேண்டும். முற்காலத்தில் நாட்டுப்புறத்தோர் கல்ல தேகாப்பியாசத்தினால் அதிக பல முள்ளவர்களா யிருந்தார்கள். ஆனால் படிப்பில்லை தேகாப்பியாசம், படிப்பு இவ்விரண்டும் பாலர்களுக்கு அவசியம்.

இவ்விரண்டில் ஒன்றுகுறைந்தாலும் பிரயோஜன மில்லை. பெண்களும் கன்னியர்க் குறைந்த பட்சம் 13 வயதாவது தோட்டங்களில் விளையாடவேண்டும். கண்ணு மூச்சு, நிலாப் பூச்சு, இருட்டுப் பூச்சு, காட்டு கண்ணு மூச்சு, கல் வேண்டுமா மண் வேண்டுமா, சுதித்துப் பாடல் இவைகளெல்லாம் பெண்கள் விளையாடலாம். 13 வயதிற்கு மேற்பட்டால் சுதித்து விளையாடுவது பெண்களுக் கழகல்ல வீட்டு வேலை செய்ய வேண்டும். வேலைக்காரனில்லா விட்டால் சாந்த மாகவே செய்ய வேண்டும். அதற்காகக் கோபமாயெரிந்து விழாமல் இருக்கவேண்டும். ஜல மிறைக்கும்படி ஏற் பட்டால் உபாய மாக அத்த வேலை செய்யலாம். சமையல் முதலிய வேலைக்கு ஆளிருந்தால் தன் புருஷனுக்கு வேண்டியதைச் செய்ய வேண்டும். கனவான்கள் வீட்டு ஸ்திரீகளுக்கு அடிக்கடி

வியாதி வருவது வழக்கம் தன்னுடைய வீட்டு வேலையைத் தான் செய்தால் அதிகப்பிரயாசமாக மாட்டாது. வேலைக்காரி களையும் வேலைக்காரர் களையும் வைத்து வேலை வாங்குவதா யிருந்தாலும் சாயங்கால வேளைகளில் கல்ல தோட்டங்களில் நடந்து உலாவலாம். அது தேகத்திற்கு ஆரோக்கியமா யிருக்கும். மேலும் தன்னருமையான பிள்ளைகளுக்குத் தன் கையினல் ஸ்நானம் செய்விக்கவும், தன் கையினல் ஆகா ரங்கள் கொடுக்கவும் சாவகாசம் தேடிக்கொள்ள வேண்டும் எந்த விதத்திலும் தேகாப்பியாசத்தை விருத்தி செய்து கொள்ள வேண்டியது அவசியம். நம் தேசத்தில் முற் காலத்திலிருந்து கனவான் வீட்டுப் பெண்கள் சிகிரம் பெரும் பாலும் தேர்ப்பம் தரிப்ப தில்லை யென்பது யாவரும் அறிந்த விஷயம்.

ஜோயிர்கள் யுக்தியினலோ அல்லது வேறெக்கக் காரணத்தினலோ தேகாப்பியாசத்திற்குக் காரணமான பரி காரத்தைச் சொல்லுவார்கள். என்னவென்றல் காலையில் அர சமரப்பிரதட்சணம் செய்யச்சொல்லுவார்கள். மேலும் ஆலயப் பிரதட்சணம் செய்யச் சொல்லுவார்கள். விரதங்களிருக்கச் சொல்லுவார்கள். அதில் பட்டினி யிருக்கவேண்டிவரும். அது ஒரு கன்மைதான் சதா உட்கார்ந்துகொண்டே சாப்பிடுவதால் வாயு ஜாஸ்தியாகும். அந்த வாயு ஜீரணிக்கும் பொருட்டே விரதங்களிருக்கச் சொல்லுவது. நித்தியதாதரை. செய்யும் பொழுது பல கஷ்டங்கள் நேரிடும். அப்பொழுது வியர்க்கும் படியான பல வேலைகளைச் செய்யவேண்டும். சிலபேர்களுக்கு விரதம் வெகு கண்டிப்பாய்ச் சொல்லுவார்கள். தரையில் சாதத்தை வைத்துக்கொண்டு கையினல் ஆகாரம் சாப்பிடா மல் குனிந்துகொண்டு வாயினலேயே மிருகங்கள் சாப்பிடுவது போல் சாப்பிடும்படி விரதங்களிருக்கின்றன. அப்படி கன்முய் க்குனிந்து கிமிரும்பொழுது தேகாப்பியாசமல்லாமல் அதை

என்னவென்று சொல்லுவது? மிகுந்த ஏழைப்பெண்கள்கூட ஏன் கொப்பந்தரிக்கவில்லை என்ற கேள்விவரக்கூடும். ஏழைப் பெண்களுக்கு தேக சௌக்கியம் போதாததினாலும் அவர்கள் மிதமிஞ்சி வேலை செய்வதனால் தேகம் தளர்ந்துபோய் விடுவதனாலும் அதிக கூட்டினால் கொப்பந் தரிப்பதில்லை. ஆதலால் தேகாப்பியாச முறை சரியான காலங்களில் சரியானபடி செய்யவேண்டும். வயிறு நிறைந்த உடனே வேலைகள் செய்யக் கூடாது. சாப்பிட்டவுடனே வேலைசெய்ய முடியாமல் போவது தெய்வசித்தம். அது சரியான முறை. நரம்புகளெல்லாம் சாப்பிட்ட ஆகாரத்தை ஜீரணித்து வேலைசெய்யப் போய் விடும். அப்பொழுது நாம் அந்த நரம்புகளை வேறொரு வேலை செய்ய எவக்கூடாது. அப்படிச் செய்வதால் வியாதிவரும்.

ஆதலால் நாம் நம் முன்னோர்களைப்போல யோகாப்பியாசம் செய்யாமல் போனாலும் தேகாப்பியாசத்தைக் குறித்துக் கொஞ்சம் கவலை யெடுத்துக்கொள்ளவேண்டியதவசியம். மிதமிஞ்சின அப்பியாசம் கெடுதல். அதனால் தேகம் அதிசமாய்த் தளர்ந்து நிர்தனமாய்விடும். தேகத்திலுள்ள தொழில் கருவிகள் கெட்டுப்போய் வியாதி வந்து பலவிதமான மருந்துகள் சாப்பிட்டும் பிரயோசனமில்லாமல் மாண்டுபோய் விடுவார்கள். அகத்தியம் தேகாப்பியாச முறை ஒவ்வொருவரும் எற்படுத்திக் கொள்வதே சரி. பாலர்களுக்கும் பெண்களுக்கும் தேகாப்பியாசம் முக்கியமான விஷயம் என்று சந்தேகமன்னியில் நன்றாய்த் தெரிந்துகொண்டோம். அதையினால் நம் தேசத்து உத்தியோகஸ்தர்கள்கூட தேகாப்பியாசம் செய்வது பொருத்தமான விஷயம் என்பதற்குச் சந்தேகமில்லை.

தற்காலத்தில் அநேக உத்தியோகஸ்தர்கள் கொஞ்சம்கூட தேகாப்பியாசம் இல்லாமலிருப்பதனால் பலவீனர்களாகவிருக்கிறார்கள். சமீபமான இடங்களுக்குப் போகவேண்டுமானால் வண்டி வைத்துக்கொள்ளுகிறார்கள். மழை, வெயிலில்லாத

நேரத்தில்கூட வண்டி வைத்துக்கொள்ளுகிறார்கள். அப்படிச் செய்வது தேகத்திற்குக் கெடுதலென்றே நினைக்கவேண்டும். அரைமைல் தூரம் அல்லது ஒருமைல் தூரம் நடக்கவேண்டும். தன் வீட்டிற்குச் சாதகமான வேறே ஏதாவது வேலை செய்யலாம். சில கீழ்த்தரமான உத்தியோகஸ்தர்கள் தன் பெண்சாதி கஷ்டப்படும்பொழுது ஏதாவது ஒத்தாசை செய்யாமலிருப்பது பிசகென்று அறியாமலிருப்பது சரியல்ல. உயர்ந்த உத்தியோகஸ்தர்களாலும் சரி, கீழ்தர உத்தியோகஸ்தர்களாலும் சரி பெருமை பாராட்டிக்கொண்டு தேகம் எங்கே தேய்ந்துவிடுமோ என்று நினைக்கக்கூடாது. சிலர் மேல்நாட்டு மாதிரி தேகாப்பியாசம் செய்கின்றனர். அது நம் தேசத்திற்குப் பொருத்தமில்லை யென்றே அநேகருடைய கொள்கை (சான்டோடம் பெல்ஸ்) என்னும் கருவியை வரவழைக்கப் பணச் செலவுண்டாகும். மேலும் அந்த தேகாப் பியாசம் செய்யும் நேரத்தில் தன் பெண்சாதி பிள்ளைகளுக்கு சாதகமாக ஏதாவது ஒத்தாசைசெய்வது கௌரவக்குறைச்சலல்ல. என்ன ஒத்தாசை யென்றால், (சமையல்வேலை செய்யச்சொன்னதாக நினைக்கவேண்டாம்); தன் பெண்சாதி வேலைசெய்யும் பொழுது பிள்ளை அழுதால், அதை சமாதானப்படுத்தலாம். ஆண் பிள்ளைகளுக்கு ஸ்நானம் செய்விக்கலாம். தனக்கு ஸ்நானத்திற்கு ஜலம் வேண்டுமானால் சமையல் வேலைசெய்து கொண்டிருக்கும் பாரியை தொந்தரவு செய்யாமல் அடுப்பின் மேலிருக்கும் ஜலத்தை இறக்கிவைத்துக்கொள்ளலாம்.

இந்த வேலைகளெல்லாம் எப்பொழுதும் செய்யாமல் போனாலும் சமயோசிதத்தை அனுசரித்துக் கூடுமானவரையில் ஒத்தாசை செய்யவேண்டும். ஆபீஸுக்குப் போகும்பொழுதும் பள்ளிக்கூடத்திற்குப் போகும்பொழுதும் வண்டியில்லாமல் நடந்துபோவதே உத்தமம். எனென்றால் பணச்செலவுமில்லை தேகாப்பியாசமும் விருத்தியடையும். சிலசமயம் கடைக்குச்

சேவகனை அழைத்துக்கொண்டுபோய் சாமான்களை வாங்கிவர லாம். இதில் பண நஷ்டமில்லை. தினந்தோறும் சாயங்கால மாவது காலை வேளையிலாவது ஆற்றங்கரை அல்லது குளத்தங் கரை தல்ல தோட்டம் இவ்விடங்களில் உலாவலாம். சமுத் திரக்கரையோரமிருந்தால் அநேக சிநேகிதர்களோடு உலாவப் போகலாம். இதெல்லாம் தேகாப்பியாசம் செய்துகொள்ள சௌகரியமான விஷயம். மிராசுதாராயிருந்தால் மிலங்களை ஆள்வைத்துப் பார்ப்பதைவிட நன்றாய் தேகப்பிரயாசைப் பட்டுத் தானே பார்த்துக்கொள்ளுவதுமேல். நாற்காலி நகர்த்த ஆள் வேண்டுமென்றால் எப்படி வியாதியில்லாமலிருக்கும். தற்காலத்தில் வைத்தியர்கள் நன்றாய்ப் பிழைக்கிறார்கள் என்ப தற்குச் சந்தேகமில்லை. ஒரு நாள் ஒரு குரு தன் சிஷ்யனைப் பார்த்துப் பாதரட்சை யிருக்கிறவிடம் தெரிவிக்கலை எடுத்துக் கொடுவென்றார். அதற்குச் சிஷ்யன் பாதரட்சையை நட்சத்திர மண்டலம் வரைக்கும் பார்த்தேன் தென்படவில்லையென்றான். குரு நட்சத்திர மண்டலத்திலா பாதரட்சை யிருக்குமென்றார். சிஷ்யன் தங்களைவிட நான் சும்பனல்ல அதிகமாக சாப்பிட் டேன் ஆகையால் குனிய முடியவில்லை. அதனால் நட்சத்திர மண்டலத்தைப் பார்த்தேன், என்றான். இப்படிச் சாப்பாட்டி ராமனாயிருந்தால் எப்படி தேகாப்பியாசம் செய்ய முடியும். இத்தனை சோம்பேறிகளாயிருந்தால் வியாதி வராமல் என்ன செய்யும். தற்காலத்தில் சிலர் மேற்சொன்ன விஷயம்போல் உலாவப் போகிறார்களென்று கேள்விப்படுகிறோமாதலால் எல் லாருமே தேகாப்பியாசத்தில் கவலையெடுத்துக்கொள்ளவேண் டும். சகோதரிகளே, காட்டுப்புறத்களிலுள்ள வயதானவர்க ளுக்கு நன்றாய் ஞாபகசக்தி யிருக்கிறதைக் கவனித்தால் அவர் கள் தேகாப்பியாசமென்று சொல்லிக்கூட கேள்விப்பட்டிருக் கமாட்டார்கள். இருந்தாலும் அதிக வேலைகள் செய்து ஞாபக

சக்தியை அடைந்திருக்கிறார்கள். இங்கிலீஷ்காரர்கள் வேலை செய்தால் கௌரவக் குறைச்சலென்றெண்ண மாட்டார்கள்.

ஆகலால் சாத்தியமானவரைக்கும் பாலர்களையும் பெண்களையும் வயதானவர்களையும் தேகாப்பியாசம் செய்யும்படித் தூண்டவேண்டும். காரும் கூடுமானவரைக்கும் வீட்டுவேலைக்கு இடைஞ்சலில்லாமல் சாதகமாகவே தேகாப்பியாசம் செய்யவேண்டும். தனவான் வீட்டுப்பெண்கள் அவசியம் தேகாப்பியாசத்தைக் கவனிக்கவேண்டும். சாயங்கால வேளையில் ஆலயங்களுக்குப் போய் பிரதட்சணங்கள் செய்துவருவதுகூட தேகாப்பியாசமாதலால் ஆலயங்களுக்குப் போவது கல்லது. அது இகபரம் இரண்டிற்கும் சாதகமாயிருக்கும். மேலும் இக பர விஷயங்களை உத்தேசித்தும் குடும்பத்திற்கு லாபமான விஷயங்களை உத்தேசித்தும் வேலைகள் செய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் சதா வேலைக்காரர்களைக் கூப்பிடாமல் முக்கியமான விஷயங்களை மட்டும் செய்யச் சொல்லிவிட்டுப் பாக்கி வேலைகளை நாமே செய்துகொள்ளலாம். வேஷ்டிகளைக்கூட கையில் எடுத்துக்கொடுக்கும்படி வீட்டுப் பெண்களை வேலை வாங்குகிறார்கள். ஆகையினால் பாலர்கள் பெண்கள் விருத்தர்கள் முதலியவர்கள் குடும்பத்திலுள்ள சமயோசிதத்தைத் தெரிந்துகொண்டு பரஸ்பரம் பட்சமாய் ஒருவர்க்கொருவர் ஒத்தாசைசெய்யவேண்டும். லாபத்தை உத்தேசித்தும் செய்யலாம். சகோதரிகளே, தேகாப்பியாசம் அவசியமென்பதை மறக்காமல் ஞாபகத்தில் வைக்கவேண்டும். சாத்தியமானவரையில் வியாதி வராமல் தடுத்துக்கொள்ளவேண்டுமென்பதே எனது கோரிக்கை. டானிக் டானிக் என்று பலமருந்துகள் தற்காலத்தில் வெளிவருகிறபடியால் மருந்தை சாப்பிட்டு தேகத்தை உஷ்ணம்செய்துகொள்ளாமல் தேகாப்பியாசத்தை செய்தே போதுமான சூட்டை உண்டாக்கிக்கொள்ளவேண்டும். கண்ட மருந்துகளை சாப்பிடக்கூடாது. சாப்பிட்டு உஷ்ணத்தை வருவி

த்துக் கொள்ளாமலிருப்பதே மேலான காரியம் என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். மேலும் நம்முடைய தேசம் உஷ்ணமானதால் மேல்நாட்டு மருந்துகளே உபயோகிக்கக் கூடாது. அவ்விடங்களில் குளிர்ச்சி ஜாஸ்தியாயிருப்பதால் அங்கே உஷ்ணமான மருந்துகள் செய்து குணத்தைக்கண்டு பிற்பாடு அனுப்புகிறார்கள். அதி நம்முடைய தேசத்துக்கு அநேகமாய் ஒத்துக் கொள்ளாதென்றே நினைக்கவேண்டும். சகோதரிகளே நம்முடைய தேசத்திற்கும், தேகத்திற்கும், ஒத்ததான மருந்துகள் நாமே செய்துகொள்ளும்படி வைத்திய விஷயங்கள்கூட தெரிந்துகொள்ளவேண்டும். அப்படித் தெரிந்துகொண்டால் சுகமாயிருக்கிறதுந் தவிர பணச்செலவில்லாமல் சுலபமாயுமிருக்கும். இதில் சொன்ன சமாசாரங்கள் ஆதியிலிருந்தே நடந்துகொண்டுவந்த சமாசாரமாயிருந்தாலும், சீர்திருத்தத்தை உத்தேசித்து, நம் சகோதரிகளுக்கு நன்றாய் விளங்கும்படி சொன்னோம். நம் தேசத்துப் பள்ளிக்கூட பெண்களும் சகோதரிகளும் நன்றாய்ப் படித்துத் தெரிந்துகொள்வார்களென்றே நம்புகிறேன். இதனுடன் இந்த வியாசத்தை முடித்துகிறேன். கடவுள் நம்மேல் கிருபைவைத்து இதை ஆசீர்வதிக்கும்படி வணக்கமாய்ப் பிரார்த்திப்போம்.

முடிவுரை.

எனக்கரிய ஆரிய சகோதரிகளே! எனது புல்லறிவைக்கொண்டு ஏதோ நான் அறிந்ததும் என் அனுபவத்தில் கண்டதும் மனச்சாக்ஷிக்கும் பொருந்தியதுமான சிற்சில விஷயங்களை வியாச ரூபமாக எழுதி ஓர் புத்தகமாக அச்சிட்ட எனது நோக்கத்தை இப்புத்தகத்தின் முகவுரையை வாசித்தவர்கள் அறிந்திருப்பார்களாதலால், நாம் யாவரும் இட்சித்தத்தினால் ஒன்றுகூடி நம் தேசம் முன்னுக்கு வரவும் நாகரீகம் அடையவும் சகல நல்லொழுக்கத்திலும் கடவுள் பக்தியிலும் சிறந்து விளங்கவும் வேண்டும் என்பதே என் கருத்து. இது நிறைவேறும் பொருட்டு கடவுள் நம்முடைய மனதை நல்ல வழிகளில் செல்லும்படி தூண்டிவிட்டு நம்மை ரட்சிப்பாராக.

M.